3/03

# வைதேகியார்

பண்டிதை - S. கிருஷ்ணவேணி அம்மாள்

(*Head Tamil Pandit, Lady Willingdon Training High School*

இயற்றியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

1934

தீப்புரிமை] [விலை அணா

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

3/03

ஸ்ரீ :

# முகவுரை

நம் பாரத நாட்டில் கல்வி, கற்பு, அறிவு, வீரம், புலமை, அரசியல் முதலியவற்றில் சிறந்து விளங்கிய பெண்மணிகள் பலராவர். நம் நாட்டைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவற்றில் பெண்மக்களின் பெருந்தன்மையும் ஒன்று. அவர்களுடைய நலங்கள் சங்க நூல்களிலும், புராணங்களிலும் ஆங்காங்கு மிளிர்கின்றன. அவற்றை நன்காராய்ந்து நம் சிறுவர் சிறுமிகள் பயன் துய்ப் பதற்கேற்ற இனிய தமிழ் நடையில் வெளியிடுதல் இக்காலத் திற்கு இன்றியமையாததாகும். அவர்களில் ஒருவர் வைதேகியார்.

இராமாயணத்திற்கு உயிர் நாடி போல்வார் இவரேயென் பது ஆசாரியர்கள் கருத்து. இராமாயணமாகிய ஓவியம், ஜானகியாராகிய திருமுக மண்டலத்தைக் கொண்டே ஒளிரு கிறது எனக் கூறல் மிகையாகாது.

. இராமாயணம், வசனம்,நாடகம், காவியம் என்னும் பல உருவங்களைத் தாங்கி நம் நாட்டில் உலவி வருவது யாவரும் அறிந்ததே. ஆயினும், இந்நூலுக்கு இருதயமாகத் திகழும் வைதேகியாரின் பண்பு தனியே இதுகாறும் வெளிவந்திலது.

தெய்வப் பெண்களும் சிரமேல் வைத்துப் போற்றும் மாது சிரோமணியாராகிய அன்னையாரின் அறிவு, ஆராய்ச்சி, சொல் வன்மை, பொறுமை, பற்றற்ற தன்மை, கற்பு, வீரம் முதலியவற்றை உலகம் அறிதல் இன்றியமையாததன்றோ ? ஆதலின், இராமாயணத்தில் கம்பர் வாக்கால் மாணிக்கக்

கொடிபோன்று ஒளிரும் வைதேகியாரைக்குறித்து என் புன் சொற்களால் சில பகர முன் வந்துள்ளேன்.

இதற்குப் போதிய கல்வியும் ஆராய்ச்சியும் அற்ற அடியாள் இதில் நுழைந்ததற்குக் காரணம் பண்டைப் பெண் மக்களின்மாட்டுள்ள மதிப்பும், தற்காலச் சிறுவர் சிறுமிகளின்பாலுள்ள அன்புமேயன்றிப் பிறிதன்று. ஆதலின், சான்றோர் இதில் விரவிக் கிடக்கும் குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இந்நூலை வரைதற்குத் தோன்றாத் துணையாயிருந்து அருள் புரிந்த இறைவனையும், ஞானமூட்டிய ஆசாரியர்களையும் மன மொழி மெய்களால் வழுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

S. கிருஷ்ணவேணி

ஸ்ரீ :

# வைதேகியார்

" உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."    —கம்பர்

## 1. பாரத நாட்டின் பெருமை

உலகின்கண் மிக்க தொன்மையுற்றதும், மாண்புடையதுமான நம் பாரத நாட்டின் சிறப்பை யாவரும் அறிவர். ஒரு நாடு அறிவிலும், நாகரிகத்திலும், கடவுளன்பிலும் முதிர்ச்சி பெற்று விளங்குதற்கேற்ற பண்புகள் யாவும் இந்நாட்டிலுள்ளன. வானோங்கிய இமயத்தையும், புண்ணிய நதியாகிய கங்கையையும் பெற்ற நாடு இதுவே. மக்களைப் போற்றி வளர்க்கும் மாசற்ற உலோகங்களும், நவமணிகளும் இங்குக் கிடைக்கின்றன. மிக்க உழைப்பை எதிர் நோக்காத உன்னத விளைபொருள்கள் இந்நாட்டிற்கே உரியனவாகும். சிறந்த செங்கோன்மையும், செப்பமுடைய வாணிபமும் இந்நாட்டிலுண்டு. கலையறிவு, மறைத்தெளிவு, சமய உண்மை, கடவுள்பக்தி, ஆன்ம ஆராய்ச்சி, யோகசக்தி முதலியவற்றை உய்த்துணர்தலில் இந்நாட்டுப் பெரியாரே ஒப்பற்றவர். இந்நாட்டில் நீதியை நிறுவிய ஸ்ரீ ராமபிரான், கண்ணபிரான் முதலியோர் காட்சியளித்தனர். தமக்கென வாழாப் பாரி, குமணன் முதலிய வள்ளல்கள் தோன்றிய நாடு ஈதன்றோ? ஞானிகளாகிய சுகர், வசிஷ்டர், அன்பே உருவெனத்

திகழ்ந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள், வீரத்தில் மிக்க கரிகாலன், புலமையிற் சிறந்த கம்பர், உலக நடையை உகந்தளித்த திருவள்ளுவர் முதலிய பல்லோரைத் தாங்கி நின்ற பெருந்தன்மை இந்நாட்டிற்கே உண்டு.

கற்பணிகளாகிய தமயந்தி, சாவித்திரி முதலியோர் இங்குத் தோன்றினர். வீரத் தாய் கண்ணகி, அறச் செல்வி மணிமேகலை, கலையறிவு நிரம்பிய கோதையார், காரைக்காலம்மையார், தர்க்கமுணர்ந்த மைத்திரேயி இன்னோர் இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்தனர். 'அறிவு அரிவையர்க்கும் உரித்து,' என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென வெளிப்படுத்திய அவ்வையார் முதலிய பெண்மணிகளை ஈன்று உவந்ததும் இப்பாரத நாடே.

இந்நாட்டில் ஓவியச் சிறப்புக்கள் அளிக்கும் இன்பம் கூறுந் தகைமையதன்று. சிற்றின்பத்தைக் கொண்டு பேரின்பத்தை விளக்கிக் காட்டும் அகப்பொருள் நூல்களை இயற்றும் ஞானத்தை இந்நாட்டு அறிஞரே பெற்றனர். இன்னும் இவணுள்ள இயல்புகளை இயம்பப் புகின், கலை ஞானிகளின் கருத்தும் களைப்புறுவதாகும்.

இத்துணைச் சிறப்புக்கள் பலவும் வாய்க்கப்பெற்ற இந்நாட்டிற்குப் பாரத நாடு என்பது சிறப்புப் பெயராகும். எங்ஙனமெனில், துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் ஏற்பட்ட ஒத்த அன்பின் வாயிலாகத் தோன்றிய தோன்றலாம் பரதன் என்னும் பெரியான் நடாத்திய செங்கோன்மையினாலேயே இந்நாட்டிற்கு இப்பெயரமைந்தது. ஆதலால், நம் மன்னர்களின் அரச நீதி எத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE.
MYLAPORE. MADRAS-4

## 2. ஜனகரின் பெருமை

இன்னோரன்ன நவிலவொண்ணுப் பல பெருமிதங்கள் இயற்கையாகவே வாய்க்கப்பெற்ற பாரதநாட்டின்கண் மிதிலை என்னும் ஒரு நகரம் உண்டு. அது விதேக தேசத்தின் முக்கிய பட்டணம்; அது நீர்வளம் நிலவளமாகிய இம்மைச் செல்வத்தையும், ஆத்தும தத்துவ விசாரணையாகிய மறுமைச் செல்வத்தையும் பெற்று விளங்கிற்று.

மிதிலையை ஜனகர் என்னும் ஒரு தத்துவ ஞானியார் ஆண்டுவந்தார். அவர் செங்கோன்மையின் சிறப்பைப் புகழாதார் ஒருவருமிலர். குடிகள் நன்னெறியில் நடப்பதற்கு அவர் நல்லொழுக்கமே வழிகாட்டியா யிருந்தது. சாம பேத தான தண்டம் என்னும் நான்கு உபாயங்களையும் அவர் காலத்திற்கேற்பக் கையாண்டு வந்தனர். குடிகளைத் தம் மக்கள் போலக் கருதுங் கருணை அவரிடம் பொருந்தி இருந்தது. குடிகளுக்கு அவரிடம் பயமும் பக்தியுமிருந்தன. அவர்களுக்கு நேரும் இன்ப துன்பங்களைத் தமவாகவே ஜனகர் நினைத்தனர். குடிகள் ஜனகர் மாட்டுக் காட்டிய அன்பிற்கு அளவின்று.

இவ்வாறு ஜனகர் தம் குடிகளை அன்புடன் ஆள்வதிலும்,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு" —திருவள்ளுவர்

என்பதற்கேற்பத் தம் ஐம்புலன்களையும் வரம்பு கடவாமல் தம் வசப்படுத்துவதிலும் வல்லுநராயிருந்தனர்.

நிலையற்றவற்றை நிலையென உணரும் புல்லறிவு ஜனகரிடம் அணுகிலது. அவரை முற்றும் துறந்த முழு ஞானியார் என்றியம்பல் மிகையாகாது. ஆனால், அவர் அரசகாரியங்களில்

தம் கடமை இன்னதென்பதையுணராமல் அசட்டை செய் தனரோ, அன்றி மனைவி மக்களை விட்டுக் காட்டுக்கேகினரோ என்னில், அங்ஙனஞ் செய்தாரல்லர்; அரச செல்வமும், குடிகளும், சுற்றத்தாருமே அழியா இன்பத்தைத் தரும் வீட்டின்பேறு எனக் கருதும் ஒருவர் எங்ஙனம் அக்காரியங் களை மன ஊன்றுதலுடனும் ஊக்கத்துடனும் இயற்றி வருவரோ, அதினும் பதின்மடங்கு அவ்விஷயங்களில் கருத்துச் செலுத்திவந்தனர். தவிர, ஆன்ம தத்துவ விசாரணையிலும் அவர் தம் பெருங்காலத்தைக் கழித்து வந்தது போற்றத் தக்கதாகும். 'மன்னர்கள் அரச விஷயங்களில் தவிர வேறொன் றிலும் ஒரு விநாடியேனும் செலவிட முடியாது,' எனக்கூறும் பலருக்கும் அவர் செய்கை அறிவு புகட்டியதென்னலாம். அவர் மனம் மாசற்ற பளிங்கெனக் களங்கமற்று அமைதிக் குத் தானே இடமெனத் திகழ்ந்தது. அவர் அரசியல் ஆன்மார்த்தம் ஆகிய இரண்டில் எவ்வமயம் எதிற்செல்லு கின்றனரோ, அவ்வமயம் மற்றொன்றை அறவே மறந்து விடுவர். அலையற்ற நீர்நிலைபோன்று அவர் சிந்தை சலனமற் றிருந்தது.

இங்ஙனம் அவர் இல்லறம் துறவறம் என்னும் இரண் டிலுங் கை கண்ட கண்ணியராக இருந்தனர். அது போலி ஞானிகள் சிலருக்கு அழுக்காற்றை விளைவித்தது. ஜனகரை நீரிலும் நிலத்திலும் வதியும் தவளைக்கு ஒருவாறு ஒப்பிட லாம். அதனாலேயே அவருக்கு ராஜ ரிஷி என்னும் ஒரு பெயரும் வழங்கலாயிற்று. அறிவிற் சிறந்த பெரியோர்க ளிடம் தத்துவத்தைக் கேட்குங்கால், அவர் மனம் வேறொன் றையும் ஏற்க இடம் பெறுவதில்லை. ஆறறிவுடைய மக்க ளுக்கு இல்லறம் துறவறமாகிய இரண்டிலுமுள்ள பொறுப்

புக்கள் இன்ன இன்ன என்பதைக் குறிப்பதற்கு அவர் ஓர் இலக்கியமாக விளங்கினர். 'ஆறறிவுயிரே மக்கட் சுட்டே,' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் பொருள் அவர் மாட்டு நன்கு பொலிந்தது.

இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த ஜனகர், தம் குடிகள் மாட்டுக் கெழுமிய அன்புடையராய், காட்சிக்கெளியராய், கடுஞ்சொல்லொழித்தாராய் அரசு நடாத்தி வந்தனர். ஈதன்றியும், அவர் நாடோறும் தம்மாசிரியரிடஞ் சென்று ஆன்மா பயன் துய்ப்பதற்கேற்ற தத்துவங்களைச் செவியேற்று வருதல் வழக்கம். இம்முறையில் அவர் வாழ்க்கை மிக்க நேர்மையுடன் நடைபெற்றது. ஆனால், பன்னாட்கள் வரையும் அவர் மக்கட் பேற்றையடையும் புண்ணியம் வாய்க்கப்பெற்றிலர். எனினும், தத்துவ ஞானியராகிய அவரை இத்துயர் சிறிதும் வருத்திலது. இது நிற்க.

## 3. வைதேகியாரின் முற்பிறப்பு

ஒருகால் இலங்கைக்கதிபதியாகிய இராவணன் உலகத்தைச் சுற்றிவந்து இமய மலையை அடைதல் நேர்ந்தது. அவ்வமயம் தேவமகளிரைப் போன்ற வனப்பு வாய்ந்த ஒரு பெண்மணி அவண் கடுந்தவமியற்றிக்கொண்டு இருத்தலை அவன் கண்ணுற்றான். ஒப்பற்ற அழகு வாய்ந்த அவ்விளமங்கையாரின் தவச் செய்கை அவனுக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது. சிறிது நேரம் அவன் ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றான்; பின்பு அவ்விளமங்கையாரின் அருகிற் சென்று, அவர் யாரென்றும், அவர் தவஞ் செய்வதற்குக் காரணம் யாதென்றும் இனிய சொற்களால் வினவினன்.

அவ்வினிய சொற்களைச் செவியேற்ற அம்மங்கையார் இராவணனுக்கு விதிப்படி அதிதி பூஜை செய்து, பின் வரு

மாறு பகர்வாராயினர் : "யான் பிரகஸ்பதியின் புதல்வரும், அறிவில் தம் தந்தையாருக்கு ஒப்பானவருமாகிய குசத்துவஜர் என்பவரின் குமாரி. அவர் வேதத்தை ஓதிக்கொண்டிருந்தபோது, அவ்வேத வாக்கே எனத் தற்செயலாய் அவரது வாக்கினின்றும் யான் தோன்றினேன். ஆதலால், அப்பெரியார் எனக்கு வேதவதி எனப் பெயரிட்டனர். யான் மங்கைப்பருவம் அடைந்ததும், தேவர், கந்தருவர், யக்ஷர், ராக்ஷசர், அசுரர், பன்னகர் முதலிய பலரும் என்னைத் தத்தம் இல்லக் கிழத்தியாக வரிக்கக் கருதி, என் தந்தையாரிடம் வந்தனர். ஆனால், லீலாவிபூதி, நித்திய விபூதி இரண்டிற்கும் அதிபராகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவே தமக்கு மருகராக வேண்டும் என்பது என் தந்தையார் விருப்பம். ஆதலின், மற்ற எவர்க்கும் என்னை மணஞ் செய்விக்க அவர் இசைந்திலர். அக்காரணமாக என் தந்தையார் மாட்டு அழுக்காறு கொண்ட தம்பு என்னும் ஓர் அசுரத் தலைவன், ஒரு நாள் இரவில் வந்து என் தந்தையாரைக் கொலைபுரிந்தான். அதை ஆற்றாது என் அன்னையாரும் அவருடன் தீக்குளித்தனர். ஆகவே, பெரியாராகிய என் தந்தையாரின் விருப்பத்தின்படி யான் ஸ்ரீமந்நாராயணரை அடைதற்பொருட்டு இத்தவத்தை மேற்கொண்டேன். அவரே எனக்கு நாயகராவர். அவரை அன்றி வேறொருவரையும் கனவிலும் என் மனம் கருதாது. அன்றியும், மூன்று உலகங்களிலும் நடைபெறும் விஷயங்களை நன்கு உணரும் வன்மையை இத்தவப்பேற்றினால் யான் பெற்றுள்ளேன். அதிகம் கூறி என்? உன் இயல்புகளையும், எண்ணத்தையும் யான் நன்கு உணர்வேன். ஆதலின், நீ இப்போதே இவணிருந்து நீங்குக."

கொடிய செய்கையையுடைய இராவணன், அவ்வம்மையாரின் கருத்திற்கு மாறாக அவர் அருகிலே நெருங்கி,

"கல்யாணி, உத்தம லக்ஷணங்கள் யாவும் ஒருங்கே திரண்டு வந்தாலென அழகு பெற்றுப் பொலியும் பெண்கள் நாயகமே, உன் தக்க பருவத்தையும் மிக்க அழகையும் இத்தவத்திற் போக்குவது பயனற்றதாகும். உன்னை அடைவதற்கேற்ற கம்பீரமும், வீரமும், தவமும் அந்த மகாவிஷ்ணுவுக்குண்டோ? எவ்விஷயத்தில் அவன் எனக்கு இணையாவான்? யோகத்திலும், வன்மையிலும், செல்வத்திலும் சிறந்த என்னை வரிப்பதே உனக்குத் தகுதி," எனப் பலபடப் பிதற்றினன.

இவ்வார்த்தைகள் அப்பெண் மணிக்குப் பெரிதும் வெறுப்பைத் தந்தன; அவர் நெஞ்சம் துடிதுடித்தது. ஆதலின், அவர் இராவணனைப்பார்த்து, "அறிவீனனாகிய உன்னைத் தவிர நல்லறிவு வாய்ந்த எவனேனும் விஷ்ணுவை இங்ஙனம் இகழ்வனே? இஃது உனக்கு அறிவுடைமை அன்று. உன்னிடத்தை நாடிச் செல்," என்றனர். ஆனால், அவர் அறிவுரைகளுள் ஒன்றையும் மனங்கொள்ளாது தன் அரக்க வன்மையையே பெரிதெனக் கருதிய அந்த நிசாசரன், தன் கரத்தினால் அவரது கூந்தலைப் பற்றி வலித்தனன்.

இக்கொடிய செய்கை அம்மங்கையாரின் மனத்தைத் துன்புறுத்தியது. உடனே அவர் தம் கரத்தைக் கத்தியென உபயோகித்துத் தம் குழலை இரண்டாகத் துணித்து, அவனிடமிருந்து மீண்டனர். அவர் மறித்தும் அவனை நோக்கி, "இப்போதே யான் உன்னைச் சபிப்பேன். ஆயினும், நீசனாகிய உன்னால் என் தவத்திற்கு அழிவு உண்டாகுமே என என் மனம் அஞ்சுகின்றது. அற்பனாகிய உன்னால் தீண்டப்பட்ட இச்சரீரத்தை இனி யான் பேணேன். யான் செய்த நற்செய்கை கிஞ்சித்தேனும் உளதாயின், யான் மறுபடியும்

பூமிதேவிக்குத் திருக்குமாரியாகத் தோன்றி உன்னை அழிப்பேன், இதுவே சத்தியம்,'' எனக்கூறி, அங்கு ஓங்கி எரிந்து கொண்டிருந்த தீயில் விழுந்து மூழ்கினர். வானம் மலர் மழை சொரிந்தது. பகை தொலைந்ததெனத் தேவர் உவகை பூத்தனர். உலகம் சீர் பெற்றதெனத் தரும தேவதை மகிழ்ந்தது.

## 4. வைதேகியாரின் தோற்றம்

திருமகளாரின் அமிசமெனப் பெரியோர் கூறும் அவ்வம்மையாரே, ஜனகர் மகவில்லாக் குறையைப் போக்க அவர் யாக சாலையில் ஒரு நாள் சிறு மகவாகி வீற்றிருந்தனர். கலப்பை கொண்டு யாக சாலையை உழச் சென்ற தூய ஜனகர் அவ்வம்மையாரைக் கண்டு மிக்க ஆர்வத்துடன் எடுத்து, மார்புற அணைத்து, உச்சி மோந்து, முத்தமிட்டு, இன்பக் கடலில் ஆழ்ந்தனர். அம்மகளாரின் தேக ஒளி பூமி தேவியே மேற்கிளம்பினளெனக் கூறுமாறு கண்டவர் கண்களைக் கூசச் செய்தது. அதைக் கண்டு ஜனகர் அடைந்த ஆனந்தத்திற்கோர் அளவில்லை. அவ்வம்மையார் கேவலம் உலகக் குழவி அன்று என்பதை ஜனகர் நன்கு உணர்ந்தனர். அவ்வம்மையாரின் தேக இலக்கணங்கள் அவர் மனத்தைக் கவர்ந்தன. அவர் ஆன்ம சொரூப இலக்கணத்தைத் தெரிய உணர்ந்த தத்துவ ஞானியாரல்லரோ! ஆதலின், அம்மகளாரின் தூய ஆன்ம ஒளி முகத்தில் தேங்குவதைக் கண்டு அவர் நெஞ்சம் புளகித்தது. "இக்குழவி திருமகளோ! கலை மகளோ! மண்மகளோ!" என அவர் ஐயுற்றனர்.

இல் வாழ்க்கையைப் பயன்பெறச் செய்தற்கு இன்றி யமையாததாகிய மக்கட் பேற்றைப் பெறுமலிருத்தல் இல் லறத்தோர்க்குப் பெருங்குறை என்பது யாவரும் அறிந் ததே. இல்லறத்தைத் தக்க முறையுடன் மேற்கொண் டொழுகும் ஞானிகளுக்கும் மகவில்லாக் குறையைத் தாங் கல் கூடாததாகும். ஆனல், அக்குறை ஜனகரைத் துன் புறுத்தவில்லையாயினும், தெய்வ அருளால் கிடைத்த குழவி யைப் பார்த்தவுடன் அவர் மனம் அன்பினுல் பிணிக்கப்பட் டது. 'கடந்த ஞானிகளும் கடப்பரோ மக்கட்மேற் காதல்!' மற்றவரைப்போன்று அம்மகவின் தேக வனப்பு முதலிய மேல் தோற்றத்தில் மாத்திரம் ஞானியாராகிய அவர் மயங்கி விடவில்லை. அம்மகவின் முகச்சாயலில் தோன்றிய ஞான ஒளி அவர் மனத்தை வசீகரித்தது. அவர் அஃது இறைவ ஞல் தமக்கு அளிக்கப்பட்ட பெரும்பேறென நினைத்தார். ஒருவர் தாமே விரும்பிப் பெறும் ஒன்றைக்காட்டிலும், கட வுள் அருளால் பெறும் ஒன்று மிகச் சிறந்ததன்ருே? அதி னும், அது மிக்க மேன்மையுற்றதும், அறிவுடையோரால் போற்றத் தக்கதுமாயின், அதைப் பெரும்பேறென்ருது வேறென் சொல்வது?

“பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.” —திருவள்ளுவர்

ஆகவே, ஞானத்திற் சிறந்த ஜனகர், சீதா என்னும் கலப் பையை உபயோகித்தபோது தோன்றிய அம்மகவிற்குச் சீதை எனப் பிள்ளைத் திருநாமஞ் சூட்டி, உவகையுடன் வளர்த்து வந்தனர். இன்னும் விதேக நாட்டில் தோன்றிய மையின் வைதேகி என்றும், மிதிலை மன்னர் மகளாராதலின்

மைதிலி என்றும், ஜனகர் திருக்குமாரியாராதலின் ஜானகி என்றும் பல திருநாமங்கள் அவருக்கு வழங்கி வரலாயின.

ஜனகரும் அவர் இல்லக் கிழத்தியாரும் இக்காலத்துப் பெற்றோர் சிலரைப் போன்று குழந்தை சீதையின் உடலை வளர்க்க உணவையூட்டியதோடு தம் கடமை முடிந்துவிட்டதாக எண்ணிலர். அதனுடன் அன்பையும் அறிவையும் கலந்தூட்டி ஆன்மாவையும் வளர்ப்பதில் அவர் கண்ணுங் கருத்தும் ஊன்றி நின்றன.

தம் பிள்ளைகள் மாக்களாகாமல் மக்கள் ஆவதற்குப் பெற்றோரே பொறுப்பாளராவர். இக்காலத்தில் தாய்மார் தம் மக்களின் பொறுப்புக்கள் யாவையும் வேலைக்காரரிடமே ஒப்புவிக்கின்றனர்; அவ்வாறு ஒப்புவித்தல் தமக்குப் பெருமையும் வேலையொழிவும் ஆம் என நினைக்கின்றனர். இத்தகைத் தாய்மார்களைப் போன்று தத்துவ ஞானியாராகிய ஜனகரின் வாழ்க்கைத் துணைவியார் குறுகிய எண்ணமுடையவரல்லர். சீதையாரைக் கண்டெடுத்த பின், ஜனகருக்கு மற்றுமொரு பெண் மகவு பிறந்தது. அக்குழவிக்கு மாண்டவி என்னும் திருநாமஞ் சூட்டி, இருவரையும் மிக்க சிறப்புடன் பெற்றோர் வளர்த்து வந்தனர். அப்போது பச்சைப் பசுங்குழவிகளாக இருக்கும் அவர்களே, பின்னர்த் தங்கள் குலத்தை விளக்கும் குரு மணிகளாகப் போகின்றவர்கள் என்பதை அத்தம்பதிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அக்குழவிகளின் பிற்கால வாழ்க்கை உலகிற்குப் பெரிதும் பயனளிக்க வேண்டுமென்பது அப்பெற்றோரின் உண்மை நோக்கம். அதற்கேற்ப அவர்கள் தங்கள் மக்களை நாடோறும் தக்க நெறியில் பயில்வித்தார்கள். அறிவிற் சிறந்த பெற்றோரிடத்தில் வளர்ந்து வரும் மக்கள் நல்வழியில் திகழ்வதற்கு ஐயம் உளதோ?

## 5. வைதேகியாரின் மங்கைப் பருவம்

இங்ஙனம் தக்க முறையிற் பாராட்டிச் சீராட்டி வளர்க்கப்பெற்ற நம் அன்னையார், தம் பிள்ளைப் பருவங்களைக் கடந்து, வளர்மதியென வளர்ந்தனர். பகீரதன் முயற்சியினால் கங்கை நில உலகிற்கு வந்த பின் எங்ஙனம் மற்ற நதிகளின் மகிமை குறைந்துவிட்டதோ, அங்ஙனமே ஜானகியார் தோன்றிய பிறகு மற்றத் தேவமாதர்களின் பெருமை குறைந்தது என்னுமாறு அவர் அழகிலும் ஒழுக்கத்திலும் சிறந்து திகழ்ந்தனர். 'தாயைப்போலும் சேய்,' என்னும் பழமொழி ஒன்று வழங்குகின்றதன்றோ? அதற்கு ஏற்பப் பூமியினிடமாகத் தோன்றிய அவர் பொறுமையில் நில மகளுக்கு ஒப்பாய் விளங்கினர். மலரின் மணம் போன்று அவர் தூய எண்ணங்களும், நுண்ணிய அறிவும் நாடோறும் வளர்ந்தன. உடலொளியுடன் ஞான ஒளியும் அவர் மாட்டுத் திகழ்ந்தது. இவ்வாறு கண்டோர் மகிழ வளர்ந்து வந்த அம்மையாருக்கு மங்கைப் பருவம் அணுகிற்று. அப்பருவத்தை அவர், பூக்கொய்தல், நீர் விளையாடல் முதலிய பல விளையாட்டுக்களில் இனிதே கழித்தனர்.

'குல வித்தை கல்லாமலே பாதி வரும்,' என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே, தாம் வளர்ந்து வந்த குடும்பத்தின் பெருந்தன்மையும், உயர்ந்த நோக்கும், அற்ப விஷயங்களில் நுழையா மனத்திட்பமும் அவரிடம் பொருந்தி விளங்கின. தந்தையறிவு மகளறிவன்றோ? இம்முறையில் ஜானகியார், ஜனகரின் நற்குணங்கள் யாவற்றையும் ஒருங்கு கவர்ந்துகொண்ட நிழலென மிளிர்ந்தனர். பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும்,

THE KUPPUSWAMY SASTRI

அம்மையாரிடம் அடிமை பூண்டனள். அவர் மூதறிவாளரிடம் மிக்க பணிவுடன் ஒழுகி வந்தனர். அவர் தாம் பெற்றோரிடங் காட்டிய பக்திக்கு எல்லையில்லை ; தம் தோழிகளிடம் செழுமிய அன்பு பாராட்டினர். அந்நியரிடமும், சுற்றத்தாரிடமும் அவர் பேசுங்கால், இன்சொல்லிற்கு அவரே இருப்பிடமெனக் கூறலாம். அவர் எளியோர்க்கு எளியராய் விளங்கினர் ; தம்மினுந் தாழ்ந்தோரிடம் பழகுங்கால், 'கீழோராயினுந் தாழவுரை,' என்னும் அவ்வையார் வாக்கிற்கு ஓர் இலக்கியமாக அமைந்தனர் ; தாம் உலகிற்றோன்றிய காரணத்தையும், தாம் செய்ய வேண்டிய கடமைகளையும் நன்கு உணர்ந்திருந்தனர். ஆதலால், அவைகளுக்கேற்ப நடப்பதிலேயே அவர் கண்ணும் கருத்தும் சென்றன.

மக்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கொண்டே கடவுளால் உலகில் தோற்றுவிக்கப்படுகின்றனர். அது முற்றுப்பெற்ற பின் ஒரு விநாடியேனும், அவர் இவண் இரார். இது நம் சாஸ்திரத்தின் தத்துவமாகும். ஆனால், பல பேர் தம் பொறுப்புக்களையும் இயல்புகளையும் உணராது தம் காலத்தைக் கொன்னே கழித்துப் பயனற்றவராகின்றனர். ஸ்ரீமந்நாராயணனையே மணக்க வேண்டுமெனக் கடுந் தவமியற்றி, அத்தவக் குறையை நிறைவுபடுத்த வந்த நம் அன்னையார் அங்ஙனம் தம் கடமையை உணராதிருப்பரோ ? தவமும் தவமுடையார்க்கன்றோ கை கூடும் ? ஆகவே, இப்போதும் ஓர் உத்தமப் புருஷனையே மணக்கவேண்டுமெனும் எண்ணம் என்றும் அவரைத் தூண்டிக்கொண்டே இருந்

இத்தகைய பெருந்தன்மையோடு வளர்ந்து வரும் தம் புதல்வியாரைக் காணுந்தோறும் ஜனகர் ஏதோ ஓர் ஆழ்ந்த

சிந்தனையில் சிக்குண்டவர் போன்று காணப்படுவர். பல பற்றுக்களையும் விட்ட உத்தம ஞானியாராகிய ஜனகருக்கும் தம் அருமைப் புதல்வியாரின் பிற்கால வாழ்க்கையைச் சீர்மைப் படுத்தவேண்டுமென்னும் கவலை நீங்கிலது. ஆதலின், அவ் விஷயத்தை அவர் தாமே தனித்து யோசித்தலும், தம் மந்திரிகள் முதலிய பெரியோர்களுடன் ஆராய்தலும் செய்து வந்தனர்.

நம் பிராட்டியாரின் உடல் வனப்பும், குணச் சிறப்பும் எங்கும் பரந்தன. ஆதலால், அன்னையாரை மணக்க ஜனகரிடம் வந்த மன்னர் எண்ணிலர். அரச அவையில் மணப் பேச்சும், காவலர் வரவும் நாளுக்குநாள் விஞ்சின. அது ஜனகருக்குப் பெருந்தொல்லையாகவே இருந்தது. ஆகவே, 'இதற்கு ஏதேனும் தக்க ஓர் உபாயம் தேடவேண்டும்,' என அவர் தீர்மானித்தனர். தம் அவையிலுள்ள மூதறிவாளரிடம் அதை இயம்பி அவர்களையும் தம்மகளாரின் திருமணத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்குமாறு ஏற்பாடு செய்தனர். இது நிற்க.

ஒருகால் தட்சன் மகளாகிய சதி என்பாள் சிவபிரானை மணக்க வேண்டி அப்பெருமானையே நோக்கித் தவமியற்றினள். அவள் கருத்தின்படியே சிவபிரான் வந்து அவ்வம்மையை மணந்தனன். அங்ஙனம் மணந்தவன் சின்னாட்கள் அவளை விட்டு மறைந்திருக்க நேர்ந்தது. பின்பு சிவபிரான் அவண் போந்து தட்சன் அறியாமலே அவளை மயக்கித் தன் இருப்பிடங் கொண்டு போயினன். அதையுணர்ந்த தட்சன் மிக வருந்தித் தன் மகளைக் காணக் கைலாயத்திற்குச் சென்றபோது சிவபிரான் தன் கணங்களைக்கொண்டு அவனை அவமானப்படுத்தினன். அதனை அவன் மகளாகிய தாட்சா

யணியும் கவனிக்கவில்லை. அதனால், பெருஞ்சினமடைந்த தக்கன் தான் இயற்றிய வேள்விக்குத் தன் மகளாகிய பார்வதியையும் சிவபிரானையும் அழைக்கவில்லை.

இவ்விஷயத்தை நாரதரால் அறிந்த தாட்சாயணியாகிய சதி, சிவபிரானிடம் அரிதில் விடைபெற்றுத் தன் தந்தையின் யாகத்திற்குச் சென்றனள். ஆனால், தக்கன் உமா தேவியை வரவேற்கவேயில்லை. அவ்வவமானத்தைப் பொறாத சிவபிரான் வீரபத்திரக் கடவுளை உண்டாக்கி, ஆங்கு அனுப்பி யாகத்திற்கு வந்திருந்த தேவர்களையும் மற்றையோரையும் நிலை குலைந்தோடும் வண்ணம் செய்வித்தனன். பிறகே சிவபிரானுக்கு ஆறுதல் உண்டாயிற்று. அப்போர்ச் சமயத்தில் வைத்திருந்த வில்லைச் சிவபிரான் பின்பும் தாங்கி இருக்கக் கண்ட தேவர்கள் நடுங்கி அஞ்சினார்கள். ஆதலால், அவ்வில்லைச் சிவபிரான், ஜனகராஜன் குலத்தோன்றலாகிய ஒரு மன்னனிடம் வைத்துப் போயினன். அவ்வில் குலமுறையாக வந்து ஜனகருக்கு உரித்தாயிற்று.

அது சிவபிரான் வில்லாதலின், அதை எடுத்து வளைப்பவர்கள் மிக்க வன்மை பெற்றவர்களாக இருத்தல் வேண்டுமன்றோ? ஆதலின், அவ்வில்லை எடுத்து நாணேற்றுபவர் எவரோ, அவருக்கே சீதையை மணஞ்செய்து கொடுப்பதெனமந்திரி முதலியோர் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். அஃதே அறிவுடையோர் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அது முதல் இராவணன் முதலிய பல மன்னரும் அவண் வந்து, வில்லை நாணேற்ற முயன்றும் முடியாமையின், தோற்று வெட்கித் தலை குனிந்து செல்லலாயினர். இங்ஙனம் பல நாட்கள் சென்றன.

# 6. ஸ்ரீராமபிரானும் பிராட்டியாரும் நோக்கினால் சந்தித்தல்

ஒருகால் கௌசிக முனிவர் தசரதரிடம் வந்து, தம் வேள்வியைக் காத்தற்பொருட்டு ஸ்ரீராமபிரானைத் தம்முடன் அனுப்புமாறு கேட்டனர். ஆகவே, சக்கரவர்த்தியாரின் அருமை மக்களாகிய இராமரும் இலக்குமணனும் தம் தந்தையாரிடம் பிரியா விடை கொண்டு விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்தனர்.

அவ்வமயம் சிறிதும் கருணையின்றிப் பல்லுயிர்களையும் வதைத்துக்கொண்டிருந்த தாடகையை ஸ்ரீராமர் அடித்து
னர். இமைகள் கண்களைக் காப்பதுபோன்று, சகோதரர் இருவரும் முனிவர் வேள்வியை மிக்க கருத்துடன் காத்தனர். இராகவருடைய அம்பு அவ்வேள்வியை அழிக்க வந்த மாரீசன் முதலிய அரக்கர்களை முதுகு காட்டியோடச் செய்தது. சுபாகு அவர் வாளுக்கிரையானான். அவரது தெய்வத் தன்மை வாய்ந்த திருவடி மகிமையினால் கல்லுருப் பெற்றிருந்த அகலிகை பெண்ணுருவைப் பெற்றனள். இம்முறையில் சக்கரவர்த்தியாரின் திருமகனால் ஆகவேண்டிய இன்றியமையாத காரியங்கள் பல முடிந்தன. ஆனால், இன்னும் இரண்டொன்று மிகுதியாக இருந்தன : அவைகளில் முதன்மையானது வில்லிறுத்துப் பிராட்டியாரை மணப்பதாகும். முனிவர் ஸ்ரீராமபிரானைத் தசரதரிடமிருந்து அழைத்து வந்ததன் காரணங்கள் பலவற்றில் இதுவே தலை

அவ்விரு சகோதரரும் முனிவரைப் பின் தொடர்ந்து மிதிலை நகரின் ராஜ வீதியில் நடக்கலாயினர். அந்நகரக்

காட்சி அவர்கள் கண்களையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்தது. வீதி, நீட்சியும் விசாலமும் பெற்றுத் தூய்மையுற்றிருந்தது. இருமருங்கும் பளிங்கு மண்டபங்களைப் போன்ற மாளிகைகள் வெண்சுதையினால் தீட்டப்பட்டிருந்தன. அவைகளில் மக்களுக்கு மகிழ்வையூட்டும் அநேக சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அத்தெரு, சிறு இரைச்சலுமின்றி அமைதியுற்றிருந்தது. வண்டி முதலியன செல்வதற்குத் தனி வழி இருந்தமையின், பாதையில் நடப்பவர் யாதொரு துன்பமுமின்றிச் செல்வாராயினர். ஒவ்வொரு வீட்டின் முன் புறத்திலுமிருந்த வாழை, கமுகு, பூங்கொடிகள் முதலியன அம்மாளிகைகளைப் பெரிதும் அழகுபடுத்தின. அவ்வில்லங்களின் முன் கதவுகள் பொன்னாலாய சித்திரங்களினால் ஒளிர்ந்தன ; முன் கூடங்கள் அநேக அழகிய பொருள்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாளிகையின் முன் சுவரிலும் தலைவரின் பேர் பொறிக்கப்பட்டிருந்தது. அண்ணாந்து பார்த்தாலன்றி அம்மாளிகைகளின் முழுப்பாகத்தையும் காண முடியாவளவு அவைகள் உயர்ந்திருந்தன. அவைகளின்மேல் நாட்டப்பட்ட வெண்துகிற் கொடிகள் வானளாவி விளங்கின. அவைகள் மேகக் கூட்டங்களினால் நனைவதும், அங்குண்டாகும் அகிற் புகையினால் உலர்வதுமாக இருந்தன. அவைகள் வருவோரைக் குதுகுலத்துடன் வரவேற்பவை போல அசைந்தன. பொன், முத்து, இரத்தினம், யானைத் தந்தங்கள் முதலியவற்றைக் குவியல் குவியலாகக் குவித்து விற்கும் ஆவணத் தெருக்களின் வழியே அவர்கள் செல்லல் நேர்ந்தது. மகளிர் கந்துகம் (பந்து) விளையாடுமிடங்களையும், மலர் கொய்யும் பூஞ்சோலைகளையும், மக்கள் வாட்பயிற்சி செய்யும் இடங்களையும் அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்ணுற்றார்கள்.

சிறிது வழி நடந்தவுடன் ஜனகர் அரண்மனை காணப் பட்டது. அதன் கம்பீரமும், அழகும், காவலும் சொல்லி லடங்குந் தகைமையுடையனவல்ல. மற்ற மாளிகைகளினும் அது வேறுபட்டதும், தலைமையுற்றதுமென்பதை அதன் தோற்றமே நன்கு விளக்கியது. பின்பு அவர்கள் கன்னி மாடத்தை அணுகினார்கள். அக்கன்னி மாடத்தின் அமைப் பும், சிறப்பும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. அம்மாடத் தின் நிலா முற்றத்தில் பூங்கொம்பைப் போன்ற பெண் மணி கள் பலர் குழுமி விளையாடிக்கொண்டிருந்தனர். அவ்விளை யாட்டொலி, காகுத்தர் செவிகளில் நுழைந்து, அவர் கண்களை அங்கு இழுத்தது. உடனே அவர் அம்மாடத்தின்மேல் தம் நோக்கைச் செலுத்தினார். ஆனால், அவர் அவ்வீதியை அடையும்போது கன்னி மாடத்தையும், ஆங்குறையும் பெண் களையும் குறித்து ஒரு சிறிதும் நினைத்தவரல்லர். அவர் அத் துணை விஷயங்களில் மனஞ் செலுத்தும் இயல்பு வாய்ந்தவரு மல்லர். அங்ஙனமிருந்தும், அவர் பார்வை அவ்விடம் சென் றது தெய்வச் செயலேயாகும். இது நிற்க.

வீரமும் கொடுமையும் வாய்ந்த இராவணனால் சிறையி லிடப்பட்ட குற்றமற்ற தேவ மகளிர் பல்லோரையும் சிறை மீட்கவே வந்து தோன்றிய பிராட்டியார், நலத்தில் ஒப்புயர் வற்ற தோழிகளுடன் அக்கன்னி மாடத்தில் உலாவிக்கொண் டிருந்தனர். என்றுமில்லாத ஓர் இன்பம் அன்று அவர் மனத்தை ஊக்கியது; இடக்கண் துடித்தது; முகம் ஆநந்தத் தினால் பொலிந்தது. அவர் தோழிகளுடன் மிக உல்லாச மாய்ப் பேசத் தலைப்பட்டனர். எந்நாளுமில்லாத ஒரு புதிய உணர்ச்சி தமக்குத் தோன்றுவதாக அவர் கருதினர். ஒரு சிறந்த அநுபவத்தில் தம் மனஞ் செல்வதாக அவருக்கு ஓர்

எண்ணம் தோன்றிற்று. அவ்வமயத்தில் திடீரென அவர் விழிகள் வீதியை நோக்கின. அம்மையாரும் சாலையைப் பார்க்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் பார்த்தவரல்லர். காகுத்தர் மாடியை நோக்கியதும், மைதிலியார் சாலையை நோக்கியதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. இம்முறையில் கட்டமைந்த வில்லைத் தாங்கிய ஆடவரிற் சிறந்த ஸ்ரீராமபிரானார் நோக்குக் கற்பணியாகிய சீதா பிராட்டியாரின்மேற் பாய்ந்தது. அன்னையார் பார்வையும் காகுத்தர் மாட்டுத் தோய்ந்தது. இருவர் நோக்கும் ஒன்றோடொன்று கலந்து குலாவின. இங்ஙனம் இருவரும், நோக்கெனும் பாசத் தாற் கட்டுண்டனர். ஒருவர் மனத்தை மற்றொருவர் மனம் ஈர்த்ததனால், இராமர் மனத்தில் ஜானகியார் மனமும், ஜானகியார் மனத்தில் இராமர் மனமும் மாறிப் புக்கன.

அவ்விருவரும் தத்தம் எண்ணங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்ள இயலாத நிலைமையிலிருப்பினும், அவர்தம் கண்கள் விஷயங்களைப் பேசித் தீர்மானித்துக் கொண்டன. இதற்கு,

> "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
> ளென்ன பயனு மில." —திருவள்ளுவர்

என்னும் பொய்யா மொழியே தக்க சான்றாகும்.

இதை முனிவரும் தம் தம்பியும் எங்கு உணர்ந்துவிடுவரோ என்னும் அச்சம் காகுத்தரைக் கலக்கியது. ஆதலின், சீதா பிராட்டியாரிடம் பதிந்த மனத்தைத் தம் வசப்படுத்த அவர் பெரிதும் முயன்றார். ஆயினும், அம்முயற்சி பயனற்றதாயிற்று. இம்முறையில் அவர் உடல் மாத்திரம் முனிவரைத் தொடர்ந்ததேயன்றி, அவர் மனம் பிராட்டியாரிடமே கலந்து நின்றது.

அங்ஙனம் போதருகின்ற அவர், "யான் அக்கன்னி மாடத்திற் கண்ட பூங்கொடியையொத்த அவ்வழகி, தெய்வப் பெண்ணோ! திசைமுகனால் பலநாளும் ஆராய்ந்து படைக்கப்பட்ட வனப்பின் திரட்சியோ! அன்றி, மானிட மகள் தானோ! இந்நாட்டின் அரசன் அரும்புதல்வியோ! அமைச்சன் திருமகளோ! தோழி வகுப்பைச் சார்ந்தவளோ! யாரோ அறியேன்! யாராயினும், என்ன! அழகுகள் யாவும் செயற்கரிய தவஞ்செய்தே அவளையடைந்தன போலும்! நற்குணங்கள் யாவும் அவளிடம் ஒருங்கே திரண்டனவென அவள் பார்வை தூய குணங்களை வெளிப்படுத்துகின்றது. ஒரு போதும் என்னை எதிர்த்திலாதாரும் கேட்டஞ்சும் என் வீரத்தை, அம்மங்கையின் பார்வை ஓர் இமைப் போதில் குலைத்துவிட்டதே! என் செய்வது! என்றுமில்லாத சம்பவம் ஏன் இன்று நிகழ்ந்தது! என்நோக்கு எதற்காக மேற்செல்லல் வேண்டும்! நோக்கினாற்றானென்னை! அம்மாதின்

என் மனம் பதிதல் எற்றுக்கு! அவள் கன்னி மா.

விருப்பதால், கன்னியாகவே இருக்கலாம்; ஆயினும், அவள் என்னையே மணப்பாளென நினைத்தல் யாங்ஙனம் இயலும்! முனிவர் என்னை இந்நாட்டிற்கு அழைத்து வந்ததன் காரணம் யாதோ! யான் அறியேன்," எனச் சிந்தித்துக் கொண்டே வழி நடந்தனர்.

இங்ஙனம் பலவாறு யோசித்துக்கொண்டே சென்ற இராமபிரானார் திருவுருவம் தம் கண்களை விட்டகன்றவுடன், பிராட்டியாரின் மனம் அனலிடைப்பட்ட மெழுகென உருகிற்று. அவர் கண்கள் இரவி குல திலகர் சென்ற வழியையே நோக்கிக்கொண்டிருந்தன. தம் நோக்கை வேறு பக்கம் திருப்ப அன்னையார் பெரிதும் முயன்றார். அம்முயற்சியினால்

அவர், தம் பார்வையை மாற்றினரேயன்றி, தம் எண்ணத்தை மாற்ற அவரால் முடியவில்லை. ஆதலால், “ இவர் யார்! இவர் ஏன் இங்கு வந்தார்! ஒருகால் நமக்காக ஏற்படுத்தி இருக்கும் வில்லைப் பார்க்க வந்தனரோ! இவர் அரச குமாரராக இருப்பரா! அங்ஙனமாயின், முனிவர் பின் வருவதற்குக் காரணம் யாது! அவர் பின் இன்னொரு பூமானும் தொடர்ந்து சென்றனரே! அவர் யாராயிருத்தல் கூடும்!” என்னும் பல எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்ருய் அவருக்குதித்தன. “ எதைக் கருதி என் மனம் அவர்பால் சென்றது! வில்லை வளைக்க என் தந்தையாரிடம் வருகின்ற மன்னவர் எண்ணிலர் என்பதை யான் அறிவேன். அவர்கள் வீரம், செல்வம், அழகு முதலியவைகளையும் தோழிகள் என்னிடம் குறிப்பிப்பதுண்டு. அங்ஙனமிருந்தும், என் மனம் அவர்களுள் ஒருவரிடத்திலும் பதிந்து தளர்ச்சி அடைந்ததில்லையே! இதுகாறும் மணம் என்னும் எண்ணமே என் சிந்தையில் உண்டானதாக எனக்கு நினைவில்லையே! இன்று எனக்கு உண்டான உணர்ச்சி எனக்கே வியப்பைத் தருகின்றதே! யான் இவ்வாறும் என் மனத்தைத் தளரவிடலாமா! இவ்வளவு மன வன்மையற்றவளா யான்! இதை யாரேனும் அறியின், என் கூறுவர்? என் மன மயக்கத்தைப் பற்றி உலகம் பழியாதோ! என்னை அறியாமலே அவர்பால் சென்ற என் மனம் இப்போது ஏதோ ஒரு பெருங்குறையை அடைந்ததைப் போன்று வருந்துகின்றதே! முன்னிருந்த களங்கமற்ற தன்மையும், இன்பமும் இப்போது என்னை விட்டு நீங்கினவே! இதைப் பிறரறியாமல் மறைக்கவும் என்னால் முடியாதுபோலிருக்கிறதே! யான் அவரையே மணப்பதென்றாலும், அஃது என் எண்ணத்தினலேயே கூடுமா! அவரும்

என்னை விரும்புதல், பிரம்மசாரியாதல், வில் வளைத்தல் முதலிய காரியங்களும் முடிந்தாலன்றோ என் வேட்கை நிறைவேறும்! இவைகளில் ஒன்று தவறினும், என் எண்ணம் பாழாமன்றோ! பின் அவரை விட்டு மற்றொருவரை மணத்தல் என் கற்பிற்கிழுக்கன்றோ! ஆயினும், என்ன! அவரை விட்டு வேறொருவரை மனத்தினாலேனும் நினைத்தாலன்றோ கற்பிற்குக் குற்றம்! மணந்தால் அவரையே மணப்பேன்; இன்றேல், ஆயுள் மட்டும் கன்னியாகவே இருந்து காலங் கழித்தலே கடைசித் தீர்மானம். ஏன் இவ்விரதங் கொள்ளல் என்றால் கூடாது! பெண்டிர் யாவருக்குமே இஃது இயலும். தம் மனத்தை மாத்திரம் திடப்படுத்துவரேல், பெண்டிர் இதைவிடச் சிறந்த காரியங்களையுஞ் செய்வர். இதனாலன்றோ சான்றோர் பெண்களைப் பெரிதும் புகழ்ந்து கூறுகின்றனர்!

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்?" —திருவள்ளுவர்

எங்ஙனமேனும் அத்தலைவரைப் பற்றிய விஷயங்கள் யாவும் தெரியுமுன் என் சிந்தை ஒரு விதத் தெளிவிற்கும் வாராது," என்று ஆழ்ந்த யோசனையிற் படிந்திருந்தனர்.

இம்முறையில், பிராட்டியார் தம் மனத்துள் அடக்க வேண்டிய பெண்மைக் குணங்களை அடக்க வன்மையற்றவராயினர். அதனால், அவர் குறிப்பைத் தோழிகளும் ஒருவாறு உணர்தல் ஆயிற்று. தோழியர், 'இவர் மனத் திட்பத்தையும், நிறையையும் யாரோ ஓர் ஆண் மகன் கவர்ந்து சென்றனன் போலும்!' என ஐயுற்றனர்.

இங்ஙனம் இராமரும் பிராட்டியாரும் கொண்ட காதலே இயற்கைக் காதலாகும். இத்தகையோர்க்கு அமையும்

மணமே தெய்வ மணமெனப்படும். இவர் தம் உடல் இவ்வுலகை விட்டு நீங்கும்வரை ஒருவரைவிட்டொருவர் பிரியார். ஏன்? இறந்த பின்னும் ஒருவர் மாட்டு மற்றொருவர்க்குள்ள இத்தகைய அன்பு நீங்காதெனவே கூறலாம். அன்பினாற் பிணிக்கப்பட்டவர்களாய், ஒருவர் கருத்தை மற்றொருவர் நன்குணர்ந்து மிக்க ஒற்றுமையுடன் ஒழுகும் இல்லறவாழ்க்கை சுவர்க்கத்திலும் சிறந்ததாகும். துறவறம் இதன்முன் என் செய்யும்? இங்கு,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று." —திருவள்ளுவர்

என்னும் பெரியார் வாக்கு நினைவிற்கு வருகிறது.

ஒத்த வயதும், ஒத்த பண்பும், ஒத்த அறிவும், ஒத்த அன்பும் மண மக்களுக்கு இன்றியமையாதனவென நூல்கள் அறையாநிற்கின்றன. ஆயினும், இவைகள் யாவற்றிலும் சிறந்தது ஒத்த அன்பேயாகும். இஃதுண்டேல், மற்றவை தாமே வந்து சேரும். இத்தகைய பண்புடையார்களுக்குத் தோன்றும் மக்களல்லவா உண்மை மக்களாவார்கள்! அம்மக்கள் சான்றோராய்த் திகழ்வதற்கும், உலக சேவையி லீடுபடுவதற்கும் தடையுளதோ? இதனால் ஏற்படும் நலன்களை அளந்து கூறல் இயலாது! அப்போதன்றோ உலகம் மேன்மையடையும்! இக்காலத்தில் சிலர் கல்வியையும், சிலர் செல்வத்தையும், சிலர் ஜாதியையும் கவனிக்கின்றனரேயன்றி, ஒத்த குணத்தையும் அன்பையும் யோசிக்கின்றனர் இல்லை.

நம் நாட்டில் பெண் பாலாரும், ஆண் பாலாரும் அடைகின்ற துன்பங்கள் பலவற்றிற்கும் அன்பின்மையே காரணமாகும். நம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடை செய்யும் காரணங்கள் பலவற்றில் இதுவும் ஒன்றாகும். இதனாலன்றோ

இப்போது வீரம், நிறை, கற்பு, ஒழுக்கம், கல்வி, அறிவு, தேக திடம், மன வன்மை முதலிய யாவற்றிலும் குறைபாடுடைய மைந்தர் பலர் தோன்றுகின்றனர்? ஆனால், நம்மனோரிற் சிலர் மேல் நாட்டாரைப் போன்று ஒருவரோடொருவர் சில நாட்கள் உறவாடிப் பழகிய பின் மணஞ் செய்தல் நலம் என்ற கொள்கையையும் கொண்டுள்ளனர். அம்முறையும் இக்காலத்திற்கேற்றதன்று எனவே கூறல் வேண்டும். ஏனெனில், அதற்கேற்ற கல்வியும், உலக அநுபவமும் நம் நாட்டில் இருபாலாரிடத்திலும் மிகவும் குறைவு. **எந்நாள் ஊதியத்திற்கும், கீர்த்திக்குந்தான் கல்விகற்பது என்னும் நினைவுமாறி, மனத்தைச் சீர்மைப்படுத்தி வாழ்க்கையை நேர்வழியில் நடாத்தி நாட்டை முன்னேறச் செய்வதற்கே கல்வி கற்பது என்னும் எண்ணம் தோன்றுகின்றதோ, அந்நாளே நம் நாடு நலம் பெறும் நன்னாளாகும்.** இத்தகைக் கல்வி இருபாலாருக்கும் இருத்தல் வேண்டும். இதை விரிக்கிற் பெருகும்.

## 7. காகுத்தர் வில்லை முறித்தல்

முன்னர் இயம்பிய வண்ணம் காதலர் இருவரும் கலக்கமுற்றனர்; இராமரின் உரு வெளித் தோற்றம் சீதா பிராட்டியாரையும், பிராட்டியாரின் உரு வெளித் தோற்றம் இராமரையும் பெரிதும் துன்புறுத்தின. அவர்களுக்கு அவ்விரவு ஒரு யுகம்போலத் தோன்றிற்று. அதை அவர்கள் தங்கள் உயிரை ஈர்க்கும் பகைவனென நினைத்தார்கள். ஈதிங்ஙனமிருக்க, காலச் சோதரன் யாரையும் எதிர் பார்க்க மாட்டானன்றோ? துன்பங் கொண்டவர்களுக்குக் குறைந்தும், இன்பம் வகித்தவர்களுக்கு மிகுந்தும் தோன்றுவது அவன்

தொழிலல்லவே? தம் வேலையைச் சிறிதும் தவறாமல் செய்கின்றவர்களில் அவனும் ஒருவனல்லவா? ஆகவே, அவர்களை வருத்திய இரவும் கழிந்து, பகலவன் தோன்றினான். அன்று அவன் புறப்படும்போதே அவன் கதிர்கள் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டன. அவன் தோற்றம் ஸ்ரீராமபிரானுக்கும் பிராட்டியாருக்கும் புதிய இன்பத்தை ஊட்டுவது போன்றிருந்தது.

மறு நாள் முனிவர் ஸ்ரீராமபிரானையும் இலக்குமணனையும் ஜனகர் வேள்விச் சாலைக்கு அழைத்துச் சென்றனர். மூவரும் ஜனகரால் மிக்க சிறப்புடன் வரவேற்கப்பட்டனர். அரசிளங்குமரர்கள் தேக வன்மையும் முக ஒளியும் ஜனகர் மனத்தைக் கவர்ந்தன. அவர்கள் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் அவா அவர் மனத்தில் எழுந்தது. ஆதலின், அவர் முனிவரை வணங்கி, "இவர்கள் யாவர்?" என வினவினார்.

முனிவர் அம்மக்களின் குலப் பெருமை, காகுத்தர் முதலிய தசரத மைந்தர் நால்வரின் சிறப்பு, தசரதரின் வன்மை, தாம் அம்மக்களைக் கொணர்ந்ததன் காரணம், ஸ்ரீராமபிரான் தாடகை முதலிய கொடிய அரக்கர்களைக் கொன்று வேள்வி முடித்த மகிமை, அகலிகைக்குப் பழைய உருவமீந்த தெய்வத் தன்மை, தாம் அவர்க்குக் கொடுத்த அஸ்திரங்கள், ஸ்ரீராமர் வன்மைக்கடங்கி ஏவல் புரியும் மேன்மை முதலிய பலவற்றையும் ஜனகருக்கு எடுத்தோதினார்.

இவைகளைச் செவியேற்ற ஜனகருக்கு இன்பத்திற்கு மாறாகத் துன்பமுண்டாயிற்று. ஏனெனில், "அந்தோ! இப்போதே நம் மகள் சீதையை இக்காளைக்கு வாழ்க்கைத் துணையாக்க முடியாதவாறு ஒரு வில்லன்றோ இடை நிற்

கிறது! இவளுக்கு வர சுல்கமாக வைத்த ஈதின்றேல், நம் மனம் எத்துணைக் குதூகலத்துடன் இச்சீரியனை இப்போதே மருகனாக ஏற்றுக்கொண்டிருக்கும்! இப்புண்ணியத்தை நாம் பெற்றிலமே!" எனப் பல சிந்தனைகள் அவர் மனத்தில் தவழ்ந்தன.

பின்பு ஜனகர் விஸ்வாமித்திரரிடம் சிவ தனுசின் பெருமையைக் கூறி, "இவ்விளஞ்சிறுன் விரைவில் அவ்வில்லை வளைத்து நாணேற்றில், என்னை இடர்க் கடலிலிருந்து கரையேற்றி, என் புதல்வியையும் தவமியற்றியவளாக்குவன்," என விளம்பினர்.

இதையறிந்த முனிவர் அவ்வில்லைக்காண விழைந்தனர். ஆதலால், ஜனகர் அவ்வில்லைக் கொணரும்படி தம் ஏவலாளருக்குக் கட்டளையிட்டனர். யானையைப் போன்ற உடலுரம் பெற்ற பல வீரர்கள், அவ்வில்லின் நடுவிடங்களில் தூண்களை வைதது, தண்டுகளிலே தங்கள் தோள்களைக்கொடுத்து, சுமந்து வந்து அரசன் முன்னிலையில் வைத்தார்கள். அவ் வில்லைக் கண்ட சிலருக்கு, 'இதைக் கன்னியா சுல்கமாக வைத்த அரசன் மிக்க கன்மனத்தன்,' எனத் தோன்றிற்று. சிலர், 'அழகிலும், குணத்திலும், மனத் தூய்மையிலும் சிறந்த சீதைக்கு இத்தகைய அரிய காரியத்தைச் செய்பவனே மணவாளனாதல் தகுதி!' எனக் கூறினர். 'இதை நாணேற்றும் வன்மை, இவனுக்குண்டோ!' எனச் சிலர் தயங்கினர். 'அங்ஙனமின்றேல், தெய்வத் தன்மையும், காண்போர் கண் கவர் அழகும், வீரமுமுடைய இப்புண்ணியனைக் கணவனாகப் பெறும் பாக்கியத்தை நம் அருமைச் சீதை இழப்பளே!' எனச் சிலர் துன்புற்றனர். அங்குக் குழுமியிருந்த மன்னர்கள் அவ்வில்லைக் கண்டு மிக அஞ்சி நடுநடுங்கினார்கள்.

THE KUPPUSWAMY SASTRI RESEARCH INSTITUTE, MYLAPORE

சதானந்தர், வில்லைக் குறித்தும், வைதேகியாரின் பிறப்பைக்குறித்தும் விசுவாமித்திரருக்குத் தெரிவித்தனர். முனிவர், அவ்வில்லை நாணேற்றுமாறு காகுத்தரைத் தூண்டினர்.

அக்குறிப்பை உணர்ந்த இராமர் மலை போன்ற அவ்வில்லை, தம் கலங்கா மனத்தைக் கலக்கி அதில் உறையும் பிராட்டியாருக்குச் சூட்டுதற் பொருட்டு எடுத்த பூமாலையென ஆர்வத்தொடு கையில் எடுத்தனர். அதை மிக எளிதாகத் தூக்கிய அவர் வன்மை அங்கிருந்தாரனைவரையும் வியப்புறச் செய்தது. மன்னரும் பிறரும் கண்ணிமை கொட்டிலர். பின் நடைபெறப் போவதில் அவர்கள் கருத்து ஊன்றி இருந்தது. தியானத்திலீடுபட்ட ஞானிகளைப் போன்று அவர்கள் பார்வை அத்திருமகனையே குறிக்கொண்டிருந்தது. ஆயினும், அவணுள்ளார், இரவி குல திலகர் அவ்வில்லைத் தூக்கி நிறுத்தியதையும், அது முறிந்த ஓசையையும் அறிந்தனரேயன்றி, அவர் அதை வளைத்ததையும், நாணேற்றியதையும் சிறிதும் உணர்ந்திலர். வீரருடைய காரியம் அவ்வளவு விரைவில் முற்றுப் பெற்றது. அவ்வோசை மூன்று உலகங்களிலும் ஊடுருவிச் சென்று, அவணுள்ளார் யாரையும் அஞ்சச் செய்தது. ஜனகர் புண்ணியம் பலித்ததெனத் தேவர்கள் பூமழை பெய்தார்கள். முனிவர்களின் ஆசிகள் அங்கு நிரம்பின. நகரத்தார் இன்பக் கடலில் ஆழ்ந்தனர். மாதர்களின் ஆநந்தக் கூத்து மலிந்தது. பலர் வறியவர்களுக்குப் பொன்னைவாரிவாரியிறைத்தனர். பல வாத்தியங்கள் முழங்கின. வயதில் மூத்த மாதர்கள் மங்கல வாழ்த்துப் பாடினார்கள். தேவ மகளிரும், மானிட மகளிரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு குலாவினர். மிதிலை, 'இந்திர லோகமோ!' என ஐயுறுமாறு சிறப்புற்று விளங்கியது.

# 8. திருமணம்

இவைகளைக் கண்ணுற்ற தோழி ஒருத்தி ஓடோடியுஞ் சீதையாரிடம் வந்து, அவரை வணங்கி, "கற்புக்கரசியே, வாழ்க! பொறபிற்குப் புகலிடமே, வாழ்க! புனிதக் கொடியே, வாழ்க! புண்ணிய சொரூபியே, வாழ்க! நீ இழைத்த புண்ணியம் இன்றே பலித்தது! பிறந்ததன் பயனை நீஇப்போதே பெற்றாய்! உன் உடலும் உயிரும் நலனுற்றன! உன் வாழ்வு சீர்மை பெற்றது! நீயே பெண்களுக்கு நாயகமாவாய்!" எனப் பலபடப் புகழ்ந்து வாழ்த்தினள்.

காகுத்தரைக் கண்டது முதல் தம் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டிருந்த பிராட்டியாருக்குத் தோழியின் வார்த்தைகள் மிக்க வியப்பைத்தந்து, தியக்கத்தை யுண்டாக்கினவேயன்றி, அவைகளின் பொருள் ஒன்றும் அவருக்கு விளங்கவில்லை. எதிர் பாராத அவ்வார்த்தைகள் அவரைப் பேச ஒட்டாமல் நாவை அடக்கிவிட்டன. அவர் ஒன்றுந் தோன்றாது விழித்தனர்; தோழியை என்ன கேட்க வேண்டுமென்பதையும் மறந்தனர். இத்தியக்கத்தையும், பிரம்பிப்பையும் நன்குணர்ந்த தோழி, 'இவள் நம்மைக் கேட்பதற்கு முன்னமே நாம் விஷயத்தைக் கூறிவிட வேண்டும்,' எனக் கருதி, "அன்னையே, தாங்கிய வில்லுடனும், கம்பீர நடையுடனும், சிங்கநோக்குடனும், நீல மலையேயெனத் தம் தம்பியாருடன் ஒரு முனிவர் பின் வந்த இராமரென்னும் பெயரிய ஒருவர் வில்லை முறித்தனர். ஆண் சிங்கம் என்னில் அவருக்கே ஏற்கும்! அவர் நம் ஜனகர் செய்த தவமே உருவென வந்தவர் போலத் தோன்றுகின்றனர்!" எனச் சிறப்பித்துக் கூறினாள்.

வைதேகியார், தோழி செப்பிய செம்மொழிகளின் மாண்பினைச் சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்தனர். "இவள்

இயம்பும் குறிப்புக்களை ஊன்றி நோக்கின், என் மனத்தைக் கவர்ந்த மணவாளரே வில்லிறுத்திருக்கக் கூடுமென்பது தோன்றுகின்றது!எனினும், இதை எங்ஙனம் தீர்மானிப்பது! ஏன் வில்லை முறித்தவர் மற்றொருவராக இருத்தல் கூடாது! அங்ஙனமாயின், என் செய்வேன் ! பெண்டிர் தம் நெஞ்சில் நினைத்த ஒருவரை விட்டு வேறொருவரைக் கருதல் தகுதியாமா ! அத்தகையோர் பெண்களிற் சிறந்தவராவரோ ! சீலமன்றோ பெண்ணிற்குப் பெருந்தகைமை அளிப்பது ! தனுவை இறுத்தவர் எவரேனும், அவரை மணக்குமாறு தந்தையார் மொழிவரே ! இன்றேல், சத்தியத்திலிருந்து தவறினவர் எனத் தந்தையாரை உலகம் பழிக்குமே! அறிவிற் சிறந்த பெரியோர் அவரை வெறுப்பரே ! என் மனங் கொண்ட கருத்தைத் தந்தையார் எவ்வாறுணர்வர்! அந்தோ! பிறந்ததிலிருந்து கவலை இன்னதென அறியா எனக்குப் பிறரிடம் சொல்வதற்கும் யானே நீக்கிக்கொள்வதற்கும் இயலாத பேரிடர் இப்போது வந்துற்றதே ! இதுவும் என் ஊழ்வினையே போலும்! தந்தையார் வார்த்தையை மேற்கொள்ளின் கற்பு நிலை தவறும்; யான் கருதிய நெடுந்தகையை மணப்பின், தந்தையாருக்கும் குலத்திற்கும் நீங்காப் பழியுண்டாகும். என் செய்வேன் ! இருதலைக்கொள்ளி எறும்பென ஆயிற்றே என் வாழ்க்கை !" எனப் பெரிதும் துயருழந்தனர்.

பின்பு சிறிது தெளிந்து, "யான் எத்துணை அறியாமையை உடையவள் ! ஏன் யான் காலையில் பார்த்த சீரியோரே அச்சாபத்தைத் துணித்திருத்தல் கூடாது ! துணித்தவர், தம்பியாரோடு முனிவர் பின் வந்த ஒரு வீரரென்றுதானே பாங்கி பகர்ந்தனள் ! அவ்வீரரையன்றோ யான் கண்ணுற்றேன் ! எதையும் தெளிய உணராமல்

கவலைக்கிடங் கொடுத்தேனே! ஈதன்றோ அறியாமை எனச் சான்றோர் சாற்றுவது! பேதைமையை யான் பெருங் கலமாகப் பெற்றேனே! பல மன்னரையும் அஞ்சி நடுங்கச் செய்யும் அவ்வில் அச்சுத்த வீரராலன்றி வேறு யாரால் இறுக்கப்பட்டிருக்கும்! அவரையன்றி வேறொருவரால் அவ்வில் முறிந்ததெனை நினைத்தல் பேதைமையே," எனப் பலவாறு எண்ணி, ஆழ்ந்த சிந்தனையிலமர்ந்தனர்.

ஒருவராலும் வளைக்க முடியாத வில் இராமரால் இற்று விழுந்ததைக் கண்ட ஜனகர், இறும்பூதெய்தினர். 'இம் மணத்தை முடிப்பதற்குள் யாதாவது இடையூறு உண்டாகுமோ!' என்னும் ஐயமும் அவருக்குண்டு. பொருள் சிறந்ததாயின், அதனிடத்தில் அச்சம் உண்டாவது மக்களுக்கு இயல்புதானே? ஆதலால், ஜனகர் முனிவரை நோக்கி, 'யாவும் உணர்ந்த தவ சிரேஷ்டரே, சக்கரவர்த்தியார் வரும்வரை இம்மணத்தை நிறுத்திவைக்க வேண்டுமா? அன்றி, இப்போதே நடத்திவிடலாமா?' எனக் கேட்டனர். முனிவர் தசரதர் வரவு இன்றியமையாததெனை விடையளித்தனர். ஆகவே, ஜனகர் தசரதருக்கு மண ஓலையுடன் தூதுவரை விரைவிற் போக்கினர்.

அம்மங்களச் செய்தியை உணர்ந்து மனம் பூரித்த தசரதர், தம் சுற்றத்தாரும் படைகளும் பின்தொடர, மிக்க சம்பிரத்துடன் மிதிலை வந்தடைந்தனர். ஜனகர் தம் சேனைகளுடன் தசரதரை எதிர்கொண்டழைத்து, நலம் வினவி, அவருக்கென அமைக்கப்பட்ட விடுதியில் கொண்டுபோய்ச் சேர்த்தனர். பல தேயத்து மன்னரும் மிதிலை வந்து குழுமினர். அவரவர்களுக்குத் தக்க இட அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மறு நாள் நடைபெறப் போகும் மணத்தைக் குறித்து நாடு முழுதும் முரசறைவிக்கப்பட்டது. அவ்வமுதத் தீஞ் சொல்லைச் செவியேற்ற நகரத்தார் கொண்ட ஆநந்தம் அளவிடற்பாலதன்று. ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியே மணச்சிறப்புக் கொண்டாடுவதுபோலத் தோன்றிற்று. ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. சாலைகள் யாவும் அறச் சாலைகளாக விளங்கின. அந்நகரத்தார் அதிதிகளை இன்முகத்துடனும், இன்சொற்களுடனும் வரவேற்றனர்; அந்தணர்களைத் தானங்களினால் மகிழ்வித்தனர். ஆண் பெண் ஆகிய இருபாலார் முகங்களிலும் இன்பந் ததும்பியது. பச்சைப் பசுங்குழவிகள் தங்கள் தாய்மார்களின் முகத்தைக் கண்டு வாய் விட்டு நகைத்தன. ஒவ்வோர் இல்லத்தின் தலைவனும் தலைவியும் ஒக்கவிருந்து தம் இல்லத்தை மங்கலப் பொருள்களாலும், சித்திரங்களாலும் அணிபெறச் செய்தனர். பொது இடங்கள் யாவும் மரங்களாலும், மலர்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டன. சந்தனம், அகில் முதலியவைகளின் தூமம் எங்கும் கமழ்ந்தது. இரத்தின தீபங்களும், பாலிகைக் கிண்ணங்களும் திண்ணைகளில் பத்தி பத்தியாக வைக்கப்பட்டன. நக்ஷத்திர மண்டலமே கீழிறங்கியதென முத்துப் பந்தரிடப்பட்டது. இன்னணம் அலங்காரத்தினாலும், ஆநந்தத்தினாலும் நிரப்பப்பட்ட அந்நகரம் இந்திர லோகத்தையும் எழிலில் விஞ்சி நின்றது எனக் கூறுதல் மிகையாகாது.

தசரதர் முதலிய மன்னரும் வசிஷ்டர் முதலிய முனிவரும் மண மண்டபத்தைச் சார்ந்து, அவரவர்க்கு ஏற்படுத்தியிருந்த இருக்கையிலமர்ந்தனர்.

ஜனகர் ஏவலினால் ஜானகியார் மிக்க அலங்காரத்துடன் மண மண்டபத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். அச்சம்,

மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களே அவருக்கு நாற்படைகளெனும் உரிமை பூண்டன ; ஐம்புலன்களே அவருக்கு அறிவுடை அமைச்சர்களாக அமைந்தன ; பொன்னும் மணியுங் கலந்து செய்யப்பட்ட காற்சிலம்பே முரச வாத்தியமென முழங்கிற்று. அவர் விழிகளே வேலும் வாளுமாக விளங்கின. அவர் முகமே சந்திர வட்டக் குடையெனப் பொலிந்தது. இத்துணைச் சிறப்புக்களுடன் அறிவாகிற செங்கோலைக்கொண்டு தம் மனத்தைச் செந்நெறியில் செலுத்தும் நம் வைதேகியாரை, மங்கலில்லாத தீபத்தையொத்த உடலொளி வாய்ந்த தோழியர் பலர் சூழ்ந்து வந்தனர். அவர்கள் நாப்பண், அன்னத்தையொத்த நடையையும், பெண் மானையொத்த நோக்கையும், திருமகளை நிகர்த்த அழகையும் பெற்ற ஜானகியார் மிக்க அமைதியுடன் நடந்து வந்தனர். இக்காட்சி உடுக்களிடை மிளிரும் சந்திரனெனக் காணப்பட்டது. அவர் ஆபரணங்களிலிருந்து காலும் ஒளி, வட்டமாக அவரைச் சுற்றிலும் பரவிற்று. அஃது அவரை ஈன்ற பூமிதேவி தன் மகளின் பாதங்கள் தரையில் உறுத்தி நோவுறா வண்ணம் தளிர்களையும் மலர்களையும் பரப்பி வைத்துள்ளாளெனத் தோன்றியது. இரு மருங்கும் சாமரங்கள் வீசப்பட்டன. அவை, அன்னையார் நடையைக் கற்க வந்த அன்னங்கள் தோற்றுக் கீழே விழுவதும் எழுவதும்போல இருந்தன. கண்டவர்கள் கண்களை முகிழ்க்கச் செய்யும் ஒளி மிக்க விதானம் ஒன்று பிராட்டியாரின் சிரசின்மேல் பிடிக்கப்பட்டது. அது, தன் குலப் பேரரான இராமருக்கு இல்லக்கிழத்தியாராகப் போகும் ஜானகியாரைக் காணக் கீழிறங்கிய சூரியனென மிளிர்ந்தது.

இங்ஙனம் பிராட்டியார் ஆடைகளினாலும், ஆபரணங்களினாலும், பரிவாரங்களினாலும் திகழ்ந்து விளங்கினர்.

அஃது அழகுக்கு அழகு செய்வதுபோல இருந்தது. நம் அன்னையாருக்குச் சாமானியரும் போற்றத்தக்க உடலழகும், சான்றோர் ஏத்தத் தக்க குணவழகும், காண்போர் களிக்கத் தக்க அணியழகும் பொருந்தியிருந்தன. அவரைக் கண்ட இருபாலாரும் சித்திரத்தில் வரைந்த ஓவியமெனச் செயலற்றிருந்தனர்.

"இப்போது இவ்வவைக்கு வரப்போகின்றவள், கன்னி மாடத்திலிருந்து என் கருத்தைக் கவர்ந்தவளோ, அல்லளோ!" என்ற ஐயத்தினால் வருந்தி வாடியிருந்த காகுத்தரின் மனத் தாமரை, வைதேகியாராகிய ஆதித்தனால் அலர்ந்தது. "என் சிந்தையில் தங்கியிருந்த இவள் எங்ஙனம் வெளி வந்தனள்! இவள் ஒருவர் அகத்திலும் புறத்திலும் வீற்றிருக்கும் மந்திர வித்தையில் தேர்ந்தவள் போலும்! இயற்கையழகு வாய்ந்த இவளுக்குச் செயற்கையழகு எதற்காக? இவைகளைச் சுமந்து ஏன் இவள் வாடவேண்டும்? இவள் இடை ஒல்கப் பல அணிகளை இவளுக்குப் பூட்டிய தோழிகள் மிகவும் கருணையற்றவர்கள்; இவளழகு சால் புடைத்து; அருளழகு ஒழுகும் இவள் நோக்கு என்னைப் பெரிதும் வருத்துகின்றதே! இவளன்றோ பெண்களுக்குள் நாயகமாவாள்! இவளை வாழ்க்கைத் துணையாகப் பெற்ற என் பாக்கியமன்றோ பெரும்பாக்கியம்! இஃது என் முன்னோர் செய்த தவமேயாகும்," எனத் தமக்குள்ளே சிந்தித்துக்கொண்டு, கடலமுதத்தைக் கண்ட இந்திரனெனக் களித்திருந்தனர்.

"இவளே திருமாலுக்கேற்ற திருமகள்" என வசிஷ்டரும் பிராட்டியாரை வாழ்த்தினர். தேவர்களையும் வென்று அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெற்ற தசரதர் மனம் அன்னை

யாரைக் கண்டவுடன் களிப்புக் கடலிலாழ்ந்தது. அவர் தாம் அன்றே திருமகளின் கடாக்ஷத்தைப் பெற்றதாகக் கருதி இன்புற்றனர். அன்னையாரின் தேக வனப்பும், ஞான மிளிர்ப்பும் யாவருக்கும் மிக்க ஆநந்தத்தை அளித்தன. சிலர் அன்னையாரைக் கண்டவுடன் வணங்கினர். 'தாமரையை விட்டு வந்த திருமகளே இவள்,' என்னும் எண்ணம் சிலருக்கு உதித்தது. 'பாற்கடலையும், பன்னகத்தையும் அகற்றி வந்த திருமகனாகிய இவ்விராமனுக்கு இவளே தக்கவளாவள்!' எனப் பலர் புகழ்ந்தனர். இன்னணம் இன்பமும் ஆநந்தமும் வியப்பும் கலந்து பாய்கிற கடலில் மூழ்கியிருந்த மக்களின் இடையில், பொறுமை, பொலிவு, அடக்கம் முதலியவைகள் தமக்கு அடிமை பூண மண மண்டபத்தை அணுகிய வைதேகியார் தம் தந்தையாரின் அருகில் அமர்ந்தனர்.

மங்கள ஸ்நானஞ் செய்து தம் குலதேவதையை வணங்கித் தம்பிமார் உபசரிக்க முன்னரே மண மண்டபத்தை அடைந்து வீற்றிருந்த இரவி குல திலகரைக் கண்டோர் யாவரும் இன்பத்திலாழ்ந்தனர். மணச் சிறப்பைக் காண இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் தேவிமாருடன் ஆகாய வீதியில் நிறைந்தார்கள். இரவி குல திலகர் அவணுள்ள முனிவர்களையும், பெரியோர்களையும், தந்தையாரையும் வணங்கினர்.

தசரதரின் குல குருவாகிய வசிஷ்டரால் மணச் சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. வீரமும் பெருந்தன்மையும் வகித்த இராமரும், அவரது அன்பு முழுவதையுங் கவர்ந்த பிராட்டியாரும் ஒருங்கே மணப் பந்தரில் வீற்றிருந்தனர். ஜனகர் ஸ்ரீராமபிரானுருக்கு எதிரில் நின்று குளிர்ந்த நன்னீரை விட்டு, காகுத்தரின் தாமரைபுரை வலத் திருக்கையில் வைதேகியாரை ஈந்து, "திருமாலும் திருமகளும் போன்று,

நீங்கள் நீடூழி வாழ்க!" என வாழ்த்தினர். வசிஷ்டரால் குற்றமற்றனவும், யாவரும் தெள்ளிதின் பொருளுணரக் கூடியனவுமான மந்திரங்கள் செம்மையாக ஓதப்பட்டன. அம்மந்திரத்தில் மண மக்கள் தூய வாழ்க்கை நடாத்துதற் கேற்ற பொருள்கள் பல அடங்கியிருந்தன.

திருமணத்தின் போது சொல்லப்படும் ஒவ்வொரு வார்த்தையும் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மண மக்கள் இருவரும்அம்மந்திரங்களின் பொருளைநன்குணர்ந்து, தங்கள் ஆயுள் மட்டும் அவற்றின்படியே ஒழுக வேண்டும் என்ற நிபந்தனையும் அப்போது உண்டு. இன்றேல், அவர் களைச் சத்தியந் தவறினவர்கள் என உலகம் ஏசும். அன்றி யும், அவர்கள், கடவுள் முன்னிலையிற் செய்த வாக்குத் தத்தத்திலிருந்து பிறழ்ந்தவர்கள் என அறிவுடையோரால் தூற்றப்படுவார்கள். மணமண்டபம் தெய்வக்கோட்டமே என வும், அங்குத் தேவர் குழுமியிருக்கின்றனரெனவும் கரு தப்படும். மும்மூர்த்திகளையும் அங்கு நிலை நிறுத்தி வணங் குவதாகப் பாவனை செய்யப்படும். இம்முறையில், ஒவ்வொரு மணமும், தேவர்களையும், சுற்றத்தாரையும் சாட்சி வைத்தே நடத்தப்படுமெனத் தெரிகிறது. இயற்கைவாழ்வை நடாத்தி இல்லறத்தைச் செம்மை செய்தல், நன்மக்களைப் பெற்று ஜீவ காருணியத்தை ஓம்பல் முதலியவைகளே இல்லறத்தின் சிறந்த தத்துவங்களெனக் கொள்ளப்பட்டன. அவைகள் பொருளறியா மந்திரங்களை ஓதிப் பொறுப்புணரா இல்ல றத்தை மேற்கொள்ளும் தற்கால மணங்களைப் போன்றன அல்ல. அதனாற்றான் தற்காலத்தைப் போன்று ஒருவரை விட்டொருவர் பிரிதல், ஒருவரையொருவர் வஞ்சித்தல் முதலிய குற்றங்கள் அக்காலத்தில் அருகியிருந்தன. முறை

யோடு நடாத்தும் இல்லறம், ஐம்புலன்களையும் அடக்கிச் செய்யும் தவத்தைக்காட்டிலும் சிறந்ததென்பதை அறிவுடையோர் உணர்வர்.

நம் கதாநாயகியாரின் தெய்வ மணத்தின்போது மங்கல வாழ்த்துக்கள் ஒலித்தன. தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். தீவலம் வருதல், அம்மி மிதித்து அருந்ததி காணல் முதலியன நிறைவேறின. காதலர் இருவரும் முனிவர்களையும், தந்தைதாயரையும் வணங்கினர். இராமரின் தாய்மார் தம் மருமகளாரைக் கண்டு ஆநந்தித்தனர். பொன் மணி முதலியன ஏழைகளுக்கு அளிக்கப்பட்டன. பின் ஊர்மிளையை இலக்குமணனும், மாண்டவியைப் பரதனும், சுருதகீர்த்தியைச் சத்துருக்கனனும் பெரியோர் விருப்பப்படி மணந்தனர். திருமணத்திற்கு வந்தவர் யாவரும் மணமக்களை வாழ்த்தித் தத்தம் இருப்பிடம் சார்ந்தனர். விஸ்வாமித்திரரும் தம் தவச் சாலையை அடைந்தார்.

தசரதர், தம் சுற்றத்தாரும், மனைவி மக்களும், மருகியரும், சேனைகளும் சூழ்ந்து வர, ஜனகர் ஈந்த ஸ்ரீதனங்களைப் பெற்று, மிக்க கம்பீரமாய் அயோத்திக்குப் புறப்பட்டார். அரச குலத்தையே வேரறச் செய்யக் கருதிப் பல மன்னர்களையும் அழித்த பரசுராமர் அவர்களை வழி மறித்து, ஸ்ரீராமபிரானுரைப் போருக்கழைத்தார். சீதையாரின் சம்பந்தம் பெற்ற காகுத்தர் அவரை ஒரு நொடியில் வென்றார்.

பிறகு அனைவரும் அயோத்தியை அடைந்தனர். தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி உலகில் அவதரித்தற்பொருட்டு ஸ்ரீமந்நாராயணன் பாற்கடலிலிருந்து எழுந்தருளும்போது அவ்விழாவைக் காண எதிர் நோக்கி நிற்கும் தேவர் குழாங்

களைப் போன்று, அயோத்தியிலுள்ள சான்றோர் ஒருங்கு கூடி அவர்களை எதிர்கொண்டழைத்தனர். சங்க வாத்தியம் முழங்கிற்று. பேரிகைகள் ஒலித்தன. குடிகள் குதூகுலத்தில் திளைத்திருந்தார்கள். பின்னர் யாவரும், தம்மை எதிர் நோக்கி நின்ற குடிகள் கழிபேருவகை கொள்ள, அயோத்தி அரண்மனையைச் சார்ந்தனர்.

இளைஞராக முனிவர் பின் சென்ற இராமர் மண மகனாக அழகே உருவென ஒளிரும் பிராட்டியாருடன் வருவதைக் காண யாவரும் விழைந்தனர். நாட்டிற்குப் புதியளாக வரும் மருகியைப் பார்க்க எவர்தாம் விரும்பார்! யாவருடைய கண்களும் ஜானகியாரின் மீதே பாய்ந்தன. “ஸ்ரீராமபிரானுக்கு ஏற்ற மனைவி இவளேயாவள்! இவளைத் திருமகள் எனவே கூறல் வேண்டும்! இனி நம் நாட்டிற்கு யாதொரு குறையுமிலது! இத்தகைய மருகியை அடையத் தசரதர் செய்த புண்ணியம் யாதோ! இவளால் நம் இரகுநந்தனன் பல நன்மைகளையும் அடைவன்!” என்று பலர் பலவாறு இயம்பி, இன்பக் கடலிலாழ்ந்தனர்.

## 9. வைதேகியாரின் இல்வாழ்க்கை

வைதேகியாரும் காகுத்தரும் இல்லற வாழ்க்கையிலீடுபட்டனர். இருவரும் கெழுமிய அன்புடையவராய், ஈருடலும் ஓருயிருமெனத் திகழ்ந்தனர். ஒருவரை விட்டொருவர் பிரிவதற்கு அவர் மனம் சிறிதும் இசைந்திலது. வாழ்க்கை அறங்கள் யாவும் அவர்களால் ஓம்பப்பட்டன. மாமியார், மாமனார், பெரியோர், சிறியோர், கணவர் முதலியவர்களிடம் நடந்துகொள்ளும் முறைகளை ஜானகியார் நன்கு உணர்ந்திருந்

தனர். அயோத்தி தமக்குப் புதிய நகரமாயிருப்பினும், அவர் பணிந்த நடையும், இன்சொல்லும், புன்னகையும், அருட் பார்வையும் யாவரையும் வசீகரித்தன. தமக்கெனக் கொடுத் திருந்த பணியாளரிடம் அவர் காட்டிய அன்பிற்கு அள வில்லை. அவர் தோழிகளிடம் சகோதரி பான்மையுடன் நடந்துகொண்டனர்; தம் கணவருக்குச் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமைகளைத் தாமே செய்வர். தம் தலைவர் நினைப்பறிந்தொழுகும் நீர்மை அவரிடம் பொருந்தி இருந் தது. இல்லற வாழ்க்கையின் இன்பம் இத்துணைத்தென்ப தைக் காட்டுதற்கு இத்தம்பதிகள் பேரிலக்கியமாகத் திகழ்ந் தார்கள். வேலையின்றி வீணே காலங் கழிக்கும் சோம்பல் வைதேகியாரிடம் வர அஞ்சியது. தாமே செய்துகொள்ளக் கூடிய சிறிய வேலைக்கும் பணியாளரை எதிர் நோக்கும் தீய பழக்கம் அவரிடத்தில் நெருங்கிற்றில்லை.

இவ்வாறு மைதிலியாரின் வாழ்நாட்கள் மிக்க இன்பத் துடனும், முறையுடனும் நடைபெறுங்கால் எதிர் பாராத ஒரு கொடிய சம்பவம் நேர்ந்தது. மக்கள் என்றும் இன்பத் தையே அனுபவிக்க முடியாதன்றோ? இன்பமும், துன்ப மும் மாறி மாறித் தோன்றுவது வாழ்க்கையின் இயல்பே; அங்ஙனமன்றி, இன்ப துன்பங்களில் யாதாவதொன்றே, வாழ்க்கையில் நிலை பெற்றிருக்குமாயினும், அஃது அத்து ணைச் சிறப்புடைத்தாகாது. அதன்றியும், அப்போது வாழ்க்கையின் இன்பமும் மாற்றமும் தோன்றுதொழியும். ஒன்றைப் பெற்றோர், மற்றொன்றின் கூறுபாட்டையும் இயல்பையும் அதை அனுபவிக்கின்றவர்களின் நிலைமையை யும் உணரார். ஆயினும், மக்கள் இன்பத்தைப் பெரிதும் விழைவதன்றித் துன்பத்தை விரும்புவதில்லை. மக்கள் பல

நாட்கள் இன்பத்தைப் பெற்று வாழினும், ஒரு நாள் துன்பமும் அவர்களைப் பெரிதும் வருத்தும். இன்பத்தில் திளைத்திருக்கும்போதே, 'துன்பம் வருமோ!' என்ற நினைவு அவர்களுக்குத் தோன்றுமாயின், உள்ள இன்பமும் பறந்துபோகும். இது, மக்களுக்கு இயல்பு. ஆனால், யார் விரும்பினும், யார் வெறுப்பினும், மாறி மாறித்தோன்றும் இன்ப துன்பங்கள் தடைப்படுவதில்லை. அங்ஙனமே, பிராட்டியாருக்கும் துன்பம் தொடங்குங் காலம் நெருங்கிற்று.

## 10. வைதேகியார் தம் கணவருடன் கானேகுதல்

தசரதர் ஸ்ரீராமபிரானுருக்கு அரசை நல்கித் தம் ஆன்மலாபத்தைத் தேட வனஞ் செல்ல வேண்டுமெனத் தம் மந்திரிகளுடனும், குல குருவாகிய வசிஷ்டருடனும் ஆலோசித்துத் தீர்மானித்தார். மறு நாள் காகுத்தருக்கு மகுடம் புனைவதாகப் பறையறைவிக்கப்பட்டது. இதையுணர்ந்த கைகேயியின் தோழியாகிய மந்தரை பொறாமையடைந்து, கைகேயியின் மனத்தை வேறுபடுத்தினள். இதனால் பல நற்காரியங்கள் முடிய வேண்டியிருப்பதால், காகுத்தரிடம் அன்பினாற் பிணிக்கப்பட்ட கைகேயியின் மனமும் திரிந்தது. கேகயன் மகள் தசரதரிடம், பரதன் நாடாளவும், காகுத்தர் காடு செல்லவுமாக வரங்கள் இரண்டையும் பெற்றனள். அரசர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு இவ்விரண்டு வரங்களையுந்தந்து மூர்ச்சித்துக் கிடந்தனர். வனஞ் செல்லும் விஷயத்தைக் கைகேசியே இராமருக்குத் தெரிவித்தனள். ஆனால், இது விஷயத்தில் இரவி குல திலகர் மனம் சிறிதும் இடருறவில்லை. உடனே கானஞ் செல்ல அவர் மனம் விழைந்தது

ஆதலால், தம்மை விட்டுப் பிரிய மனமெழாத் தம்பியும் தாமும் மரவுரி உடுத்துத் தம் தாய்மார்கள் துக்கத்துடன் பின்தொடரக் காகுத்தர் சீதாபிராட்டியாரின் அரண்மனையை அணுகினர்.

'நம் தலைவர் நாளை மகுடம் புனையப் போகிறார்,' என்று இன்பக் கடலில் மூழ்கியிருந்த பிராட்டியாருக்கு எதிர் நோக்காத இச்சம்பவம் திகைப்பைத் தந்தது. அவர் மனந் திடுக்கிட்டனர். துயரத்திலாழ்ந்திருந்த மாமியாரைப் பார்த்து அவர் சிந்தை மயங்கிற்று. அரசருக்கு யாதேனும் தீங்கு நேர்ந்ததோவென அவர் அயிர்த்தனர். அவர் உடல், மின்னலையொத்து நடுங்கிற்று. அதன் காரணத்தைத் துக்கத்திலாழ்ந்திருந்த மாமியாரைக் கேட்டுத் தெளிய அவர் நெஞ்சம் எழவில்லை. ஆதலால், துக்கத்திற்குக் காரணத்தை மிக்க பணிவுடன் தம் நாயகரை வினவினர். வருத்தம் சிறிதுமின்றி அன்றலர்ந்த செந்தாமரையையும் வென்றதென மலர்ந்த முகத்துடன் நின்ற ஸ்ரீராமபிரானார் சீதையாரை நோக்கி, "யான் இன்று இருமுது குரவர்களின் ஆணையைத் தாங்கித் தவசிகள் வதியும் வனத்திற்குச் செல்லத் துணிந்தேன்; சென்று, விரைவில் இவண் வருவேன். நீவருந்தலை," என்று கூறினர். இதைச் செவியேற்ற வைதேகியார் திடுக்கிட்டனர்; இடியோசை கேட்ட நாகமென நடுங்கினர். அவர் இருதயம் பிளந்துவிடும்போல விருந்தது. 'எங்கு இருக்கின்றோம்! எவற்றைக் கேட்கின்றோம்! இவை உண்மையாகவே நம் நாயகர் வார்த்தைகளோ! இங்ஙனம் இவர் நம்மைவிட்டுச் செல்வரா! இவர் மனம் இதற்குத் துணிவு கொள்ளுமா! இதை இவர் வாயினாற் சொல்வதற்கும் முன் வருவரா!' எனப் பல எண்ணங்கள் ஒன்றன்பின்னொன்றாக ஒரு விநாடியில் அவர் மனத்திற்றோன்றின.

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
MADRAS

ஆனால், 'நாட்டை யார் ஆளப் போகின்றார்? இம்மாற்றம் உண்டானதற்குக் காரணம் யாது? எத்தாயார் இக்கட்டளையை இட்டனர்? எத்தனை நாட்கள் கானகத்தில் வதிய வேண்டும்?' என்னும் விஷயங்களைத் தாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுவதிருப்பினும், அவைகளுள் ஒன்றினும் அவர் கருத்துச் செல்லவேயில்லை. அன்றியும், அவர் தம் கணவர் அரசை இழந்ததற்கேனும் கொடிய காட்டிற்குச் செல்வதற்கேனும் தினையளவும் வருந்தினாரில்லை. 'யான் கானகஞ் சென்று விரைவில் இவண் வருவேன். நீவருந்தலை,' என்ற வாசகங்களே அவர் செவியைச் சுட்டன; நெஞ்சைப் பிளந்தன. யாது காரணத்தைக் கொண்டு தம்மை நகரத்தில் இருத்திச் செல்லத் தம் கணவர் விரும்புகின்றார் என்பதை நினைக்க நினைக்க அவர் மனங்கொதித்தது. துக்கத்தினால் விம்மினர்; உயிரை உமிழ்தல் போன்று பெருமூச் செறிந்தனர். 'இவர் கானகத்திற்குச் சென்று திரும்பி வருவதை அவ்வமயம் உயிர் வாழ்ந்திருக்கின்றவளன்றோ காண வேண்டும்! யாருக்கு இவ்வார்த்தை கூறுவது!' என்று பல வாறு சிந்தித்து, அவர் மனம் இடராழியிலாழ்ந்தது. இங்கு,

"செல்லாமை யுண்டே லெனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." —திருவள்ளுவர்

என்னும் பொய்யா மொழி நம் நினைவிற்கு வருகிறது.

"நாய கன்வன நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்;
'நீவ ருந்தலை நீங்குவென் யான்'என்ற
தீய வெஞ்சொற் செவிசுடத் தேம்புவாள்."

என்னும் கம்பர் வாக்கு இங்கு நோக்கத் தக்கது.

இவ்வாறு வருந்தும் சீதையாரின் நிலைமையைக் கண்ணுற்ற இராமபிரானுர் அவரை நோக்கி, 'உன்னியல்பு கானகத்தின் கடுமையைத் தாங்கும் வன்மையுடையதன்று. குளிர்ந்த செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பட்ட உன் மெல்லிய அடிகள் அரக்கை உருக்கிவிட்டது போன்ற வெப்பமுடைய கற்களின் சூட்டைத் தாங்கா. இனிய உணவையுண்டும் பஞ்சணையிலுறங்கியும் வாழ்ந்த நீ, பக்குவப்படுத்தாத காய் கனிகளை அருந்தியும் பருக்கைக் கற்களிற் படுத்தும் எங்ஙனம் வாழ்வாய்? பல கடின வழிகளைக் காலால் கடந்து செல்ல உன்னுல் ஆகுமா? ஆதலின், நீ இவண் உறைவதே நலம்,' என இனிய வார்த்தைகளைச் செப்பினுர்.

ஆனுல், அப்போதும் இராகவர் இயம்பிய பல வார்த்தைகளில், 'இவண் உறைவதே நலம்,' என்ற வாசகந் தவிர, மற்றென்றும் அவர் செவியில் நுழைந்திலது. "உம்பிரிவைக்காட்டிலும் கானஞ்சுடுமோ? துக்கத்துடன் உண்கின்ற தேவாமிர்தமும் வேம்பன்றே? இந்திர லோகமும் மனத்திருப்தியற்றபோது இன்ப வாழ்வைத் தருமோ? அன்புடையாருடன் உறையுங்கால் நரகமும் சுவர்க்கமாகாதோ? ஆர்வமிகுமிடத்தில் துன்பந் தோன்றுமா? விருப்பு, வெறுப்பைப் போக்காதோ?" என்னும் பல வார்த்தைகளை அவர் அறியாமலே அவர் வாய் வழங்கிற்று.

ஜானகியாரின் மன உறுதியை அறிந்த சக்கரவர்த்தியாரின் திருமகனுர் ஒன்றுங் கூற நாவெழாராய் மோனஞ் சாதித்தனர். உடனே ஜானகியார் சீரை (மரவுரி) யுடுத்து இராமர் அருகில் வந்து நின்றனர். பிராட்டியார் மனவுறுதியும், பதிபக்தியும் யாவரையும் வியக்கச் செய்தன. அவர் தவ நிலையைக் கண்ட பலர் துக்கத்திஞல் பதைபதைத்தனர்.

சித்து, அசித்து, ஆன்மாவாகிய முப்பொருள்களின் உண்மைத் தத்துவங்களை நன்கு ஆய்ந்துணர்ந்த பெரியோரும் விரைவில் விடுதற்குச் சிறிது தியங்குகின்ற அரச செல்வத்தை இமைப்பொழுதில்விட்ட நம்பிராட்டியாரின் பற்றற்ற மன உறுதியன்றோ புகழத் தக்கதாகும்! இவர் தம் கணவர் மாட்டுவைத்த அன்பின் பெற்றியென்னே! அன்னையார் தாம் பற்றற்ற ஜனகருடைய புதல்வியார் என்பதைச் செயல் முறையில் நன்கு காட்டினர். ஆண் மக்களைக்காட்டிலும் பெண்மக்கள் சிறுபொருள்களிடத்திலும் மிக்க பற்றுள்ளவர்கள் என்பது உலகக்கொள்கை. இஃது உண்மையே யாயினும், இவர்கள் பற்றுவிட வேண்டுமென மன உறுதியைக் கொள்வரேல், துறந்த ஞானிகளுக்கும் வழி காட்டிகளாவார்கள். பெண்கள் கருதிய விஷயத்தைக் கடைப்பிடிப்பதில் வன்மை வாய்ந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. இதனாலேயே ஆண்களைவிடப் பெண்கள் நல்லொழுக்கத்தில் மேம்பட்டு விளங்குகின்றார்கள். ஆனால், அக்கடைப்பிடித்தல் நன்மையில் செல்ல அவர்களுக்குத் தக்க கல்வியையும் அறிவையும் ஊட்ட வேண்டுவது பெற்றோர் கடமை.

இராமரும் பிராட்டியாரும் ஒத்த அன்புடையவர்கள் என்பதைக் குறிப்பதற்கு இஃது ஒருதக்கஇடமாகும். ஏனெனில், கணவரை விட்டுப் பிரிய மனைவியார் ஒருப்பட்டிலர். மனைவியாரின் துயரத்தைக் காணக் கணவர் சகித்திலர். இம்முறையில் ஒருவரை விட்டொருவர் பிரியாது தொடர்ந்தனர். இராமர் தம் மனைவியாருடனும் தம்பியுடனும் கானகத்திற்குப் புறப்பட்டார். சுமந்திரர் தேர் செலுத்தினர். இங்ஙனம் நகர் நீங்கிப் போந்த அந்நால்வரும் இரண்டு யோசனைகடந்து ஓர் அழகிய சோலையை அணுகினர். அவணுள முனிவரோடு

அளவளாவும் பெற்றி அவர்களுக்குக் கிடைத்தது. ஸ்ரீராம பிரானுர் நல்லுரை பல இயம்பிச் சுமந்திரரை நகர் திரும்ப வேண்டினர். பிராட்டியார் சுமந்திரரிடம் மாமனுர் மாமி மார்களுக்குத் தம் வணக்கத்தைத் தெரிவிக்குமாறும், தாம் அவண் விட்டு வந்த நாகணவாய் கிள்ளை முதலிய பறவைகளை அன்போடு ஓம்புதற்குத் தம் தங்கையரிடம் கூறுமாறும் பணித்தனர். அவர் பெருந்தன்மையின் மேன்மையே மேன்மை! தம் இன்னலைச் சிறிதுங் கருதாது, தங்களுக்குத் துன்ப மிழைத்த மாமிமார் மாமனுரிடத்து அவர் காட்டிய பக்தியும் மதிப்பும் பறவைகளிடம் பாராட்டிய அன்பும் சுமந்திரர் நெஞ்சை உருக்கின.

> "தீறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
> தறனல்ல செய்யாமை நன்று." —திருவள்ளுவர்

என்பது ஆன்ருேர் வாக்கன்ருே?

## 11. வைதேகியாரின் வன வாழ்க்கை

சுமந்திரர் நாடு திரும்பிய பின்னர், காகுத்தர் முதலியோர் மேற்செல்லத் துவங்கினர். நீர்க் குமிழியினும் மெல்லிய சீதையாரின் தாள்கள் இராமபிரானுரைத் தொடர்ந்து கானகத்தில் நடந்தன. அவருக்கு உடல் இளைப்பேனும், மனத்தளர்ச்சியேனும் தோன்றவில்லை. குற்றமற்ற உண்மை அன்பைக்காட்டிலும் சிறந்த பொருள் உலகத்தில் ஒன்று உளது எனக் கூறல் இயலுமோ?

மூவரும் கங்கைக் கரையைக் குறுகினர். பெண்களுக்கு விளக்கெனத் திகழும் பிராட்டியாரை இரவி குல திலகர் தம் தாமரை போன்ற கரத்தினுல் பற்றிக்கொண்டு கங்கையில்

மூழ்கினர். இக்காட்சி, தேவர்களை இன்பத்திலாழ்த்தியது. காகுத்தர் பாதத்திலிருந்து தோன்றிய கங்கைக்கும், பலர் தன்னிடம் தோய்வதனால் தனக்குச் சேர்ந்த பாவம் காகுத்தர் பரிசத்தினால் தொலைந்தது.

பிராட்டியார் கங்கையில் நீராடியபோது, வஞ்சிக்கொடியும் தாமரையும் அவர் இடையழகிற்கும் அடியழகிற்குந் தோற்று வெட்கியவென நீரில் மறைந்தன. அதில் வதியும் கயற்கெண்டைகள், அவர் கண்களுக்கொவ்வாமையின் நாணி அப்பாற் சென்றன. அவர் குழலில் அணிந்த அன்றலர்ந்த மலர்களின் மணம் கங்கையிற் கலந்து அந்நீர் முழுதும் வாசம் வீசிற்று. நுரையோடுங் கூடிய அலைகள் மேலெழுந்து உயர்ந்து அசைவதால் கங்கை வெண்ணிறக் கூந்தலையுடைய ஒரு வயது முதிர்ந்த பெண்ணென ஒளிர்ந்தனள். அது துணையற்றுத் தனித்து நின்ற கற்பிற் சிறந்த சீதையாரைத் தன் கைகளால் நீராட்டுவிக்கும் செவிலியெனத் தோன்றியது. அந்நீரிற் பதிந்த பிராட்டியாரின் அளகம், கங்கையிற் கலக்கும் கறுத்த நீரையுடைய யமுனையின் நீர்ச் சுழிகள் எனத் தோன்றிற்று. இவ்வாறு மூழ்கி எழுந்த வைதேகியார் பாற்கடலில் தோன்றிய திருமகள் என விளங்கினர்.

பின்னர் அவர்கள் குகன் இருக்கையை அணுகினார்கள். குகன் ஸ்ரீராமபிரானார் மாட்டுக் காட்டிய அன்பின் திறம் கூறுந் தகைமையுடையதன்று. கெழுமிய அன்பிற்றிளைத்து நின்ற நட்பினனாகிய குகனால் கங்கையைக் கடந்து கரையேறிச் சித்திரகூடத்திற்குச் செல்ல மூவரும் வனம்புக்கனர்.

வீரரான ஸ்ரீராமபிரானாரும், மயில் சாயலையும் மான் நோக்கையும் உடைய பிராட்டியாரும் அவணுற்ற இயற்கை வனப்புக்கள் பலவற்றையும் நோக்கிக்கொண்டே வழி நடந்த

னர். கொன்றை மரங்கள் உதிர்த்த பொன்னிற மலர்களில் இந்திரகோபப் பூச்சிகள் கண்ணுறங்கும் காட்சி, இரத்தினங்கள் பதித்த பொன்னாரமென விளங்கிற்று. அழகிய மஞ்ஞைகள், இன்னிசை மிழற்றும் இளவண்டுகளைப் பாணராகவும், பொழிகின்ற மழையைப் பறையாகவுங் கொண்டு தங்கள் தோகைகளை விரித்து ஆடின. அவை அங்ஙனந் தோகை விரித்தாடியது வைதேகியாரின் வனப்பைத் தம் பல கண்களினுல் நோக்க விருப்புற்றதெனக் காணப்பட்டது. ஒரு மயில் காந்தள்மொட்டைப் பாம்பெனக் கருதிக் கவ்விற்று. அதைக் கண்டு புன்முறுவல் கொண்டதொப்ப, தேன் நிரம்பியமுல்லை மலர்ந்தது. வீரத்திற் சிறந்த புலிக் குட்டிகளும், இருளே திரண்டதெனத் தோன்றும் யானைக் கன்றுகளும், பசுக் கன்றுகளுடன் ஒத்து விளையாடின. பூங்கொத்துக்கள் நிரம்பிய பூங்கொடிகள், பொன்னணிகளினுல் தம்மை அணி செய்துகொண்டு நீர்த் துறையில் மூழ்கும் இளம்பெண்களென நறுமணமுள்ள நீர் நிலைகளில் படிந்து மூழ்கின. நறையை மிகுதியும் பருகிய களிப்பால் திசையறியாது மயங்கும் ஆண் வண்டுகள், இசையை மிழற்றிக்கொண்டு தம்முன் செல்லும் பெண் வண்டுகளின் உதவியால், போகும் வழி அறிந்து சென்றன. மலர் மரங்கள் நெறியில் மிகுதியும் மலர்களை உதிர்த்துப் பிராட்டியாரின் மெல்லிய திருவடிகள் கற்களினுல் துன்புருவண்ணம் செய்தன. ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவும் மந்திகளின் காட்சி அவர்கள் மனத்தைக் கவர்ந்தது. சுனை நீரிலுள்ள மீன் கூட்டங்கள், தென்னையின் இளம்பாளைகள் மலர்வதைக் கொக்கென உன்னி, அஞ்சி மறைந்தன. மாமரத்தின் இளந்தளிர்களை மிகுதியும் உண்டு கொழுமை பெற்றுள்ள குயில்கள் கருடன்

போலக் கூவின. இக்குரலோசையைக் கேட்ட கொடிய அர வங்கள் கருடன் வந்ததெனப் பெரிதும் அஞ்சித் தம் புற்றி னுள் நுழையத் துவங்கின. மூங்கில்களினின்று சிதறும் முத்துக்கள் மேல் நோக்கிச் சென்று கீழே விழும் இயல், மேகத்தினின்று பனிக்கட்டிகள் கீழே விழுவதுபோலத் தோன்றிற்று. வெண்ணிற வட்டப் பளிங்குக் கற்களின் பிளவுகளில் செந்நிறக் காந்தள் முளைத்தெழுந்தொளிர்ந்தது, வெள்ளியினுற் செய்த தகழியில் ஏற்றப்பட்ட ஒளி பொருந் திய விளக்கென மிளிர்ந்தது. இன்னணம் அவர்கள் மனத் தைக் கவர்ந்த இயற்கை அழகுகள் பலவாகும்.

தம் வாழ்வில் என்றுங் காணுத இவ்வியற்கை வனப்புக் கள் வைதேகியாருக்குப் பெரிதும் இன்பமூட்டின. இன் னும் அவருக்கு இன்பமூட்டவேண்டுமெனக் கருதிய காகுத் தர், "வாட்படையை ஒத்த கண்களையுடையவளே! உன் நறு மணமுள்ள கூந்தலையொத்த கொண்டல்களையும் உன் தோளை யொத்த மூங்கில்களையும் பாராய்! இவ்வன்னங்கள் உன் நடை யைக் கற்க உன்னைத் தொடருகின்றன போலும்! திருப்பாற் கடல் ஈந்த அமுதத்தைப் போன்றவளே! காண்போர் கண் களைக் கவரும் செவ்வாயும் பச்சை நிறம் பொருந்திய உடலு முடைய கிளிகள், செங்காந்தள் புஷ்பங்களில் வைகியிருப்பது செந்தாமரை போன்ற உன் முன் கையில் தங்கிய சுகங்களே னக் காண்பதை நோக்குவாய்! இங்குள்ள இள மான்கள் உன் விழியைக் கண்டு தங்களினமென உன் அருகில் வரு கின்றன," எனப் பலவாறு மைதிலியாரைச் சிறப்பித்துக் கொண்டே சென்ருர்.

பின்பு அவர்கள், இருவினைகளையும் தம் தவப்பேற்றினுல் வென்ற முனிவர் பலர் வதியும் சித்திர கூடத்தை அணுகி,

3/03



பரத்துவாசர் பர்ணசாலையில் தங்கினார்கள். அன்று நடுப்பக லில் இலக்குமணன் அமைத்த தெப்பத்தைக் கொண்டு யமு னையைக் கடந்து மூவரும் பாலை வனத்தைச் சார்ந்தனர். 'அந்தோ! இம்மணற்காட்டின் வெப்பத்தை இளங்கொடியை யொத்த சீதை எங்ஙனம் தாங்குவள்!' என்று காகுத்தர் மன முளைந்தார். உடனே கொடிய வெப்பத்தை வீசாநின்ற சூரி யன், சந்திரனெனக் குளிர்ந்தான்; உலர்ந்த மரங்களும் தளிர்த் துத் தங்கள் தளிர்களைக் கொண்டு அவர்கள் களைப்பை மாற் றின. தீயைக் காலுகின்ற பரல்கள், மலரெனக் குளிர்ந்து மென்மையாகக் காணப்பட்டன; மேகங்கள் குளிர்ந்த நீரைத் துளித்தன; மிருகங்களையும், பட்சிகளையும் கொலைபுரிந்து திரி யும் வேடுவர்களும் அருள் நிறைந்த இருடிகளெனக் காணப் பட்டார்கள். முரட்டியல்புடைய காட்டு மிருகங்கள் சாது வாயின. ஆதலின், அப்பாலை வனத்தில் அவர்கள் இனிதே நடந்து சென்றார்கள். அங்ஙனம் செல்லுங்கால், சித்திர கூட மலையின் இயற்கைத் தோற்றங்களும், அமைப்புக்களும் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டன.

அம்மலையின் பெற்றியைச் சிறிது பகர்வது ஈண்டைக்கு ஏற்புடைத்தாகும். மலைக்கும் மக்கள் வாழ்விற்கும் மிக்க தொடர்பு உண்டு. மக்கள் உயர் நோக்கம், மன அமைதி, அறிவு விளக்கம், இறை உண்மை முதலிய விருப்பங்களைப் பெறுதற்கு மலை வாழ்வு இன்றியமையாததாகும். மலையே மன்னுயிர்க்கு உயிர் நாடியெனினும் மிகையாகாது. கடவுள் நெறியை ஓம்பித் தம் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தக் கருதிய பெரியோர் பலரும் மலை வாழ்வையே விரும்பியிருந் தனர். இஞ்ஞான்றும் விழுமிய ஞானம் வாய்ந்த முனிவர் பல் லோர் மலையில் வதிகின்றனரென அறிகின்றோம். இத்தகைச்

THE KUPPUSWAMY SASTRI

சிறப்புக்கள் பல இயற்கையாகவே அமையப் பெற்ற காடடர்ந்த பசு மலைகளில் ஒன்ருகிய சித்திரகூட மலை அவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தது.

மிக்க உல்லாசத்துடன் வழி நடக்கும் காகுத்தரும் மைதிலியாரும் வானளாவி நிற்கும் அப்பிறங்கலை நோக்கினர். அழகும் மடமையும் வாய்ந்த இளம்பெண் வடிவங் கொண்ட கன்னியாராசி, ஓங்கி வளர்ந்துள்ள மூங்கிலினிடத்துப் பதியும்போது, கழைக் கோலின்மேல் நடிக்கும் பெண்ணெனக் காணப்பட்டது. தெங்கின் இளநீர்க் காய்கள் விழுதலால், அருகிலிருந்த இரத்தினக் கற்கள் பல சிதறுண்டன. அவைகளை நெருப்புத் துண்டங்களெனக் கருதி, யானைகள் அஞ்சி விலகிச் சென்றன. அழகிய கமுகமரத்தின் வெண்ணிறப் பாளைகள், இரு மருங்கும் வெண்கதிர்ச் செல்வனுக்கு வெண் கவரிபோன்று அசைந்துகொண்டிருந்தன. ஓவாது விரைந்தோடும் காளுறுகளின் நீர்த் திவலைகள் தன் மீது துளிப்பதால், வெப்பத்தை இயற்கையாகக் கொண்ட சூரியனும் குளிர்ந்து தோன்றினன். அம்மலைமீதுள்ள வரையாடுகள், ஒன்ருேடொன்று உந்திக்கொண்டு வானத்தைத் தாவி விளையாடின. காந்தள் மலர்களில் படிந்துபடிந்து எழும் வண்டுக் கூட்டங்கள் மகளிர் ஆடும் கழற்காயெனக் காணப்பட்டன.

ஏலக் கொடிகளும், பச்சிலை மரங்களும் நிறைந்துள்ள மலைச் சாரல்களில் உறங்கும் காள மேகங்களுக்கும் யானைகளுக்கும் வேற்றுமை தெரிந்திலது. யானைகளையும் விழுங்கக் கூடிய பெரிய மலைப் பாம்புகள் உரித்த உடல் உரிவைகள் மூங்கில்களிற் சிக்குண்டு அசைந்தன. அவை அயோத்தி அரச மாளிகையிற் கட்டப்பட்ட வெண்ணிறத் துகிற் கொடிகளெனப் பொலிந்தன; அங்குள்ள வரையாடுகள் மரகதக்

கற்களின் ஒளியால் சூரியன் தேரிற் பூட்டிய பச்சைப் பரிக ளெனப் பிரகாசித்தன. தீம்பாற் கவளமென வானத்தி லூரும் அம்புலி, செல்ல வேறு நெறியின்மையின், விண்ணள வும் ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரத்தினூடே மிக்க சிரமத் துடன் போந்தது. களிறுகள், மலை முழைகளிலுள்ள தேன் கூட்டில் மொய்த்துக்கொண்டிருக்கும் வண்டுகளைத் துரத்தி விட்டு, அத்தேனை எடுத்துத் தம் பிடிகளுக்கு மிக்க அன்புடன் கொடுத்தன. முத்தொழிலையுமுடைய ஈசுவரன், தன்மாயையி னால் ஒருவருக்குந் தோன்றாது மறைந்திருப்பினும், புலன் களைப் பொறிகளின் வழிச்செலுத்தாது அடக்கித் தவஞ்செய் யும் உண்மைத் துறவிகளுக்குத் தோற்றுமவிரானன்றோ? அதைப் போன்றே, தாங்கள் ஒளித்திருப்பினும் தங்கள் உருவத்தை வெளிப்படுத்தும் பளிக்கறைகளில் குதிரை முக முள்ள சில தெய்வ மக்கள் புலப்பட்டார்கள். ஓங்கி வளர்ந்த தழைகளினால் தாக்குண்டு சொரிகிறதேன், கவலைக்கிழங்கைக் கல்லி எடுத்த குழிகளை நிரப்பியது. கடுவன்களோடு களிப் புடன் நீராடும் மந்திகள் அருவி நீரை அக்கவிகளின்மீது தெளித்தன. அக்கவிகள் மிக விரைவாக மலைமீதிவர்ந்து, அங்குள்ள காள மேகத்தைக் குலுக்கி மந்திகளின்மீது நீர் துளிக்கச் செய்தன. அக்காட்சி பிராட்டியாருக்கும் காகுத் தருக்கும் மிக்க வியப்பைத் தந்தது. மாணிக்க மணியா லியன்ற கற்பாறைகள், பலசூரியர்கள் உதித்தாலென மிளிர்ந் தன. தினைப்புலங் காக்கும் வேற்படை ஒத்த கண்களமைந்த மகளிர், குருவிந்த மணிகளைக் கொண்டு ஆண்டு வரும் பறவைகளைத் துரத்தினர். அவைகள் ஆகாயத்தினின்றும் விண்மீன்கள் உதிர்ந்தனவெனக் கீழ்நோக்கிவந்தன. கோங்கு முதலிய மரங்களிற் கட்டிய ஊஞ்சல்களில் ஆடும் குறிஞ்சி

நில மகளிரின் குறிஞ்சிப் பாட்டைக் கேட்டானந்திக்கப் பல அசுணப்பறவைகள் ஆங்குக் குழுமின. அம்மலையினுச்சியில் இளஞ்சூரியன் தங்கும்போது, அம்மலை தங்கத்தினலாய மகுடத்தைத் தரித்ததுபோன்றிருந்தது. செந்நிற மலர்க் கொத்துக்களைத் தாங்கிய மரங்கள் பல அச்சோலையில் நெருங்கியிருந்தன. அவைகள் காண்போருக்கு நெருப்புப் பற்றி எரிவதெனத் தோன்றின.

அறிவு முற்ருத யானைக் கன்றுகளும், செந்தண்மை பூண்ட தவசிகளுடன் சேர்ந்திருந்தமையின், சிறந்த ஞான மடைந்திருந்தன. அதன் பயனுக அவைகள் தங்கள் துதிக் கைகளில் அருவி நீரை முகந்து வந்து அத்தவசிகள் கமண்ட லங்களில் விட்டுதவின. மூப்பு முதிர்ந்த நிறைமொழியாள ருக்குக் கடுவன்கள் வழி காட்டின. அந்தணர் ஓம குண்டத்தி லுள்ள அக்கினியை, மயில்கள் தம் இறகுகளை வீசி எரியச் செய்தன. அங்குள்ள தவசிகளுக்கு, பலாமுதலிய கனிகளைக் குரங்குகளும், கவலை முதலிய கிழங்குகளைப் பன்றிகளும் கொடுவந்து அன்புடன் கொடுத்தன. செவ்விய அலகுடைய அஞ்சுகங்கள் மூங்கில் அரிசிகளைக் கொணர்ந்து முனிவர் களுக்கீந்தன. யானைகளையும் விழுங்கக் கூடிய பெரிய மலைப் பாம்புகள் கற்றுத் துறை போயவர்களெனத் தவசிகள் தங் கள்மீது கால் வைத்து ஏறத் தங்கள் உடலங்களை அவர்களுக் குதவின. நாள் முழுதும் தன் கடமையைச் செவ்வனே ஆற்றி மாலை இளைப்பாறப்போதரும் பகலவன்றன் செவ்விய ஒளியினுல் அம்மலையின் மேற்கூறு, செம்பஞ்சுக் குழம்பு நிரம்பியதென இலங்கியது. பின் யாவருக்கும் இன்னிலவு அளிக்கும் சந்திரன், செங்கோன்மையுடைய அரசனது வெள்ளிய கவிகையெனத் தோன்றினன். அவ்வந்திப்போதில்

தங்கள் பொலிவைப் பெண்கள் கவர்ந்துகொண்டார்கள் என்னுமாறு தாமரைகள் கூம்பின. வானவெளியில் நட்சத்திரங்கள் பொலிவன போன்று, நீர் நிலைகளில் ஆம்பல்கள் அலர்ந்தன. மந்திகள் மரங்களை நாடிச் சென்றன. பறவைகள் பஞ்சரங்களைத் தேடிப் பறந்தன. இன்னணமாகிய இயற்கை யழகுகளும் தெய்வத் தன்மையும் அவர்களுக்குப் பெரிதும் இன்பமூட்டின.

வைதேகியார் இவைகளைக் காணுந்தோறும் புதிய இன்பத்தைப் பெற்றவர் போன்று மகிழ்ந்தனர். தமக்குண்டான ஆனந்தத்தைத் தாங்கக் கூடாமையின், அவர் பின் வருமாறு தமக்குள்ளே சிந்திக்கலாயினர்: "இத்துணை இன்ப வளங்களைக் கண்டு களிக்காத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாமா! இறைவனுடைய உண்மை அறிவும், அருளும், தோற்றமும் தெளிய உணர்தற்குச் சிறந்த கருவி இவ்வியற்கை அழகே அன்றே! இவ்வியற்கை இன்பத்தில் மூழ்கிய இருடிகள் மற்றைய செயற்கை இன்பங்களைத் துறப்பது அரிதோ! அஞ்ஞானத்தில் மூழ்கித் தக்க ஆராய்ச்சியின்றிக் கடவுள் இல்லையென வாய்ப்பறை சாற்றுபவரும், இவ்வழகிய தோற்றங்களைக் காணின், தம்மை அறியாமலே கடவுள் மாட்டு அன்பு செலுத்திக் கை குவிப்பாரே! இவனுறையும் தவசிகளைத் தன் வயப்படுத்தவே கடவுள் இங்ஙனம் இயற்கையுடன் கலந்து ஒளிருகின்றனன் போலும்! செயற்கைத் திறம் வாய்ந்த நகரத்திற்கும், இயற்கை வனப்பு இயைந்த வனத்திற்குமுள்ள வேறுபாட்டை இன்றன்றே யான் உணர்ந்தேன்! செயற்கையினாலேயே ஒளிரும் நகரத்தின் காட்சியை, இயற்கையிற்றிகழும் வனத்தின் காட்சிக்கு எவ்வாறு ஒப்பிடுவது! மேருவுக்கும் அணுவுக்கும் உள்ள வேறு

பாடு அன்றோ தோன்றும்! எம்மைக் கானகத்தில் விடுத்த மாமியார் கைகேயியாரின் கருணையை யான் என்னென் பேன்! தம்பியாராகிய பரதருக்கு இச்செல்வம் வாய்த்தி லதே! அரச பாரத்தைத் தாங்கிக் கிணற்றுத் தவளைகள் போன்றிருக்க வேண்டிய யாங்களன்றோ இவ்வின்பத்தை அனுபவிக்கும் பேற்றி வாய்ந்தோம்! இவ்வியற்கைத் தத்து வங்கள் யாருக்குத்தான் உயர்ந்த அறிவையூட்டா! சான் றோர் நெஞ்சம்போன்று பாயும் தெளிந்த அருவி நீரும், உல கப் பற்றற்றவரெனத் தாமாகப் பழுத்து வீழும் கனிகளும், கதிரவன் வெப்பத்தைத் தவிர்க்கும் கவிகையை ஒத்த குளிர்ந்த மர நிழலும், களங்கமற்றார் மனத்தைப் போன்று ஒளிரும் வெள்ளிய நிலவும் எவருக்குத்தான் சத்துவத்தை ஊட்டி மற்ற இரண்டையும் போக்கா! மதியூகியர் பலர் ஒருங்கு கூடி, தம் வாணாள் முழுதும் முயன்றிடினும், இவ் வியற்கைத் தோற்றத்தில் சில கூறுகளையேனும் நிரல்பட இயற்ற அவர்தம்மால் இயலுமா! இறைவன் பெற்றியின் திறம் என்னே! இறைவன் தன் அருள் முழுவதையும் இவ்வனத்திலேயே வாரியிறைத்துவிட்டனன் போலும்! ஈங்கன்றோ கடவுளின் வன்மையும் உண்மையும் உருவம் பெற்று விளங்குகின்றன! அந்தோ! இவைகளைக் காணாது பல பேர் தம் காலத்தைக் கொன்னே கழிக்கின்றனரே! இன்றே யாங்கள் பிறந்ததன் பயனடைந்தோம்!" என்று பலவாறாக எண்ணிப் பிராட்டியார் தம்முள்ளே இன் புற்றனர்.

நம் அன்னையாருக்கு இயற்கையழகில் இருந்த இன்பப் பெருக்கின் மாண்பென்னே! இயற்கைப் பொருளிலேயே இறைவன் நன்கு வெளிப்பட்டு மிளிருகின்றான் என்பதே

அவர் தேர்வு. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளுக்கு இயற்கையின் புறப் பொருள் உடலும், இயற்கையின் அகப் பொருள் உயிருமென்பதை அவர் நன்குணர்ந்திருந்தனர். ஆதலால், அவ்வியற்கையழகில் அவர் நெஞ்சம் பெரிதும் ஊன்றி நின்றது. ஒவ்வொன்றின் இயல்பையும் அதன் மூல மாக வெளிப்படும் கடவுள் காட்சியையும் அவர் கூர்ந்து கூர்ந்து நோக்கினர்; இறையின் மாண்பை உன்னி உன்னி உருகினர். மேல் நோக்காகச் செல்லும் பலருக்குப் பயனற்ற தாகப் புலப்படும் அப்பொருள்கள் அவருக்கு அத்துணைச் சிறப்புடையனவாய்த் தோன்றியதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அவர் இறைவன் மாட்டு வைத்திருந்த அன்பே அதற்குக் காரணமாகும். இயற்கை வனப்பின் உண்மையை அறியும் அறிவு ஒரு தனிப்பட்ட அறிவாகும். இவ்வறிவை உயர்ந்த கல்வி வாய்ந்தவர்களிலும் பல்லோர் பெறுவதில்லை. யார் இயற்கையின் இன்னலமுணர்கின்றனரோ, அவரே இறையின் இங்கிதம் உணர்வர். இது பனுவல் துணிபு. அவ் வுணர்ச்சியையூட்டும் கல்வியே கல்வியெனப்படும். இங்கு,

> "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றா டொழாஅ ரெனின்?" —திருவள்ளுவர்

என்னும் பொய்யா மொழியை நோக்குக. ஆகவே, அவ்வறி வின் திட்பத்தை நம் அன்னையார் பெற்று இன்புற்றனர். இதுவே மக்கள் உடலுக்கும் உயிருக்கும் சிறந்த பெற்றி யைத் தருவதாகும்.

காகுத்தரும் இவ்வனப்பினால் கழிபேருவகை கொண் டிருந்தனர். இயற்கை இன்பத்தில் திளைத்திருந்த காகுத் தரும், பிராட்டியாரும், இளவலும் முனிவர் பலரால் வர வேற்று உபசரிக்கப்பட்டனர். பின் இலக்குமணன் அழகுபட

அமைத்த பர்ணசாலையில் சதிபதிகள் இருவரும் யாதொரு பருவரலுமின்றி உவகையுடன் வீற்றிருந்தார்கள்.

பரதன், தன் தமயனாரை எங்ஙனமேனும் நாட்டிற்கு அழைத்து வந்து அரசராக்க வேண்டுமெனக் கருதிக் காட்டிற்குப் புறப்பட்டான். அவன் குகனால் ஸ்ரீராமபிரானார் உறையுளை உணர்ந்தனன். சித்திரகூடப் பர்வதத்தை அணுகிய பரதன், தவவேடங் கொண்ட சகோதரர்களையும், தழைக் குடிலில் தன்னந்தனியராய் வீற்றிருந்த பிராட்டியாரையுங் கண்டு அடைந்த வருத்தம் அளவிடற்பாலதன்று. அவன் கைகளை முகத்தில் மோதிக்கொண்டு சீதையாரின் திருவடிகளில் வீழ்ந்து, இளங்குழவியென விம்மிவிம்மிக் கதறினான். பிராட்டியாரின் வன வாழ்க்கையும், தவ வேடமும் கைகேயிக்கே மனமாழ்குதலை உண்டாக்கியது. அங்ஙனமாயின், மற்றவரைப்பற்றிப் பகர்வது என்ன!

பின்பு சக்கரவர்த்தியார் இவ்வுலக வாழ்க்கையை நீத்த செய்தி காகுத்தரால் ஜானகியாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவ்வார்த்தையைக் கேட்டு அவர் துணுக்குற்றனர்; அலறினர். அவர் தாமரை போன்ற விழிகள் நீர் சொரிந்தன. அவர் மனங் கலங்கிற்று. அவர் மாமியாரைப் பார்த்துப் பெருமூச்செறிந்தனர்; தேம்பினர்; இசைப்பாட்டெனப் பலவகை விழுமச் சொற்களை அவர் வாய் அரற்றியது. கணவர் மாட்டுக்கொண்ட கெழுமிய அன்பினாலும், இயற்கைத் தோற்ற இன்பத்தினாலும் துன்பம் ஒரு சிறிதுந் தோன்றாது வாழ்ந்த பிராட்டியாருக்கு அது பெருங்கவலையைத் தந்தது. அவருக்கு இனிவரப்போகும் பருவரல்களுக்கு இதுவே கால்கோளாகும். இருடிகளின் இல்லக் கிழத்தியர் சீதையாரைத் தேற்றிக் கங்கையில் மூழ்குவித்து, இராமரிடம் சேர்ப்பித்தனர்.

பின்பு ஸ்ரீராமபிரானுர் பரதனுக்கு வேண்டிய நீதியையும் ஆறுதலையும் எடுத்தியம்பித் தம் பாதுகையை ஈந்து, அவனைச் சுற்றத்தினருடன் நகர் திரும்பச் செய்தனர்; "இனி நாம் இவண் உறையின், அயோத்தி மாந்தர் பலர் அடிக்கடி வந்து நம்மை நாடு திரும்ப வேண்டுவர்," என எண்ணி, மற்றவருடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டனர்.

## 12. சூர்ப்பநகை வரவு

அவணிருந்து நீங்கிய அம்மூவரும், அத்திரிமுனிவரின் ஆச்சிரமத்திற்றங்க நேர்ந்தது. முனிவர்கள் அவர்களை உபசரித்தார்கள். கற்பிற்கணியாகிய அனசூயையால், மைதிலியாருக்கு ஆடையணிகள் பரிசளிக்கப்பட்டன. 'பங்கயத்தில் வதியும் திருமகளே இவள்!' என யாவரும் போற்றும் வைதேகியாரை விராதன் என்னும் அரக்கன் ஆகாயத்தில் தூக்கிச் சென்ருன். காகுத்தர் அவனிடமிருந்து அவரை மீட்டனர். அவ்விராக்கதனுக்குப் பிராட்டியார் சம்பந்தத்திஞல் சாபம் நீங்கி முத்தி கிடைத்தது.

இவ்வாறு முனிவர்களுடைய ஆச்சிரமங்களிலேயே அவர்கட்குப் பத்து வருடங்கள் கழிந்தன. அவணிருந்து நீங்கி அவர்கள் பஞ்சவடியை அடைந்தார்கள்.

அவ்வமயம் இராக்கதர்களைக் குலத்தோடு நசிக்கச் செய்யப்போகிறவளும், செந்நிற மயிரையும் கோரமான பெரிய உருவத்தையும் உடையவளுமான சூர்ப்பநகை இராமருறையும் பர்ணசாலையை அணுகினள். அவள் மனம் ஸ்ரீராமபிரானுர் அழகில் ஈடுபட்டது. அவள் மிக்க வியப்பிஞல் ஓவியம் போன்று பரவசப்பட்டு நின்றனள். அவள்,

தன் மந்திரவன்மையினால் அழகிய பெண்ணுருவங் கொண்டு, தன்னை மணக்குமாறு காகுத்தரை இறைஞ்சினாள். ஸ்ரீராம பிரானார் அதை மறுத்தனர்.

அப்போது, இராக்கத வனத்தை மூலத்தோடு தொலைக்கத்தோன்றிய கற்புச் சுடராகும் மைதிலியார் பர்ண சாலையிலிருந்து வெளிப் போந்தனர். அவர் தெய்வத் தன்மை வாய்ந்த தேக ஒளியே சூர்ப்பநகை கண்களுக்கு முதலில் தோன்றிற்று. ஆகவே, 'இவள் இவ்வீரனுடைய வர்ழ்க்கைத் துணைவியாக இருப்பளோ! அங்ஙனம் இராள். இத்தகைய அழகு வாய்ந்த இல்லாளைக் காட்டிற்கு ஒருவன் அழைத்து வருவனோ! இவளைப்போன்ற உடலமைப்புப் பெற்ற ஒருவரும் இவ்வனத்திலில்லை; இவள் தாமரையை நீங்கி வந்த திருமகளாக இருப்பளோ! அழகுக்கு ஓர் எல்லை காண்பது அரிது! அரிது! இதற்கு இவளே சான்று. பெண்ணாகிய எனக்கே கண்ணும் மனமும் இவள் வனப்பில் பிணிப்புற்றன என்னில், ஆடவரைப்பற்றி என் பகர்வது! இவர்களிருவரையும் நான்முகன் அழகுக்கு எல்லையாகவே படைத்திருத்தல்வேண்டும். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஒப்பேயன்றி, வேறொருவரை இவர்களுக்கு உவமை கூறல் இயலாது. மின்னலென மிளிரும் உடல் நலம் பெற்ற இப்பேரழகி, காயா நிறம் வாய்ந்த இத்தூயவனுக்கு உரிய நாயகியாக இருக்கமாட்டாள். இவளும் என்னைப்போன்றே இவன் பேரழகில் ஈடுபட்டுவந்தவளாயிருப்பள்,'' என நினைத்தனள். ஆதலால், அவளைப்பற்றி இழித்து இராமரிடங் கூறவேண்டுமென்னும் எண்ணம் அவளுக்கு உதித்தது. ஆனால், பிராட்டியாரின் உடலமைப்பில் குறை ஒன்றும் செப்புதற்கு இயலவில்லை. ஆகவே, தன் இராக்கதக் குணங்கள் யாவற்றையும்

பிராட்டியாருக்குப் பொருந்தி, "இங்கு நிற்கின்ற இவள் வஞ்சனையில் தேர்ந்தவள்; மாயையில் வல்லவள்; இவள் மாய நெஞ்சாழம் அறியும் பான்மையதன்று; இவள் கொடிய செயல்களையுடைய அரக்கியாவள்," என்று இகழ்ந்து கூறினள். அவள் வஞ்ச மாயையை யுணர்ந்த காகுத்தர், "நீ கூறியவைகள் யாவும் உண்மையே," எனப் பரிகாச நகை புரிந்தார். தாம் மற்றவர்களை ஏமாற்றப் புரியும் படிறுகளைப் பிறர் உணர்ந்துகொள்ள மாட்டார்கள் என்பது அற்ப மாக்களின் நோக்கம். ஆனால், இத்தகையோர் கொள்கைகளையும் நினைவுகளையும் அறிவுடையோர் உணராமலிருப்பதில்லை.

பின்னுஞ் சூர்ப்பநகை, பிராட்டியாரைப் பயமுறுத்துதல் முதலிய பல காரியங்களைச் செய்தனள். ஆனால், ஒன்றும் பயனளித்திலது. முடிவாக வைதேகியாரிடம் அவளுக்குப் பொறுமை விஞ்சியது. ஆதலால், அவரை எடுத்துப் போக அவள் முயன்றனள். இக்கொடிய செய்கைக்காக இளவலால் அவள் அங்கம் பங்கப்படுத்தப்பட்டது. அவள் தூண்டுகோலால் கரன் முதலியோர் காகுத்தரை எதிர்த்துப் போர் புரிந்து உயிர் துறந்தனர்.

இவை யாவற்றையும் சூர்ப்பநகை இராவணனுக்குத் தெரிவித்தனள். "இராம இலக்குமணர்களாகிய அச்சிறு மனிதர்கள் உன்னை இவ்வாறு பரிபவஞ் செய்வதற்குக் காரணம் யாது?" என இராவணன் அவளை வினவினன். சூர்ப்பநகை தன் தமயனை நோக்கி, "பாற்கடலினின்று தோன்றிய திருமகளைப் போன்றவளும், ஒவ்வோர் உறுப்பும் தனித்தனி மிக்க செவ்வி வாய்ந்ததெனச் செப்பக் கூடியவளும், பொறுமையையே பூஷணமாகக் கொண்டவளுமாகிய ஓர் அழகி அவ்விரு மனிதர்களுடன் வதிகின்றனள். அவளைக்

கண்ணுற்றவுடன் அளப்பிலாச் செல்வமும், கம்பீரமும், அழகும் வாய்ந்த உனக்கே அவள் பொருத்தமானவள் என எனக்குத் தோன்றிற்று. ஆதலின், யான் அவளைத் தூக்கச் சென்றேன். அவ்வமயந்தான் இப்பங்கம் எனக்கு அம்மனிதர்களால் நேர்ந்தது,'' என்று வஞ்சக வார்த்தைகளை இயம்பினள்.

## 13. மாரீசனது மாயை

சூர்ப்பநகை நம் அன்னையாரின் ஒவ்வோர் அவயவத்திற்கும் தனித்தனி தக்க உபமானத்தைக் கூறி ஒப்பனைப் படுத்தினாள். அவ்வொப்பனைகள் இராவணன் மனத்தில் உருக்கொண்டு நன்கு பதிந்தன. 'எப்போது அப்பெண் மணியை அடைவோம்!' என்ற ஆர்வத்தினால் அவன் தன்னைத் தான் மறந்து, காதற் கடலிலமிழ்ந்தான். வேட்கை முறுகியெழுந்தது. பிராட்டியாரின் உத்தம உருவம் பன்முறை அவன் முன் தோன்றுவதுபோன்று பிரமித்தான். ஆதலின், ஒரு நாள் அவன் சூர்ப்பநகையை அழைத்து, "என்னெதிரில் தோன்றுகின்ற இவ்வுருவந்தானோ நீ கண்ட அவ்வழகி?'' எனக் கேட்டனன். அவள், இராமபிரானையே ஓவாது சிந்தித்துக்கொண்டிருந்தமையின், அவளுக்கு இராமரின் வீர வடிவே அங்கு உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது. ஆதலின், அவள் இராவணனை நோக்கி, "நம் எதிரில் காணப்படும் இவ்வுருவம் சீதையன்று; இராமரே,'' எனப் பகர்ந்தனள்.

" பொய்கின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்கின்ற கூர்வா ளவனே ருறநோக்கு நங்காய்!

மைந்நின்ற வாட்கண் மயிலின் றெனவந்தென் முன்னர்
இந்நின்ற வளாங்கொ லியம்பிய சீதை யென்றான்.

"செந்தா மரைக்கண் ணொடுஞ்செங் கனிவாயி னோடுஞ்
சந்தார் தடந்தோ ளொடுந்தாழ் தடக்கைக ளோடு
மந்தா ரகலத் தொடுமஞ் சனக்குன்ற மென்ன
வந்தா னிவனாகு மவ்வல்வி லிராம னென்றாள்" —கம்பர்

இராவணன் வைதேகியாரை ஒரு நாளும் கண்ணுறா விடினும், அரக்கி சொல்லிய வார்த்தைகளின் திரட்சியே அவன் உள்ளத்தில் உருவெனத் திரண்டு புறக்கண்களுக்கும் புலப்படலாயிற்று. இதனால், ஒருவருடைய ஊன்றிய நினைப்புக்களுங்கூட உருவம் பெற்று விளங்குமென்பதை அறிகின்றோம். அற்பப் பயனைத் தரும் இச்சிற்றின்பத்தினிடமாக உண்டாகும் நினைப்பின் மாட்சியே இத்தன்மைத்தெனின், என்றும் அழியாப் பேரின்பத்தையளிக்கும் ஈசுவரனிடமாக ஏற்படும் அன்பின் நீர்மையை என்னென்றியம்புவது! ஏன் இறைவன் உண்மை அன்பர்கள் எண்ணும் படிவத்தோடு அவர்கள் கட்புலனுக்குத் தோன்றமாட்டான்? மெய்ஞ் ஞானிகள் இவ்வின்பத்தை அனுபவித்து வருகின்றார்கள் என்பது சரதம்.

இராவணன் மாரீசனிடஞ் சென்று, சூர்ப்பநகைக்கு அவ்விரு சகோதரர்களால் நேர்ந்த இழிவைத் தெரிவித்து, அவணுள்ள சீதையைத் தான் அடைவதற்குத் தக்க உதவி புரியுமாறு அவனை இறைஞ்சினான். இவ்வடாத காரியத்தில் நுழையச் சிறிதும் மனமெழா மாரீசன், அரக்கன் வார்த்தையை மறுக்க வகையின்மையின், ஒருவாறு ஒப்புக் கொண்டான்.

அம்மாரீசன் பொன்னிற மான் வடிவங்கொண்டு, கண்டவர் கண்களைக் கவரும் அழகிய தோற்றத்துடன் பிராட்டியார்

முதலியோர் வதியும் வனத்தில் மிக்க கம்பீரத்தோடு உலவிக் கொண்டிருந்தான். ஆனால், அவன் மனம் நஞ்சு கலந்த நீரில் வதியும் மச்சமே என நடுங்கிற்று. அங்குறையும் இயற்கை மான்கள் பல அப்பொன்னிற மானைச் சூழ்ந்துவர, அது மிகவும் அழகாக ஆங்கு நடந்துகொண்டிருந்தது. தம் தாமரை புரையுங் காமர் கைகளால் மலர் பறித்துக்கொண் டிருந்த வைதேகியார், அதைக் கண்ணுற்றனர். அதனுடைய நிறமும் அழகும் அவரை வியக்கச் செய்தன. "இத்தகை மிருகம் ஒன்று உலகில் உண்டா! இதற்கு இஃது இயற்கை நிறந்தானு! அன்றி இது கைதவமா!" என அவர் நன்கு யோசித்தாரில்லை. இராவணனுக்கு முடிவு காலம் நெருங்கி விட்டமையின், நுட்ப விஷயத்தையும் ஆழ்ந்து நோக்கும் அன்னையார் அதில் ஊன்றிச் செல்லவில்லை. பயனற்ற அதனழகையே அவர் பெரிதெனக் கொண்டனர். தன் உட லொளியினுல் மிக்க தூரத்திலுள்ள இருளையும் ஓடி ஒளிக்கச் செய்யும் அம்மானைத் தமக்குப் பிடித்துத் தர வேண்டுமென அவர் காகுத்தரிடம் மன்ருடினுர். காகுத்தரும், அதன் வனப்பைப் பார்த்து மயங்கினுர். முனிவர்களின் வேண்டு தலை முடிக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டதன்ரே? ஆத லின், வாலறிவு வாய்ந்த ஸ்ரீ ராமபிரானுருக்கும் அம்மானின் உடல் வனப்புத் தவிர உள் வஞ்சம் ஒன்றும் புலனுகவில்லை. இளைய பெருமாள் அஃது இயற்கை மானன்று எனப் பல காரணங்களைக் காட்டி மறுத்தும், அஃது அவர்களுக்குப் பொருத்தமாகத் தோன்றிற்றிலது. "வஞ்சனை மிருகமாயின், இஃது என் அம்பிற்கு இரையாகும். இன்றேல், யான் கரு தியபடி இதை வைத்து வளர்க்கலாம். ஆதலால், இதைப் பிடிக்க முயலல் எவ்வகையினும் குற்றமன்று," என்று காகுத் தர் தீர்மானித்தார்.

இரு சகோதரர்களின் வழக்கிற்கிடையில் பிராட்டியார் தம் கணவர் அதைத் தமக்குப் பிடித்துத் தராமல் கால தாமதஞ் செய்கின்றனரே என வருந்தினர். உடனே சக்கரவர்த்தியாரின் திருமகனுர் மைதிலியாருக்கு இலக்குமணனைக் காவலமைத்துத் தாம் மானைத் தொடர்ந்து சென்ருர். அஃது அவரை வெகுதூரத்திற்குக் கொண்டுபோய்விட்டது. உடனே ஸ்ரீராமபிரானுர் அதை மாயமானென உணர்ந்தார். இராகவர் கருத்தை ஒருவாறு யூகித்த மாய மான் தப்பியோடக் கருதிற்று. ஸ்ரீராமபிரானுர் அதன்மீது அம்பெய்ய, மாய மானுன மாரீசன், "இலட்சுமணு! சீதா!" என்று மிக்க பரிதாபத்துடன் அரற்றிக்கொண்டே மண்மேல் விழுந்து உயிர் துறந்தான். உடனே அவன் இயற்கை வடிவம் வெளிப்பட்டது. அவன் மாயையை உணர்ந்த காகுத்தர் மிக வருந்திஞர். அப்போது தான் தம் தம்பியின் முன் யோசனையின் திறம் அவருக்குப் புலனுயிற்று. 'கொடிய அரக்கர்களால் சீதைக்கு என்ன தீங்கு நேருமோ!' என அவர் தயங்கிஞர் ஆயினும், தம் தம்பியின் காவல், அவருக்கு இடையூறு ஒன்றையும் உண்டாக்காது என்பது அவர் கொண்ட உறுதி. விரைவில் பர்ணசாலையை அடைவதே தகுதியென அவர் அவணிருந்து புறப்பட்டனர்.

அம்மாய மானின் ஓசையைக் கேட்ட பிராட்டியார், அது தம் தலைவரின் குரலே எனத் தீர்மானித்தனர். ஆதலால், விழுமக் கடலில் மூழ்கினராய், கொள் கொம்பற்ற கொடி போன்றும், இடி முழக்கங்கேட்ட அரவம் போன்றும் அவர் தரையில் வீழ்ந்து புரண்டழுதனர்.

"அறிவிலியாகிய யான் ஓர் அற்பமானை விரும்பி வாழ்வை இழந்தேனே! என்னைப் போன்ற மதிகேடி உலகில் உண்டோ!

பெண்புத்தி பின்புத்தி என்பதற்கு யானே சான்றானேனே! அறிவுடையோர் இதையறிந்தால், நகையாரோ!" எனத் தம்மைத் தாமே பெரிதும் வெறுத்துக்கொண்டனர். அவ்வபயக் குரலைக் கேட்ட இலக்குமணன் உடனே தன் தமயனுருக்கு உதவிபுரியச் செல்வன் என அவர் எண்ணினர். ஆனால் அங்ஙனம் நிகழாமையின், அவருக்குத் துயரம் விஞ்சியது. அவர் அசையாமல் தம் அருகிலேயே நின்ற மைத்துனனை நோக்கி, "இளவலே, குற்றமற்ற நமது தலைவருக்குக் கெடுதி நேர்ந்துள்ளதை நீர் அறிந்தும், இன்னும் என் அருகிலேயே நிற்கின்றீரே! இதுவோ உடன் பிறந்த தம்பியருக்கழகு!" எனப் பகர்ந்தனர்.

பிராட்டியார் அரற்றுதலைக் கேட்ட இலக்குமணன் அவரை நோக்கி, "கற்புக்கணியென விளங்கும் அன்னையீர், உலகத்தின் உயிர்கள் யாவும் ஒருங்கே திரண்டு வரினும், இராமர் ஒப்பற்ற வில்லின் முன்னிற்க முடியுமா? உலக ரக்ஷகராகிய அவருக்கு ஒரு சிறு கெடுதி நேரினும், உலகம் உடனே அழிந்து மாயாதோ? வீராதிவீரராகிய அவர் பிறரைத் துணைக்கழைப்பரோ? உம் இளகிய பெண்மனம் இதை ஆய்வதற்கு இடந் தந்திலது. அஃது இராக்கதன் இட்ட சத்தமேயன்றி வேறன்று," என்று பலவாறு தேறுதல் கூறினர். ஆயினும், அவ்வமயம் இளவல் உண்மைச் சொற்களை ஊன்றி நோக்கித் தெரியும் பொறுமை பிராட்டியாருக்கு ஏற்படவில்லை. இராமருக்கு ஏதோ ஒரு பெருவிபத்து நேர்ந்துவிட்டதென்பதே அவர் தீர்மானம். இலக்குமணன் நேர்மையும் சீலமும் அவர் மனத்தை விட்டு நீங்கின. அவனிடத்துஞ் சிறிது ஐயம் உதித்தது. கரை கடந்த துன்பமும் இன்பமும் மக்கள் அறிவை மறைத்தல் இயல்புதானே?

THE KUPPUSWAMY SASTRI

ஆகவே, வைதேகியார், இலக்குமணனை நோக்கிப் பதைபதைத்த மனத்தினராய், "தம்முடன் ஒரு நாள் பழகியவர்க்குத் தீமைநேரினும் சான்றோர் தம்முயிரையுங் கொடுப்பரே! உடன் பிறந்து பல நாட்பழகியும், உற்றசகோதரருக்கு நேர்ந்த விபத்தை நோக்காமல் நிற்கின்ற உம் நிலைமை நீதியுடையதாமோ? இச்செய்கை பூரியரும் புரிவரோ ? இஃது என்னாற் பொறுக்குந் தகைமையுடையதன்று. ஆதலின், யான் இப்போதே எரியிடை மூழ்கி உயிர் துறப்பன்," எனக் காட்டுத் தீயை நோக்கி அவர் சென்றனர். ஊழ் யாரையும் விடாதன்றோ ? அவர் மனம் அங்ஙனம் முரண்படவில்லையேல், இராவணன் முதலிய அரக்கர்களுக்கு அழிவு நேர்வது யாங்ஙனம் ? இங்குப் பெண்களின் அறியாமையைக் குறிப்பிப்பது இயைபுடையதன்று. இஃது இருபாலாருக்கும் உண்டாகக் கூடியதே.

> "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
> உண்மை யறிவே மிகும்." —திருவள்ளுவர்

என்பது பொய்யா மொழி ஆயினும், தேர்ந்த அறிவுடைய இவருக்கு இப்பிடிவாதக் குணம் இருத்தல் தகுதியுடையதாமா என்னும் ஆசங்கை நிகழலாம். இப்பிடிவாதக் குணம் பிராட்டியாருக்கு ஏற்பட்டதன் காரணம், இராக்கதர் சூழ்ச்சியை உணராமையும் தம் தலைவர் மாட்டுச் செலுத்திய அன்புமே ஆகும். அன்பிற்கும் அடைக்குந் தாழ் உண்டோ ?

ஆகவே, செந்தாமரைக் காட்டிற்றுவிச் செல்லும் அன்னமே போன்று, ஜானகியார் காட்டுத் தீயினிடங் கடுகிச் சென்றனர். அவரை இலக்குமணன் தடுத்து, அவர் அடி

களில் நிலமுற விழுந்து வணங்கிப் பின் வருமாறு புகன்றனன் : "உண்மையைச் சிறிதும் கூர்ந்து நோக்காது இடர்ப் படும் அன்னையீர், ஏன் நீர் உயிர் துறக்க வேண்டும்? இப் போதே யான் தமயனாரிடம் செல்கின்றேன் ; ஆனால், பெருமாள் கட்டளையைக் கடந்து என்னைச் செல்லுமாறு நீர் ஏவு கின்றீர்; அதனால், யாது தீங்கு வந்தணையுமோ ! அறியேன் ! என் செயலாம் ! உண்மை உணர்ந்த பின்னர் நீரே கவல்வீர் ! அந்தோ ! இன்னும் சிறிது போது தாழ்ப்பின், தமயனார் சுகமே இவண் போதுவர் ; பல பன்னியும் பயனென்னை ? உறுவது உற்றே தீரும் ! இன்றேல், கூரிய மதி வாய்ந்த நீர் இவ்வாறு முரண்படுவீரோ ? எல்லாம் வினை வழியன்றோ நடக்கும் ?" எனக் கூறிவிட்டு, "யான் இவணிருந்து நீங்காது இருப்பனேல், பிராட்டியார் தீயில் மூழ்கி உயிர் துறப்பர் ; இவரைத் தனியே விட்டுச் செல்லின், ஒன்னலர்களால் இவருக்கு யாதேனும் தீங்கு நேரவுங் கூடும் ; என் செய்வேன் ! காலக் கொடுமையென்னே ! காலச் சக்கரம் மக்களை எந் தெந்த விதமாகச் சுழற்றுகின்றது ! அது விரகறியாத் தூய உள்ளத்தையும் மாறுபடச் செய்ததே ! ஐயிர்க்கக் கூடாத இடத்திலும் அஃது ஐயத்தை விளைவித்ததே! வலிய வினையை விலக்க யாரால் கூடும் ! பழைய வினைப்பயனால் பிறவியெடுத்து அல்லற்படும் அறிவிலியாகிய யான், இவர் இறந்துபடுதற்குக் காரணமாயிருப்பதினும், இவண் விட்டு நீங்குவதே சால் புடைத்து," எனத் தனக்குள்ளே நிர்ணயித்துக்கொண்டு, அன்னையாரை நோக்கி, "உமக்கு யாதேனும் இடையூறு நேரின், கழுகரசராகிய சடாயு தம்மாலியன்ற உதவிபுரிவர்," என்றியம்பி, இராமபிரானார் ஏகிய வழியே நடக்கலானான். அவ்வமயம் இளவலுக்கிருந்த துயரத்தை அளந்து கூறல் இயலாது.

# 14. இராவண சந்நியாசியின் கொடுமை

ஸ்ரீராமரும், இலக்குமணனும் ஜானகியாரை விட்டு நீங்கியதையறிந்த இராவணன், வற்றிய உடலும் வளைந்த முதுகும் உடையனாய், முப்புரி நூலையும் தாமரை மணிகளாலாய தவமாலையையுந் தாங்கி, இளைப்பு மீதூர மெய்த்தவசியே போன்று இன்னிசைப் பாடலுடன் அருந்ததிக்கிணையாம் பிராட்டியார் வதியும் பர்ணசாலைக்குப் போந்தனன்.

அங்ஙனம் போந்த அவன், சாலைப் புறத்திலே நின்று, "இவண் உறைபவர் யார்?" என்று வினவினன். அக்குரலைக் கேட்ட வைதேகியார், தம் விழிநீரைத் துடைத்துக்கொண்டு வெளி வந்தனர். இராக்கதக் கைதவம் ஒரு சிறிது முணரா ஜானகியாரை அவன் தவ வேடம் மயக்கிற்று. அவனைச் செந்தண்மை பூண்ட நிறை மொழியாளனெனவே அவர் கருதினர்; ஆதலால், அவனை அன்புடன் வரவேற்று, பிரம்பாசனமிட்டு, இல்லறத்தோர் அதிதிக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்தனர். அழகு யாவும் ஒருங்கே திரண்ட தெனப் பவழக் கொடியே போன்று ஒளிரும் அன்னையாரை நேரே கண்டவுடன் இராவணனுக்கு முன்னிலும் வேட்கை விஞ்சியது. அவ்வமயம் அங்கிருந்த பறவைகளும் மிருகங்களும் செடி கொடிகளும் பின் நிகழப் போகும் கொடுமையை உன்னி நடுங்கின. ஆனால், வஞ்சக இராவணன் தீ நெஞ்சம் மாத்திரம் நடுங்கிற்றில்லை. அவன், அப்பர்ணசாலைத் தலைவர் இன்னாரென்பதையும் வைதேகியார் எவர் மகளாரென்பதையும் அவரைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். பிராட்டியாரும், அவன் வரலாற்றை அறிய விழைந்தனர்.

அதை அக்கயவன் பகரத் துவங்கினான் : "குபேர நாட்டிற்கு ஒப்பாகும் இலங்கைக்கு அதிபதி இராவணனென்ப

வன் ஒருவன் உளன். தேவர்களும், சூரிய சந்திரர்களும் அவன் ஆணைக்கடங்கி நடக்கின்றார்கள். அவன் பெற்றுள்ள திரண்ட செல்வத்தையும் வன்மையையும் நோக்கின், அவனிடம் இலக்குமியும் வீர மாதும் அடிமை பூண்டுள்ளார் எனக் கூற வேண்டி வரும். அவன் உறைவிடத்திலேயே யான் வதிகின்றேன். அவணிருந்தே இவண் போந்தேன்,'' என்றான்.

வைதேகியார் :—பரம சுத்த சீலராகிய தேவரீர், தரும சிந்தை சிறிதுமின்றிக் கொல்லுந்தொழிலேயே மேற்கொண்டு தீநெறியொழுகும் இராக்கதர்களுடன் வதியக்காரணம் யாது? புரையற்ற முனிவர்களுடன் உறைவதை ஏன் வெறுத்தீர்? உம் இயல்பிற்கு முரணானவர்களுடன் இருக்க எங்ஙனம் உம் மனமிசைந்தது? இது பெருவியப்பே!

இராவணன்:—மதி முக மங்கையே, இராக்கதர் குற்றம் ஆர்ந்தவர் என்பது பெரும்பாலோர் கருத்து; அவர்களைக் குறித்துப் பலர் பலவாறு கூறுவர்; அங்ஙனம் கூறல் தவறு. அவர்கள், தாங்கள் விரும்பியவர்களிடங் காட்டும் அன்பு அளவிடற்பாலதன்று; தங்கள் உயிரையும் அவர்களுக்கீயப் பின்னிடார். அவர்களே உண்மைத் தியாகிகள். கூர்ந்து நோக்குழித் தேவர்களைக்காட்டிலும் அவர்கள் கொடியவர்களல்லர். அவர்களுக்கு எவ்விதத்திலும் தீங்கிழையாா எம்போலியர்க்கு அவர்களே சான்றோர்களாவார்கள்.

வைதேகியார் :—ஆ! ஆ! ஈதென்ன புதுமை! நீதியைச் சிறிதும் ஓராது பிறரை அலக்கழிக்கும் அரக்கர்களைச் சான்றோரென்கிறீரே! எம்முனிவரும் இவ்வாறு இயம்ப யான் என்றுங் கேட்டிலனே! கூடியமட்டும் புனித வாழ்வை நடாத்தும் தேவர்களை நீர் பழிப்பதற்குக் காரணம் யாது? நீர்

புகலும் இஃது இழிவு நவிற்சி போலும்! ஆனால், அடியேன் இவ்வார்த்தைகளை உண்மையென நம்பும் குழந்தையறிவைப் படைத்தேனல்லேன். தீயவர்களுடன் சேர்ந்தவர்களும் அத்தீய தொடர்பையுடையவர்களே ஆவார்கள். அறிவு இனத்தியல்பதாகுமன்றோ?

இராவணன் :—உனக்கு உலகானுபவந் தெரியாமையின் நீ இங்ஙனம் பகருகின்றனை. அவர்கள் மாட்டு அழுக்காறு கொண்டவர்களே இவ்வாறு பிதற்றுவார்கள்; அவர்களைப் போன்று இந்திரியங்களை யடக்கித் தவஞ் செய்ய எத்தேவர்களால், அன்றி முனிவர்களாலாகும்? அவர்களுக்குற்ற தேக வன்மை, மனத்திட்பம், செல்வச் சிறப்பு மற்ற யாருக்குண்டு? மும்மூர்த்திகளும் அவர்கள் முன் என் செய்ய முடியும்? அவர்கள் இயல்பை உள்ளவாறு உணரும் வாய்ப்பு அநேகருக்கு நேர்வதில்லை.

வைதேகியார் :—அவர்கள் தவமும், இந்திரிய அடக்கமும், மனத்திட்பமும், செல்வமும் எவ்வழியில் உபயோகிக்கப்படுகின்றன? நீர்க் குமிழி போன்று தோன்றி மறையும் உலக வாழ்வைப் பெரிதெனக் கருதும் அறிவிலிகளல்லவா அவர்கள்? உடலையும் உயிரையும் உடற்றும் தவமியற்றி அவர்கள் கேட்கும் வரங்கள் யாவை? கேவலம் தேக வன்மையும் செல்வமுமல்லவோ? கனிந்த பலாக் கனியை விட்டு, வேப்பங்கனியை உண்ணும் காகத்திற்கன்றோ அவர்களை ஒப்பிட வேண்டும்? அந்தோ! இறைவனருளை அடையத் தங்கள் தவத்தை உபயோகிக்கில், அவர்கள் எத்துணை நன்மையை அடைந்திருப்பார்கள்! அவர்கள் பெற்ற பேறுகள் யாவும் நீதியற்ற அரக்க முறையிலன்றி வேறெவ்வகையில் பயன்படுகின்றன? இத்தகைய அரக்கர்களை ஒழிக்கவே சக்கர

வர்த்தியாரின் திருமகனார் இங்குத் தவஞ் செய்கின்றார். அவ்வினை முற்றுப் பெறில், தீயவர் முடிந்து, உலகிற்கு நன்மை உண்டாகும்.

இராவணன் :—வன்மையற்ற சிறிய மனிதர், தேவரையும் வெல்லும் மேதாவியராகிய அரக்கரைத் தொலைப்பர் என்றனை ! இது, மிக்க மதமும், வன்மையுங் கொண்ட யானை இனத்தை ஒரு சிறு முயலும், வளர்ந்த உகிருடைய சிங்கங்களை ஒரு மான் குட்டியும் கொன்றுவிடும் என்னும் கூற்றுக்கு ஒப்புடையதாகும்.

வைதேகியார் :—யான் செப்புவது ஒரு போதும் பொய் அன்று. சமீபத்தில் நடந்த சம்பவத்தையே யானியம்புகிறேன். கொடிய விராதனும், சூர்ப்பநகைக்காகப் பரிந்து வந்த கரன் முதலிய பல அரக்கரும் ஸ்ரீராமபிரானால் தொலைந்தொழிந்ததை நீர் அறியீர் போலும்! இலங்கையில் வதியும் தீச்செய்கையிற் கைதேர்ந்த அரக்கர் அழிவுற்றுத் தேவர் இன்பமடைவதை இன்னுஞ் சில நாட்களிற் பார்ப்பீர். மறம் அறத்தை வெல்லுமா ? காகுத்தர் நாடு துறந்து காட்டிற்கு வந்ததன் காரணம் இதுவே என்பதை முனிவர்களில் உணராதார் யாவர் ?

இராவணன் :—வில் வன்மையற்ற விராதன் முதலிய சிலரை அழித்ததனாலேயே மானிடர் வீரமுடையவரெனச் செப்பிய உன் வார்த்தைகள் மிக அழகியன ! அம்முடிவை விரைவில் நீயே காண்பாய் ; இராவணன் இருபது தோள்களினின்றும் வீசும் காற்றே நீ இயம்பிய மனிதரைப் பூப் போல வீயச்செய்யும். இவ்வுலகம் முழுவதையும் தலைகீழாகச் செய்தற்கும் கடலைக் கலக்குதற்கும் அவ்விராவணனால் முடியும் என்பதை நீ அறியாயோ ?

வைதேகியார்:—தோள்கள் பல பெற்றிருப்பதனாலேயே ஒருவர் வன்மையுற்றவர் என இயம்பல் இயலுமோ? அந்த இராவணனைச் சிறையிட்ட மிக்க வலி படைத்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஆயிரந் தோள்களையும், இரண்டு தோள்களையுடைய பரசுராமர் தம் சிறு வயதில் கோடாரிப் படையால் வெட்டிக் குவிக்கவில்லையோ? அப்போது அந்த அரக்கன் என் செய்தான்? அப்பரசுராமரே என் தலைவரிடம் பரிபவப்பட்டாரெனில், இவ்விராவணன் காகுத்தரிடம் என் செய இயலும்?

இவ்வார்த்தைகள் செவி நுழைந்தவுடனே, இராவணன் கண்கள் தீயுமிழ்ந்தன; அவன் உடல் ஓங்கி வளர்ந்தது; முடிகள் ஆகாயத்தை முட்டின; பற்கள் இடியோசையை உண்டாக்கின; கைகள் ஒன்றோடொன்று அறைந்துகொண்டன. இக்கோபக் கொடுமையால், அவன் வஞ்சனையாற் கொண்டிருந்த தவ வேடம் உடனே அவனை விட்டு நீங்கிற்று. அப்போதுதான் பிராட்டியாருக்கு அவன் மாட்டு ஐயமுதித்தது. "இவன் இரு வினைப் பற்றுக்களையும் விட்ட துறவிகளில் ஒருவனல்ல போலும்!" என்று பிராட்டியார் அயிர்த்துக்கொண்டிருக்கும்போதே பெருங்கோபத்தினால் படம் விரித்து மீதெழும் அரவமெனத் தன் உண்மை உருவத்துடன் இராவணன் வெளிப்பட்டான். அந்தோ! ஜானகியார் என் செய்வார்! பாவம்! தாம் முன்பென்றுங் கண்டிராத அவ்வுருவம் அவர் மனத்தைக் கலக்கிற்று. அவர் துணுக்குற்றனர். "எங்ஙனம் இவனை இவணிருந்து அகற்றுவது!" என்று சிறிது நேரம் யோசித்தனர்; அவருக்கு ஒன்றும் புலனாகவில்லை. அவர் ஆண் சிங்கத்தினிடம் அகப்பட்ட மான் குட்டி போலானார். தமக்கு அணியும், ஆடையும், உடலும், உயிரும்

கற்பே என்றும்; அதற்கு யாதொரு தீங்கும் நேரா வகை காப்பதே தம் இன்றியமையாக் கடமையென்றும் கருதும் பெண்ணரசிகளில் அவர் தலை சிறந்தவராவர்; அத்துணை உயர் நோக்குடைய அவர் அற்ப எண்ணத்தைக் கொண்ட ஒரு கயவனிடம் அகப்பட்டுக்கொள்ளின், அவர் மனம் என்ன பாடு படும்! ஐயோ! அவர் நிலைமை இயம்புதற்கும் எண்ணு தற்கும் இயலுமோ? இராமபிரானுர் பொருட்டு முன்னரே துக்கத்திரையில் அலைப்புண்ட பிராட்டியாருக்கு எதிர்நோக்கா இக்கொடிய இன்னலும் நேர்ந்ததே! 'பட்ட இடத்திலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்னும் பழமொழி இங்கு நோக்கத் தக்கது. அவர் பாம்பின் வாய்த் தேரையெனவும், எமன் கை உயிரெனவும் நடுங்கினுர்.

**இராவணன்:**—தேவரையும் நடுங்கச் செய்யும் என் வன்மையை இகழ்ந்து பேசியவள் நீ ஒருத்தியே. மூன்று உலகங்களும் கேட்டற்கும் அஞ்சும் என் வீரம், அற்ப மனிதர்களால் அழியும் என அரற்றிய உன்புலமை எத்துணைச் சிறப்புடைத்து! நீ பெண்ணென்றல்லவோ என்னை இவ்வாறு இகழ்ந்த நாவை யான் குறைக்காது விட்டேன்? அதினும்,உன் மாட்டுப் பொதிந்த வேட்கையன்றோ என்னை இடை நின்று தடுக்கின்றது? உன்னை யான் இப்போதே பிசைந்து தின்பேன்! அங்ஙனமாயின், என் உயிரும் நீங்குமே என அஞ்சுகின்றேன். அன்னம் போன்றவளே, அஞ்சாதே! நீ என் சிறந்த வாழ்க்கையை விரும்பு. இதுகாறும் ஒருவரையும் வணங்காத முடிகளின்மீது யான் உன்னைத் தாங்கித் திரிவன்; தேவ மாதர் உன் திருவடிகளை வணங்கி ஏவல் புரிவர். எனது குபேர செல்வம் முழுதும் உன்னுடையதேயாகும்.

இது கேட்ட வைதேகியார் தம் செவிகளை இறுகப்பொத்திக்கொண்டு, " இனி நாம் இவ்வற்பப் பதருக்கு அஞ்சுவதில்

பயனின்று ; இவன் ஆகுலச் சொற்கள் நம்மை என் செயும்! இவ்வமயம் நாம் நமது மனத் திட்பத்தை விடல் கூடாது ; இவ்வற்பக் குணமுடைய இவனும் ஓர் ஆண் மகனு! பிறர் மனையை நயக்கின்ற இவன் பேடையவனுவனே! இவனைப் போன்ற ஆயிரம் பேர் ஒன்று சேர்ந்து வரினும், நம் சீலத்தைக் கெடுக்க இயலுமோ! இது நம் வசப்பட்டதன்றே! நமது உயிரை வேண்டுமாகுலும் இவன் தொலைக்கட்டும்," என்று தமக்குள்ளே சிந்தித்துக்கொண்டு, மிக உறுதியாகச் சில இயம்பத் தொடங்கி, வில்வீரராகிய ஸ்ரீராமபிரானுர் பால் கற்பு நிலை பூண்ட என்னை அற்பனுகிய நீ விரும்புகின்றனை ; இது தேவர்களுக்கென ஆக்கிய அவிர்ப்பாகத்தை நாய் விரும்பல் போலாகும். இவ்வுடல் புல் நுனியில் தங்கிய பனித் துளி போன்று விரைவில் மாய்ந்தொழியும் இயல்புடையதன்றே? இதையொழிக்க அஞ்சி உயிர்க்குறுதி பயக்கும் நல் ஒழுக்கத்தை அறிவுடையோர் இழப்பரோ! ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்ததாக ஓம்பப் படுவதொன்றென்பதை உன் போன்ற புல்லறிவாளர் எங்ஙனம் உணர்வர்! ஸ்ரீராமபிரானுர் அம்பினுல் துன்புறுமுன் நீ இவண் விட்டு நீங்குவாய். உன் அரிய வரங்களை ஏன் வீணில் போக்குகின்றனை! உன் இலங்கை இன்பத்தை இழந்து இப்போதே இயமன்பால் நீ ஏக வேண்டா. இன்னும் சில நாட்கள் அநுபவிக்கக் கூடிய இந்திர போகத்தை இன்றே தொலைத்துவிட வழி தேடிக்கொள்ளாதே," என்று கூறினர்.

இது கேட்ட இராவணன், "என் வீரம் இத்தன்மையதென நீ ஓராமையினுலேயே இங்ஙனம் சொற்றனை. உன் கணவன் அற்ப அம்பு என் வன்மைமுன் என் செயக் கூடும்?

எனது வார்த்தையை நம்பு," என்று பல பிதற்றி, அன்னை யார் திருவடிகளில் விழுந்து இறைஞ்சினன்.

கோடியோனை அரக்கன் தம் அடியில் விழுந்தவுடன் பிராட்டியாருக்குப் பெரிதும் நடுக்கமுண்டாயிற்று. அவர் தம் தலைவரையும், மைத்துனனையும் பன்முறை கூவியழைத் தனர். ஒன்றும் பயன்பட்டிலது.

சிறிதுங் கருணையற்ற அரக்கன் பிராட்டியாரை நிலத் தோடு பெயர்த்துத் தன் தேரில் இருத்தினன். பாகனால் தேர் ஆகாய வழியே செலுத்தப்பட்டது. ஆனால், அவன் பிராட்டியாரைத் தீண்டவில்லை. இதற்குக்காரணம், நளகூபரர் அரம்பை முதலியவர்களால் அவன் பெற்றிருந்த சாபமே யாகும். மைதிலியார் கொலைத்தொழிலுடைய வேடன் கைப் பட்ட அஞ்சுகம்போலானர். அவனிடமிருந்து நீங்க வேறு வழி காணுத அன்னையார் தேர்த்தட்டில் விழுந்து புரண்டார்; பயத்தினல் நடுங்கினர்; துன்பத்தால் துடித்தார்; இளைப் பால் ஏங்கினர்; சிறிது தெளிந்து எழுந்தார்; "தரும தேவ தையே, என்னைக் காப்பாயாக," எனப் பெரிதும் இறைஞ்சி னர். பின்னும், "மலைகளே, மரங்களே, மயில்களே, சோலை களே, வன தேவதைகளே, எனக்கு அஞ்சலென்று அபயந் தந்து இத்துன்பச் செய்தியை ஸ்ரீராமபிரானரிடஞ் சென்று கூறீரோ!—கல்வியறிவிற்சிறந்த காகுத்தரே, இன்னலம் வாய்ந்த இளவலே, பண்பிற் சிறந்த பரத வள்ளலே, சத்து வம் நிறைந்த சத்துருக்கனரே, என்னை வந்து காவீரோ!" என்று அலறினர்.

இராவணனை நோக்கி, "வேறொருவனுக்குரிய மனை யாளைத் தான் காதலிக்கும் அறியாமை செப்பமுடையார் மாட்டுண்டாகுமோ? குற்றஞ் சிறிதும் ஓராது பிறர் இல்

லாளை விரும்புகிறவன் இறந்தவனுக்கு ஒப்பேயன்றோ? அவன் எத்துணைக் கீர்த்தி வாய்ந்திருப்பினும், யாது பயன்? அவன் செல்வமும், பெருமையும், வன்மையும் பகல் விளக்கென ஒளி மழுங்குமல்லவா? அவன் அச்சத்தினால், என்றும் அலறுவன். பழி பாவங்கள் அவனை விட்டு என்றும் நீங்கா! பிறர் மனையை மனத்திலும் கருதா இயல்பன்றோ அறிவும் ஆண்மையுமெனக் கூறுவது? அதுவே யாவற்றினும் சிறந்த பீடு. நீ காகுத்தருக்கு அஞ்சிக் கள்வன் போன்றன்றோ என்னைக் கொண்டு செல்கின்றனை? நீ வீரனாகில், உன் தேரை நிறுத்து! வரப்போகும் அரி ஏறுகளுடன் போர் புரி! நீ ஒளிக்கினும், ஓடினும், இராம பாணம் உன்னை விடாது. அஃது உன்னைத் தொடருமுன் என்னை இவண் விட்டு நீங்குதி; சிறு மனிதருடன் அமராடுவது இழிவும், அச்சிறு மனிதருக்குரிய கற்புடைப் பெண்ணை வஞ்சனையால் கவர்ந்துசெல்வது வீரமும் என நினைக்கும் உன்மதி என்னே! பாவிகளாகிய இராக்கதர்களுக்குக் குற்றம் என்றும் பழி பாவம் என்றும் உண்டோ!" என்று இழித்துக் கூறினார்.

இராவணன் பிராட்டியாரைத் தூக்கிச் செல்வதைக் கண்ட ஜடாயு அவனுடன் அமர்புரிந்தான்; இறுதியில் மூர்ச்சித்துக் கீழே விழுந்தனன். அப்பறவையரசன் வீழ்ச்சி, சீதையார்க்கு முன்னினும் பெருங்கலக்கத்தைத் தந்தது. அவர் சேவலைப் பிரிந்த அன்றிலெனை அரற்றினர். "என்னைக் காக்கும் துணை ஒருவன் உளன் என்னும் நம்பிக்கையும் அற்றது! வல் வில்லாளரான காகுத்தரையும் யான் வஞ்சமானின் பின் போக்கினேன்; புரையற்ற இளையோரையும் கடுஞ் சொற்களால் அகற்றினேன். எனக்காகப் பரிந்துவந்து போர் புரிந்த பறவையரசும் பொன்றினன். யான் நாணமற்று

அரக்கன்பின் செல்கிறேன். என் கொடுவினை இனியும் எத்துணை விழுமங்களைக் கூட்டுமோ! 'மானமழிந்த பின் வாழாமை நன்று,' என்பதை நூலளவில் நிறுத்திய என் அறிவின் மாட்சி என்னே! என்னால் இரவி குல திலகரின் கோதண்டம் மாசுற்றதே! இதற்குக் காரணம் யானேயன்றோ! பழி சுமந்த மனையாளைக்கொண்ட நாயகனுக்கு ஆண் அரிபோன்ற நடையின் பீடு வாய்க்குமோ! இதனால் அவனை ஒன்னலர் இகழ்வரன்றோ! தொல்புகழ் கொண்ட இரவி குலமும், ஜனககுலமும் என்னாலன்றோ இழிவுற்றன!" என்று பிராட்டியார் புலம்பிய விழுமச்சொற்கள் பற்பல. இராவணன் அவனை கடந்து சென்றான்.

இவ்வாறு பிராட்டியாரை வஞ்சித்துக் கவர்ந்து சென்ற இராவணன், இலங்கையிலுள்ள அசோக வனத்தில் சிஞ்சுபா மரத்தின் கீழ் அவரைச் சிறை வைத்தான். கொடிய வினையையும், கோர ரூபத்தையும் உடைய பல இராக்கதிகள் அவருக்குக் காவலாக அமைக்கப்பட்டார்கள்.

இங்குப் பிராட்டியார் சிறந்த பண்புகள் சில நோக்கற்பாலன: 'இப்பர்ணசாலைத் தலைவர் யார்?' என இராவணன் வினவ, பிராட்டியார் தம் நாயகன் திருநாமத்தைக் குலத்தின் குறிப்பால் தெரிவித்தார். நாயகர் அன்றிப் பெரியோர் பெயரை அச்சமின்றி அடிக்கடி புகல்வது முறையன்றென்பதை மேற்கொண்டனர் போலும்! பெருங்கொடுமை இழைத்துக் கானகத்திற்கு ஏக விடுத்த மாமியாரையும் உயர் குல அன்னையெனப் பெருமைபடுத்திய அவர் பெருந்தகைமை என்னே! ஈதன்றோ உயர் குடிப் பெண்களுக்குச் சால்புடையதாகும்? 'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம் தகுதியான் வெல்லல்' அறிவுடைமையன்றோ?

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE.

நம் அன்னையார் அவ்வரக்கனுக்குத் தம்மைத் தெரிவிக்கும்போது தமக்குத் தம் தந்தையாரால் இடப்பட்ட காரண இடுகுறிப் பெயராகிய சீதை என்பதைப் பகர்ந்தாரில்லை. மனன சீலரான ஜனகர் பெயரால் தமக்கு வழங்கி வந்த ஜானகி என்னும் திருநாமத்தையே அவர் செப்பினர். தம் பெயரைக்காட்டிலும் ஞான நிதியாகும் தம் தந்தையார் திருநாமத்திலேயே அவர் கருத்து ஊன்றி நின்றது பாராட்டத் தக்கதே. இதனால், அவர் தம் தந்தையாரிடம் கொண்ட மதிப்பின் பெற்றி நன்கு புலனாகின்றது.

அரக்கனோடு அவர் வாதம் புரியும் போது, அவன் தவ வேடத்தைக் கண்டு அஞ்சி நியாயத்தை இயம்பாது விடுத்தாரில்லை. தவத்தினர் இயல்பையும், அவர்கள் உறையத் தக்க இடத்தையும் அவர் நன்கு விளக்கினர். அன்றியும், பெரியோரைப் போன்று காண்பவர்கள் பகரும் யாவும் உண்மையே எனக் கருதும் குருட்டு நம்பிக்கையும் அவரிடம் குடி புக

உண்மையை நிலை நாட்டாமல் வேடங் கண்டு பயந்து அப்போதைக்கேற்றவாறு வழவழப்பாய்ப் பேசுங் கோழைத்தனத்தை மேற்கொண்டிலது அவர் உத்தம இயல்பு. இதனால், அன்னையாருக்கிருந்த நூலாராய்ச்சியின் மாண்பும், ஒரு விஷயத்தின் மெய்ப்பொருளையுணரும் அறிவின் நுட்பமும் நன்கு புலனாகின்றன. 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்' அதன் உண்மையை உணருவதன்றோ அறிவுடைமையென்பது ?

அத்தவசியை இராவணனென உணர்ந்த பின்னும், அவர் சிறிதும் அஞ்சினரில்லை ; ஆங்குத் தம் உயிரையும் துரும்பென மதித்து அக்கயவனோடு வாதித்தனர். அவ்வம

யம் தம் தனிமையையேனும், மென்மை வாய்ந்த பெண்மையையேனும் நினைத்துப் பின் வாங்க அவர் சிறந்த வீர இயல்பு இடந் தந்திலது ; அவர் அஞ்சாக் கன்னெஞ்சைக் கொண்டனர். 'தேரா மன்ன, செப்புவ துடையேன்,' எனப் பாண்டியன் முன் வழக்குரைத்தவளும் ஒரு பெண்ணரசி அல்லளோ ?

## 15. அனுமான் வெற்றியும் வைதேகியார் பண்பும்

ஜானகியாரின் வற்புறுத்தலால், பெருங்கவலையுடன் அவண் விட்டு நீங்கிய இளவல், தமயனாரைச் சந்தித்ததும் சிறிது தேர்ந்தனர். 'இம்மாய மாரீசன் ஓசையால் சீதை எவ்வாறு கலங்கினளோ !' என்ற கவலையுடன் வந்துகொண்டிருந்த இராமபிரானார் தம் தம்பியைக் கண்ணுற்றார். அவர் மனந் திடுக்கிட்டது. அப்போதே அவர் மைதிலியாருக்குப் பெருந்தீங்கு வந்துற்றது போன்று கலங்கினார். 'மாய அரக்கன் குரலொலியை நம்முடையது எனக் கருதிய சீதையின் கலக்கமே இலக்குமணன் இவண் வருவதற்குக் காரணம்,' என்று அவர் உணர்ந்தார். உடனே இருவரும் மைதிலியார் இருந்த இடத்தை நாடிச் சென்றனர்.

சென்ற அன்னார் பர்ணசாலையில் பிராட்டியாரைக் கண்டிலர். காகுத்தர் பருவரல் பரவையிற் படிந்தனர். உடலைப் பிரிந்து சென்ற அருமை உயிர் மீளவந்து அவ்வுடலைக் காணப் பெறாது கலங்குவது போன்றிருந்தது அவர் நிலை. அவர், தமக்குப் பின்னுதவப் புதைத்து வைத்த பொருளை இழந்தவரென மயங்கினார். அவர் சீற்றத்தினால் உலகமே அழிந்துவிடும் போலத்தோன்றிற்று.

பின் சகோதரர் இருவரும் ஆங்குக் காணப்பட்ட தேர்ச் சுவட்டின் வழியே நடந்தனர்; நிலத்தில் குற்றுயிராய் வீழ்ந்து கிடந்த ஜடாயுவினால் பிராட்டியாரின் விஷயங்களை உணர்ந்தனர்.

பின்னர்ச் சபரி என்பாள் காட்டிய வழியே செல்ல, கிஷ்கிந்தை மலை காணப்பட்டது. ஆங்குறைந்த அறிவிற் சிறந்த அனுமான் அவர்களை வரவேற்றான். பிராட்டியார் கிஷ்கிந்தை மலைமேல் எறிந்த அணிகளைக் காகுத்தர் கண்ணுற்றார். வாலி சுக்கீரீவனால் உயிர் துறந்தான். சுக்கிரீவனுக்கு மகுடஞ் சூட்டப்பட்டது.

பிராட்டியாரைத் தேட நான்கு திக்குக்களிலும் குரக்குச் சேனைகள் சென்றன. ஆற்றலும், நிறையும், கல்வியும், அமைதியும், அறிவும், பிரமசரியத்துவமும் வாய்ந்த அனுமானே பிராட்டியாரைக் காணும் பெற்றி வாய்ந்தவன் எனக் காகுத்தர் கருத்திற் பட்டது. அன்னையாரை எளிதிற்காணும் பொருட்டு இராமபிரானார் பிராட்டியாரின் உடலமைப்புக்களுள் சிலவற்றை அனுமானுக்குக் குறித்தனுப்பினார்.

பிராட்டியாரைத் தேடச் சென்ற வானர வீரர்களில், தென்திசைக்கேகினவர்கள் நீங்கலாக மற்ற மூன்று திக்குக்களுக்கும் சென்றவர்கள் பயன் ஒன்றுமின்றித் திரும்பினார்கள். இஃது இராமபிரானாரைப் பெரிதும் வருத்தியது. ஆனால், சுக்கிரீவன் கூறிய உறுதி மொழிகளும், எங்ஙனமேனும் அனுமான் சீதையைக் கண்டு வருவன் என்ற நம்பிக்கையுமே அவரைப் பிழைத்திருக்கச் செய்தன. இது நிற்க.

ஜாம்பவன், அங்கதன் முதலிய வானரர்களுடன் தென்றிசைக்கேகிய மாருதி, பிராட்டியாரைப் பல இடங்களி

லும் தேடினுன்; காணுமையின், சலித்து உயிர் துறக்கத் துணி வுற்ருன். ஆனுல், தேவர்கள் இயற்றிய தவம் அவன் அங்ஙனம் செய்துகொள்ள இடந் தரவில்லை. அவன் ஜடாயுவின் தமயனுன சம்பாதி என்னும் பறவையரசனுல் வைதேகியார் இருக்கையையுணர்ந்தான். அனுமான், கடல் தாவி இலங்கை சென்ருன். அவணுள்ள அரமியங்களின் வனப்பும் ஒளியும், மதில்களின் உயர்ச்சியும், காவற்கடுமையும், தேவர்கள் தொண்டு பூண்டொழுகும் சீர்மையும், செல்வப் பெருக்கும் அனுமானுக்கு வியப்பைத்தந்தன. இலங்கையுட்புகுந்த அவன் அங்குப் புகை செல்லக் கூடிய சிறு இடத்தையும் துருவித் துருவிப் பார்த்தான். கும்ப கருணன், விபீஷணர், இந்திரசித்து முதலியவர்கள் உறங்கும் இடங்களும் அவனுக்குப் புலப்பட்டன. அவர்களில், விபீஷணரே உத்தமர் என, அவர் முகக் குறிப்பால் மாருதி உணர்ந்தான். பின்பு அந்தப்புரம் காணப்பட்டது. அவன் இராவணன் காதற் கிழத்தியர் அனைவரையுங் கண்ணுற்ருன். ஆனுல், இராவணன் உத்தம மனைவியாகிய மண்டோதரியைப் பார்த்தபோது அவனுக்கு, 'இவர்தாமோ பிராட்டியார்!' என்னும் அயிர்ப்புண்டாயது. பின்பு சிறிது தெளிந்து, "ஆ ஆ! ஈதென்ன அறியாமை! உலக மாதாவும், கற்பணியும், அருட்கடலாம் இராகவரின் இல்லக்கிழத்தியாருமாகிய ஜானகியாரோ இக்கொடிய அரக்கன் மனையில் இங்ஙனம் கவலையற்றுத் துயில்வர்! இந்த ஐயம் விளைந்ததற்கு யான் முன் செய்த தீவினை யாதோ!" என அவன் தன்னைத்தான் வெறுத்துக்கொண்டு, அவளைப் பின்னும் சிறிது உற்று நோக்கினன். அவள் சிறந்த கற்புடையவளேயாயினும், அவள் முகத்தில் சில இராக்கதக் குறிகள் காணப்பட்டன. அவைகளே அவள் மைதிலியார் அல்ல

வென்று தீர்மானித்தற்குத் தக்க அளவு கருவிகளாக அவ னுக்கு உதவி புரிந்தன. உடனே அவன் அவண் விட்டு நீங் கினன். இலங்கையில் அசோக வனம் நீங்கலாக, தேடாத ஒரு சிறு துளையும் மிகுதி இல்லையென்னுமாறு எங்கும் அவன் ஆராய்ந்தான். காரியம் கைகூடவில்லை. அனுமான் மனம் தளர்ச்சியடைந்தது. "இனி நம்மாற் செய்யக் கூடுவது ஒன்று மின்று; நம் உயிர் இங்கேயே முடிய வேண்டுவதுதான்; நாம் பார்க்க வேண்டிய மிகுதி இடமோ, ஒன்றுங்காணேம்; இக்கொடியன் அன்னையாரை விண்ணில் அன்றி மண்ணில் மறைத்து வைத்துளனே!" எனப்பலவாறு அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான். திடீரென ஒருசோலை அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதைக்கண்டதும் மாருதிக்குப் புதிய உணர்ச்சி தோன்றிற்று. ஒரு தெய்வீக சக்தி தன்னை ஊக்குவதாக அவன் உணர்ந்தான். 'இன்னும் தேட வேண்டிய எஞ்சிய கூறு சிறிது உண்டு!' என்னும் ஆனந்தம் அவன் மனத்தில் பொங்கியெழுந்தது. "நமக்கு எதிரில் காணப்படும் அழகிய இச்சோலையில் நுழைந்து பார்ப்போம். அங்கும் அன்னை யாரைக் காணுவிடில், இவ்விலங்கையை அழித்துவிட்டு, நம் உயிரையும் போக்கிக்கொள்வதே தகுதி!" எனத் தீர் மானித்து, அனுமான் சோலைக்குள் புகுந்தான். தேவர் பூ மழை பொழிந்தனர்.

அங்குப் பருத்த இடையையும், பயங்கர உருவத்தையு முடைய அரக்கியர் பலர் கரங்களில் வாளேந்திப் பிராட்டி யாரைச் சூழ்ந்திருந்தனர். அவர்கள், தங்கள் செய்கையினு லும், சொற்களினுலும் பிராட்டியாருக்குண்டாக்கிய விழுமங் கள் பலப்பல. அவற்ருல், மழைத் துளி பெருத கற்பாறை விடரில் முளைத்த சஞ்சீவி மூலிகையென அவர் வாடியிருந்

தனர். அவர் கைகால்கள் அவர் மெல்லிய இடையைப் பரிக சிப்பதையொக்க மெலிந்திருந்தன. கண்கள் துயிலைத் துறந்தன. பகலில் ஏற்றிய தீபமென அவர் மேனி ஒளி மழுங்கி இருந்தது. கூரிய பற்களைப் பெற்ற புலிக் கூட்டத்தின் நாப்பண் சிக்குண்ட இளமான் போன்று, அவர் மனமாழ்கி, உணர்வொடுங்கியிருந்தனர். அவர் காகுத்தரை நினைந்து விம்முவர்; கீழே விழுவர்; எழுவர்; மனங் கலங்குவர்; பரிதவிப்பர்; கதறுவர்; சாம்புவர்; தம் நாயகர் வந்துவிட்டனரோவெனக் கைகூப்பிக்கொண்டே திக்குகளை நோக்குவர்; காணாமையின், பெருமூச்சு எறிவர்; சூழவிருக்கும் அரக்கிகளைக் கண்டு நடுநடுங்குவர்; தம் நெஞ்சில் உறையும் தம் தலைவர் தம் மனக் கண்களுக்குப் புலப்படுந்தோறும் புலப்படுந்தோறும் அவரைப் பற்றிக்கொள்ள இரு கைகளையும் நீட்டுவர்; கிடைக்காமையின், கரங்கள் தளர்வுற்று மெதுவாகக் கீழிறங்கும். தம் தலைவர் நிறத்தைப் போன்ற மேகம் முதலிய கறுத்த பொருள்களைக் காணுந்தோறும் அவர் கண்கள் காளமேகம் போன்று நீர் சொரியும். அவர் உடுத்த சேலை, கண்ணீரால் நனைவதும், பெருமூச்சினாலும் உடல் வெப்பத்தினாலும் உலர்வதுமாக இருந்தது. ஒரு போது ஏதோ செப்புவார் போலத் தம் கோவைக் கனிபோன்ற வாயைத் திறப்பார். ஆனால், தம் அருகிலிருக்கும் கொடிய அரக்கிகளைப் பார்த்தவுடன் அவர் அதரங்கள் தாமாகவே மூடிக்கொள்ளும். சில சமயங்களில், "நாம் ஏன் இங்குள்ளோம்! ஏன் வருந்துகின்றோம்!" என எண்ணி, ஒன்றுந் தோன்றாது பதுமையைப் போன்றிருப்பர். "எங்ஙனம் இங்கு வந்தோம்!" என்று யோசிப்பர். பழைய பொருள்கள் ஒன்றின்பின் ஒன்றாக அவர் நினைவிற்கு வர, அச்சிந்தனையில் சிறிது

போது செல்லும். காகுத்தர் ககன மார்க்கமாகத் தோன்றித் தம்மை அழைத்துச் செல்லக் கூடும் என்ற எண்ணத்தினால் அவர் வானத்தை நோக்குவர்; ‘ சீ சீ ! ஈதென்ன வாழ்க்கை! இப்போதே உயிர் விடுதல் நலம்!’ என நினைப்பர். ‘இரவி குல திலகர் தம் குலப் பழிக்கஞ்சியேனும் நம் துன்பத்தைத் துடைப்பர்,’ என்னும் உறுதி, அவரை அந்நினைவிலிருந்து
ம. உடுத்த ஆடை ஒன்றுடனே அவர் காலத்தைக் கழித்தனர்; அவ்வொன்றையும் அழுக்குப் போக்கி உடுக்க வேண்டுமென்னும் உணர்வைக் கொண்டனரில்லை. இம் முறையில், அவர் உடல் தேவாமிர்தங் கொண்டு தீட்டிய ஓவியம் தூமமேறியது போன்று காணப்பட்டது.

அந்நிலையிலிருந்த வைதேகியார், “ இமையும் என்னை விட்டுப் பிரிய மனமெழா இரவி குல திலகர் இன்னும் இவண் வாராததற்குக் காரணம் யாதாயிருக்கக் கூடும்! இளவல் மான் பின் சென்ற காகுத்தரைக் காணவில்லையோ! இக் கொடிய இராவணனால் யான் கவரப்பட்டேனென்பதை அவர் உணர்ந்திலரோ! இலங்கை எங்குளதென ஆராய்கின்றனரோ! அப்படி இராது. இக்கொடியனோடு போர் புரிந்த ஜடாயு உயிர் நீத்திருப்பர். அங்ஙனமாயின், என் இருக்கையை அவர்வேறு யாரால் உணர முடியும்! ஆதலின், இப்பிறப்பில் யான் அவரைக் காணலும், என்னை அவர் மீட்டலும் அருமையினும் அருமையே. அன்றி, முன் பின் ஓராமல் இளையவர் மனம் புண்பட யான் செப்பிய வார்த்தைகள் அவர் செவிக்கு எட்டினவோ! அதனால் என்மீது வெறுப்புற்றனரோ ! அறிவற்றவள் என என்னைக் கைவிட்டனரோ ! ‘கருணையின்றி உயிர்களை உடற்றும் அரக்கர்கள் அவளை இதுகாறும் கொன்று தின்றிருப்பர்,’ எனக் கருதி என்னைத் தேடும் முயற்சி ஒழித்

தனரோ! பரதர் முதலியோர் அவரை ஆற்றுவித்து நாட்டிற்குக் கொண்டு போயினரோ! இன்றேல், கொடிய அரக்கர் பலர் அவரை மறித்துப் போர் புரிகின்றனரோ! அதனால் அவர் பல துன்பங்களில் உழலுகின்றனரோ! அழகிய தாமரை போன்ற அவர் முகம் எங்ஙனம் சாம்பியிருக்கின்றதோ! இடருழக்கும் ஊழ் வந்துற்றதோ!'' எனப் பலவாறு அரற்றிப் பிராட்டியார் துயருழந்தனர்.

பின்னும் வைதேகியார்,'நாட்டை நீ கொள்ள வேண்டும்,' எனத் தசரதர் இயம்பியபோதும், 'அரசைத் தம்பி பரதனுக்கீந்து நீ கானேகவேண்டும்,' எனக் கைகேயி கழறியபோதும் சிறிதும் வேற்றுமையின்றி அன்றலர்ந்த தாமரையினும் சிறக்கப் பொலிந்த இராகவர் திருமுகத்தை நினைப்பர்; அரசர் யாவரையும் அஞ்சச் செய்த சிவ தனுசை இறுத்த அவர் புயவன்மையை உன்னுவர். கரதூஷணர்களைத் தனித்திருந்து தண்டித்த கோதண்டத்தின்மீது அவர் கருத்துச் சென்றது. அழகிய பங்கயம் போன்ற அவர் கைகளால் தம் காலைப் பற்றி அம்மி மிதிக்கச் செய்த பெருந்தன்மை அவர் நினைவிற்கு வந்தது. காட்டிற்கேகுங்கால் இடை மறித்துத் தானங் கேட்ட அந்தணனுக்கு ஆறுதல் உண்டாகுமாறு பசு மந்தையை ஈந்த அவர் ஈகையை எண்ணுவர். பரசுராமர் செருக்கை ஓர் இமைப்பொழுதில் அடக்கிய வீரச் செயல் அவர் மனத்திற்குத் தோன்றியது; 'இவள் உன் மதனி,' எனக் குகனுக்குத் தம்மைச் சுட்டிக் காட்டிய இனிய மொழிகளையும், சீரையுடுத்துத் தவவேடம் பூண்டு வந்த தம்பி பரதனைக் கண்டு துணுக்குற்றுக் கண்ணீர் சொரிந்த கருணையையுங் கருதுவர். 'அந்தோ! பணியாளர் ஒருவருமின்றி வதியும் கானில் அவரைத் தக்கவாறு உண்பிப்பவர் யார்!' என

அவர் மனம் தயங்கும். 'முற்றத் துறந்த முனிவர்கள் அவரிடம் விருந்தினராகவரின், அவர்களை உபசரிப்பவர் யாவர்!' எனக் கலுழ்வர். இங்ஙனம் ஒன்றன் பின் ஒன்ருக அவர் நினைவிற்கு வந்தன பலவாகும். அவ்வமயம் அவருக்குண்டாய பருவரலை அளந்து கூறல் இயலாது. அப்போது அன்னையாரைக் காவல் செய்துகொண்டிருந்த அரக்கியர் யாவரும் உறங்கினர்.

இவண் அன்னையாரின் கற்பின் உறுதியைச் சிறிது கூருமல் மேல் செல்ல மனமெழவில்லை.

இதுவே உயர்ந்த கற்பாகும். இதை எத்தகையோராலும் தகர்த்துத் தள்ள இயலாது. ஈதன்ருே பெண்களுக்கு உயர்ந்த காவல்! இம்மனக்காவலை நெஞ்சுரமற்ற அற்பர்களால் அசைக்கக் கூடுமோ? இதுவே பெண்களுக்கு நல்லாடை, நல்லணி, நல்லழகு என்பதில் ஐயம் யாது? ஈதற்ருேர்க்குப் புரிசை அரமியம் முதலிய காவல் என்செய்யும்? மனக்காவலாகிய கற்பை அரண் செய்வது உண்மையன்பேயாகும். உண்மை அன்பு உதித்தற்குக் காரணம் காதலர்பாலுண்டாகும் குற்றமற்ற காதலன்ருே? இக்காதல் தோன்றுதற்கு இருபாலாரிடமும் நற்குண அமைப்புக்களும், தெய்வ இயல்புகளும் ஒத்து இயங்குதல்வேண்டும். இதனுல ஒற்றுமை தானே உண்டாகும். அவ்வொற்றுமையே உயர் அன்பைப் பிறப்பிக்கும். தற்காலம் தேடப்படுகின்ற உடலழகும், பொருளும், போலிக் கல்வியும், உத்தியோக உயர்வும், கிட்டிய உறவும், சின்னுட் பழக்கமும் மாத்திரம் இவ்வுண்மை அன்பை உதிக்கச் செய்யுமா?

பிராட்டியார் இருக்கையின் ஓவியம், மெய்யன்புடையாரைப் பிரிவதனுல் ஏற்படும் துன்பம் இத்தன்மைத்து

என நன்கு தீட்டிக் காட்டுகிறது. அவர் ஐயக் கருத்துக்கள் சாதாரணப் பெண் தன்மையைக் குறிக்கின்றன. அவர், தம் நாயகரைச் சுத்த வீரராகவும், பற்றற்ற துறவியாராகவும், கருணை வள்ளலாராகவும் கருதிய தன்மை அவர் கல்வித் திறத்தையும், அறிவின் மாட்சியையும், தெய்வ இயல்பையும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய மேன்மைகள் பல வாய்ந்த அன்னையாரின் பிறவியன்றோ மேம்பட்டதாகும் !

கரணங்கள் மூன்றினும் தீமையே புரிந்தொழுகும் அரக்கர் குழுவில், இன்னருள், நல்லிரக்கம், தெய்வ சிந்தனை, பெருந்தன்மை முதலியவைகள் பெற்ற பெண் தெய்வம் ஒன்று இருந்தது. அப்பெண் தெய்வம் சத்துவ குணம் வாய்ந்த உத்தம விபீஷணரின் தவப் புதல்வியாகிய திரிசடை என்பவள். அவளே அன்னையாருக்கு உற்ற துணையாக அமைந்திருந்தனள். அவள் பிராட்டியாரின் துயரக் கனலைத் தன் இன்சொற்களாகும் நீரினால் அணைத்து வந்தனள். அவ்வுத்தமியின் உதவியினாலேயே அன்னையார் அதுகாறும் உயிர் பிழைத்திருந்தனர் என இயம்பல் மிகையாகாது. நல்லோர் ஒரு போது ஊழினால் இடுக்கணுறினும், அறக்கடவுள் அவரைக் கைவிடாதென்பதற்கு இஃது ஒரு சான்றாகும்.

ஒரு நாள் ஜானகியார் திரிசடையை நோக்கி, "அன்னையே, எனக்குச் சில நிமித்தங்கள் இப்போது காணப்படுகின்றன. அவைகள் நன்மையைப் பயக்குமோ, அன்றித் தீமையை விளைக்குமோ, யான் அறியேன் ! எனக்கு இடப் புருவமும் இடக்கண்ணும் துடிக்கின்றன. காகுத்தர் முனிவர் பின் வந்த நாளும் இங்ஙனமே நிகழ்ந்தது. ஆனால், நாங்கள் காட்டிற்குப் போந்த போதும், இக்கொடிய இராவணன் தண்டகாரணியத்தில் தோன்றியபோதும் வலப்புறம் துடித்" என இயம்பினர்.

இதைச் செவியேற்ற திரிசடை, "மின்னின் சாயலை யுடைய கற்பணியே, உனக்குத் தோன்றும் நிமித்தங்கள் யாவும் நன்மையையே குறிப்பன. எனக்கும் சில நன்னிமித் தங்கள் காணப்பட்டன. பொன்னிற வண்டு ஒன்று மெல் லெனவந்து உன் செவியில் இன்னிசையை இசைத்துச் சென் றது. இதனால், உன் தலைவரால் அனுப்பப்பட்ட தூதுவ னொருவன் இவண் வந்து நல்லுரைகளை உனக்குத் தெரிவிக் கக் கூடுமென யான் கருதுகின்றேன். அதன்றியும், யான் கண்ட சில தீக்கனவுகளும், இலங்கையிற் காணும் உற்பாதங் களும் இராவணனும் அவனைச் சார்ந்தோரும் விரைவில் அழிவர் எனத் தெரிவிக்கின்றன," எனப் பகர்ந்து, பிராட்டி யாரைத் தேற்றினள்.

சிறிது நேரத்தில் அரக்கியர் விழித்து வில்லேந்தின கையராய்ப் பிராட்டியாரைச் சூழ்ந்தனர். வைதேகியார் சிங்கக் கூட்டத்தினிடைச் சிக்கிய இளமானென அஞ்சி நடுங்கினர். அவ்வமயம் மாருதியும் அவண் வந்து, அங்குத் தோன்றிய உயர்ந்த மரமொன்றில் ஏறினன். அரக்கிகளின் எழுகை திருவடிக்கு வியப்பைத் தந்தது. ஆதலால், அவன் அங்குக் கூர்ந்து நோக்கினன்.

அருவருப்பையும் அச்சத்தையும் தரக் கூடிய மிருக இயல் வாய்ந்த உருவங்கள் பலவற்றின் நாப்பண் அழகும் அமைதியும் இனிமையும் பொருந்தித் தெய்வத் தன்மை பெற்ற ஓர் அன்புருவம் அவனுக்குக் காணப்பட்டது. அத் தெய்வ வடிவம் அக்கொடியர் ஆகுலச் சொற்களையும் தீச் செயல்களையும் நடுக்கத்துடன் தாங்கிக்கொண்டிருந்தது. அதன் வாயிலிருந்து ஒரு சிறு ஓசையும் வெளி வரவில்லை. ஒரு தடாகத்தின் மத்தியிலுள்ள அன்னம் போன்று தன் கண்ணீர் வெள்ளத்தில் அது மிதந்து தத்தளித்தது. மாருதி

அதை நன்கு ஊன்றி நோக்கினான். "ஆ! ஆ! ஈதென்ன வியப்பு! பொறுமையே இங்ஙனம் ஓர் உருவு கொண்டதோ! அன்றிக் கந்தருவப் பெண்ணோ! தெய்வ மகளோ! இல்லை! இல்லை!! இவரே யான் தேடி வந்த கற்புத் தெய்வமாயிருக்க வேண்டும். தருமம் தழைத்தது! இனியான் உயிர் துறவேன்! தேவர்கள் பிழைத்தார்கள்!" என்று எண்ணி, அங்கும் இங்கும் தாவிக் கூத்தாடினான். மாருதிக்கு அப்போதுண்டான குதுகுலத்தை அளந்துகூற எவராலும் இயலாது. அவனுக்கு ஒரு புத்துணர்ச்சி தோன்றிற்று.

மழை மேகத்தின் இடையில் காணும் மின்னலைப் போன்ற அன்னையாரின் அழகுருவம் அவன் கண்ணில் நுழைந்தது. "இரவி குல திலகர் புகன்ற இலட்சணங்கள் யாவும் இவரிடம் பொருந்தியுள்ளன. இவர் நிலைமாறு நிறையை யான் என்னென்றியம்புவேன்! இராவணன் தன் உயிரைக் கொள்ளை கொள்ளும் இரவிகுல திலகரை இவண் வரவழைத்தற்குச் செய்த ஆராய்ச்சி மிக நன்று! தீயோர் நிரம்பிய இவ்விலங்கையைச் சுட்டெரிக்கத் தோன்றிய கற்பெரி இதுவே யாகும். புலனைந்தையும் அடக்கித் தவஞ் செய்பவர்களும் மனத் திட்பம் வாய்ந்த இத்தகைய கற்பணிகளுக்கு ஈடாவரோ! மாசுண்டமணியென மலினக் கூந்தலுடன் தவமியற்றும் இவர் கற்பின் மாட்சியென்னே! இவர் தம்மைத் தாம் காத்துக்கொண்டிருக்கும் வன்மையை யான் என்னென்று புகழ்வேன்! இவரன்றோ பெண்ணென்று சொல்லும் பெற்றிவாய்ந்தவர்! இவரைப்போன்று எழில் கனிந்த பெண் மணிகள் மூவுலகிலும் கிடைப்பது அரிது, அரிது! தம் சீலத்தைக்காக்க இவர் வேறொருவரையும் எதிர் நோக்குபவரல்லர். இவர் ஊக்கத்தை உடைக்க இவ்வற்பனால் ஒருகாலும் முடியாது!

ஈதன்றோ பெண்தன்மையும், கற்பொழுக்கமுமாகும் ! மகளிர் தம் நிறையினால் தம்மைக் காத்துக்கொள்ளும் காவலே தலை சிறந்தது என்பதை அறிஞர் அறிவரன்றோ ? இராவணன் வன்மையோ, மிக்கது. தேவர்களும் அவனுக்குப் பணிந்து நடக்கின்றனர். காவல் புரியும் அரக்கிகளின் கொடுமைகளோ, பொறுக்குந் தகைமையனவல்ல. தமக்கோ, சிறு துணையுமில்லை. இந்நிலையில் இவர் தம்மைத் தாம் காத்துக்கொண்டிருக்கும் பெற்றியைப் புகல எம்போன்றோரால் கூடுமோ ! காகுத்த ரியற்றிய புண்ணியமோ ! அறக் கடவுள் அருளோ ! அறி யேன் ! பெண்களுக்குரிய குணங்களைக் கை விடாமலும், ஊண் உறக்கம் விரும்பாமலும், தம் தலைவரையே சிந்தித் துக்கொண்டிருக்கும் இவர் தூய தவத்தைச் செந்தாமரை போன்ற கண்களையுடைய காகுத்தர் காணத் தவஞ் செய் திலரே ! அவரல்லரோ இந்நிலையைக் கண்டு களிக்கத் தகுதி யுடையவர் ! அவரல்லரோ ஆடவரில் ஆண் சிங்கத்தைப் போன்றவர் ! அவர் பீடு உலகில் என்றும் பிறங்கும். காகுத் தர், தம் வீரம், ஈகை, தயை முதலிய சத்துவ குணங்களால் அழியாச் சீர்த்தி வாய்ந்தார் எனக் கூறுவோர் கூறுக. அவர்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியற்றவர்கள் என்பதே என் கருத்து. யான் மறந்தும் அங்ஙனமியம்ப ஒருப்படேன். அவர் புகழ் என்றும் எங்கும் பொன்றுதொளிர்தற்கு இவரே தலை சிறந்த காரணம். இவர் தவச் சிறப்பையும், நிறை நேர்மையையும் கண்கூடாகக் கண்ட என்னை மறுத்துக் கூற எப்புலவராலும் முடியாது. அந்த இரவி குல திலகர் பன்னக சயனத்தை விட்டு ஈண்டு வந்த பிரணவப் பொரு ளாகிய திருமாலே. அவரை விடாது பின் தொடர்ந்து வந்த இவர், செங்கமலத்தை நீங்கி வந்த திருமகளாரே. இதற்குச் சிறிதும் ஐயமிலது.

"இவரைக் கொண்டு வந்த இராவணன்மீதும் குற்றமில்லை. அவனோ, அற்பன்; புலன்களை அடக்கியாளும் பொறுப்பற்றவன்; உத்தமப் பெண்கள் உயர்வை உணருந் திறமையற்றவன்; தெய்வச் சிந்தனையில் தேர்வற்றவன்; தேக வன்மை வாய்ந்தவன்; மூவுலகையும் வெல்லும் வீரமுடையவன்; எளிதில் அரிவையர் அழகில் அகப்படும் கோழை; பேரின்பத்தின் பெற்றியை உணராப் பேதை; நிறையுடை மாந்தரின் நீர்மை ஓரா நெறியிலி; கற்பின் கண்ணியந் தேராக் கண்ணிலி. இத்துணை அழகு வடிவத்தை அவன் ஆயுளிலேயே கண்டிருக்கமாட்டான். இவரோ, தேவ மாதரும் உச்சிமேற் கொள்ளும் வனப்பு வாய்ந்தவர்; பெண்களும் விரும்பும் பெற்றி வாய்ந்த பெண்ணரசியார். இம்முறையில் ஏன் இவரைக் கொணர அக்கயவன் விரும்பான்! ஆயினும், இதுகாறும் இவருக்குப் பழிப்புண்டாகாமல் இருக்கும் அவன் கருணை பெரிதும் புகழத்தக்கதே! இதில் அவன் தன் புலனை அடக்கிய பெருந்தவசி என்றே பகரல் வேண்டும். இங்ஙனம் அவன் தன் மனத்தையடக்கி இருப்பதற்கு ஏதோ ஒரு தலை சிறந்த காரணம் இருக்கவேண்டுமென யான் நினைக்கின்றேன். நிறையுடைப் பெண்டிர் பல்லோர்க்குத் துன்பமிழைக்கும் பாவியாகிய அவன் உயிரைக் கொள்ளை கொள்ள அறக் கடவுள் செய்த கைதவம் மிகச் சால்புடைத்து! இதற்கென்றே இவ்வுருவத்தைத் தரும தேவதை உண்டாக்கியது போலும்! தேவர்களும் முனிவர்களும் செய்த தவம் சிறப்புடைத்து! யான் மேற்கொண்ட அடிமைத் தொழிலும் பலித்தது! பெண்கள் தவத்தில் மேற்பட்டவர்கள் என்பதற்குத் தடையிலது! அதற்கு இவரே தக்க சான்று. இவர் தவத்தைக்

காணும் தவத்தை யானே பெற்றேன்!'' எனப் பலவாறு உன்னி, அனுமான் மரக்கிளை ஒன்றில் மறைந்திருந்தான்.

அன்னையாரின் உயர் தவத்தின் பெருமை என்னே! அவர் புனித நிலைமை ஐம்புலன்களையும் மனத்தின் வழி செலுத்தாது, தூய்மை வாழ்வு நடாத்திய மாருதிக்கே வியப்பைத் தந்தது. பிரம்மசரியத்தை விடாது பற்றிய அவனே பிராட்டியாரைப் பார்த்துப் பிரமித்தானெனில், மற்றையோருக்கு இயம்புவதென்னை? வைதேகியார், சூழவிருந்து பல துன்பங்களையும் தமக்கு இழைக்கும் அரக்கிகளுக்கு அஞ்சினர். ஆனால், அவர்களுக்குக் கெடுதி செய்ய அவர் மனத்திலும் நினைத்திலர். அவர் கருதின், அக்கொடிய அரக்கர்களை ஒரு சொல்லில் சுட்டெரிப்பர். ஆனால், அன்னையார் மனம் அதைக் கருதவில்லை. ஏனெனில், அவர் அந்நிலையையுங் கடந்து உயர் படியில் நின்று ஒளிருகின்ற தூயவர். அங்ஙனம் செய்வது தம் நிலைமைக்கும், தம் கணவர் வீரத்திற்கும் பழிப்பு என அவர் நினைத்தனர். அன்றியும், அவர் தம் பொறுமை அதற்கு இடந் தந்திலது. அவர் வருந்துமிடங்கள்தோறும், தம் வினையை நோகின்றனரேயன்றி, தமக்குத் தீங்கிழைத்த கொடியரைத் தூற்றுகின்றிலர். உற்ற நோய் பொறுத்து, பிறருக்குத் தீங்கிழையாமையே தவத்திற்கு வடிவம் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தனர். அவர் செவ்விய தண்ணளியின் நீர்மை என்னே! இதனால் பெண்களுக்கு எத்துணை உயர்ந்த தவக் குணங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன என்பதை யாம் உணருகிறோம். மக்களைப் பெறுதல், குடும்பம் பேணல், மக்கள் வளர்ப்பு இவைகளைத் தந்நலங் கருதாதாற்றும் தியாகிகள் மங்கையர்களே என்பதை மறுக்க இயலுமோ?

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE

அந்நடு இரவில் அங்கு ஒரு சிறந்த காட்சி தோன்றிற்று. அதைக் கண்ட அனுமான் திடுக்கிட்டுத் தன் கண்களையும் கருத்தையும் அவண் செலுத்தினன். அரம்பை, ஊர்வசி முதலியோர் வெற்றிலைத் தட்டு, செருப்பு இவைகளைத் தாங்கி வந்தனர். பல தேவ மங்கையரால் மங்கலத் தீபங்கள் பிடிக்கப்பட்டன. அவர்களுக்கிடையே உயர்ந்த அணி ஆடைகளால் தன்னை அழகுபடுத்திக்கொண்ட இராவணன், மதங்கொண்ட யானையைப்போன்று நடந்தான். அக்காட்சி ஜானகியாரைப் பெரிதும் அச்சுறுத்திற்று. அவர் திருமுகம் சாம்பியது. மனம் மாழ்கியது. அப்பூரியன் நிழலையும் நோக்க விருப்பற்ற அவர், தலை குனிந்து தரையை நோக்கிக்கொண்டிருந்தனர்.

ஜானகியாரின் மன நீர்மையை யூகித்தறியும் வன்மை அற்ற கயவனாகிய இராவணன் அவர் அருகில் வந்தான்: "மேகமென மிளிரும் அழகிய கூந்தற் கற்றையையுடைய மங்கையர்க்கரசியே, உனக்கு என்மாட்டுச் சிறிதேனும் கருணை இல்லையோ ? அந்தோ ! உனக்கு அழகைக் கொடுத்த நான்முகன் அருளைக் கொடுக்கவில்லை போலும் ! குபேரனினும் விஞ்சிய என் செல்வத்தை இழக்க நினைக்கும் உன் பேதைமை என்னே !" எனப் பலவாறு பிதற்றித் தேவர்களும் வணங்கும் பெருமையையுடைய அவன், பிராட்டியாரின் திருவடியில் விழுந்து இறைஞ்சினன். அச்செய்கை இதுகாறும் பல பெண் தெய்வங்களுக்குத் தானியற்றிய குற்றங்களை மன்னிக்குமாறு பிராட்டியாரிடம் மன்றாடுவது போன்றும், இனி அக்கொடிய குற்றங்களை இழையாவாறு தன் தலையை அறுக்கக் காகுத்தரிடம் புருஷகாரம் செய்யும் வண்ணம் கெஞ்சுவதுபோன்றும் காணப்பட்டது. அவன்

பயனற்ற கொடிய வார்த்தைகள் பிராட்டியாரின் செவியைச் சுட்டன. அக்கயவன் கூறிய அற்ப வார்த்தைகளைக் கேட்கு மாறு நேர்ந்ததே எனப் பிராட்டியார் மனம் வருந்திற்று. அவன் வாய் மூடுமளவும் அவர் ஒன்றுஞ் செப்பிலர். அவன் புகன்ற வார்த்தைகள் அவர்சிந்தைக்கும்அறிவிற்கும் சிறிதும் ஒவ்வாதன. அக்கொடிய சொற்கள் அவரை எங்ஙனம் வருத்தி யவோ! யாம் அறியோம். அந்தோ! அவர் நிலைமையை என் னென்று கூறுவது! என் செய்வார் பாவம்! வேறு துணையோ இல்லை. அவனோ, வன்கண்ணன்; கற்பின் கண்ணியத்தை உணராக் கயவன். இந்நிலையில் நம் அன்னையார் அடைந்த துன்பம் சூழுந் தகைமை உடையதாமோ? ஆயினும், அவர் தம் மனத் திட்பத்தைச் சிறிதும் விட்டிலர். அஞ்சுவதை அறவே ஒழித்தனர்; "யான் ஏன் இந்த அற்பப் பதருக்கு அஞ்சுதல் வேண்டும்! என் நடுக்கமே பின்னும் இவனை ஊக்கு மன்றோ? அறிவுடையோர் தீமைக்கன்றோ சோர்வர்? அஞ்சு வதஞ்சாமையன்றோ பேதைமை? இவன் பயனற்ற ஆரவா ரமும், நலனற்ற ஆயுதங்களும் என்னை யாது செய்யும்? இன்றோ, இன்னும் சில நாட் கழித்தோ அழியக் கூடிய உடல்தானே துன்புறும்? அஃதன்றி, என் கற்புக் கோட் டையை உடைக்கவேனும், என் ஆன்மாவிற்குப் பழியுண் டாக்கவேனும் இத்தூர்த்தனால் முடியுமா? தனித்திருக்கும் இவ்வமயம் என்னை யான் காத்துக்கொள்ளுதல் என் கட மையல்லவா? பிறர் உதவியை நாடி நிற்க இது போதன்று. தனக்குத் தன் உதவியன்றி மற்றத் துணை பயனளிக்குமா? தன்னைத் தான் உயர்த்திக்கொள்வதற்கும், தாழ்த்திக்கொள் வதற்குந் தானேயன்றோ காரணம்? மனத் திட்பத்தைப் பெற்ற கற்பரசிகளுக்கு முன் அஃதற்ற கயவர்களின் வீரம்

என் செய்யும்? அக்கொற்றம் சூரியன் முன் ஒளியிழந்து திரியும் மின்மினிக்கு ஒப்பன்ரே? இவன் பித்து நன்மையை ஓர்ந்திலது. செல்வத்தையும், உருவத்தையுங் கொண்டு ஏமாற்ற முயலும் இவன் அறிவுதானென்னே! இவ்வற்ப ஆசையை அடக்க வன்மையற்ற இவன், தேவர்களையும் வசப்படுத்தியிருப்பது, கேவலம் தேக வன்மையினுலேயே அன்றிப் பிறிதென்னை? தன்னைத் தான் ஆள அறியாது பெண்ணின் காலில் விழுந்து இறைஞ்சுகின்ற இவன், இப்பெரிய இலங்கையை ஆளுகின்ருனும்! இது வியப்பினும் வியப்பே! ஒரு பெண்ணின் உறுதியைக் கண்டேனும், இவன் அறிவு பெறவேண்டாவா? இங்ஙனம் எத்தனை பெண்களிடம் இவன் அவமானமடைந்திருப்பனே! தனக்கு மிக்க செல்வமும், தவமும், தேக வன்மையுமிருப்பதனுல் என்ன வேண்டுமாயினும் செய்யலாம் எனக் கருதும் இவன் மதி என்னே! இது குற்றமென இவனுக்குப் புலனுகாதோ! இவன், தன்னை இடித்துரைக்கும் பெரியோர் துணைக்கோடலையும் விடுத்தனன் போலும்! அங்ஙனமாயின், இவன் கெடுப்பாரின்றியே கெடுவானன்ரே? செருக்கு வாய்ந்த இவன், யார் நல்லுரையைத்தான் செவியேற்பன்! எத்தனை பெண் தெய்வங்களின் சாப மொழிகள் இவனிடம் பொதிந்து கிடக்கின்றனவோ! உலகம் நகைக்கும் என்பதை இவன் சிறிதும் உன்னினுனில்லையே! இவன் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா! இவனுக்கும், மிருகத்திற்கும் வேறுபாடு யாது? சீ! கெட்டான்! " எனப் பலவாறு தம் மனத்துள் கருதி, அன்னையார் மிக்க வீரத்துடன் அவன் முன்னிலையில் பேசத் தொடங்கினுர்:

"அற்பத் துரும்பே, உத்தம மகளிர்க்குள்ள நிறை, கல் மனத்தையே அன்றிக் கற்கோட்டையையும் உண்டாக்கு

மென்பதை உணர்வாயாக. மூவுலகங்களையும் ஒரே அம்பி னால் அழிக்கும் காகுத்தர் வன்மைக்கு அஞ்சியன்றோ நீ என்னை மாயத்தினால் கொடுவந்தனை? கிழப் பறவையாகிய சடாயுவுக்கே மூர்ச்சித்து வீழ்ந்த நீ, ஸ்ரீராமபிரானார் முன் னின்று போர் செய்யும் வன்மையுடையவனாவாயோ? விளக் கின் முன் இருள் நில்லாதது போன்று, என் தலைவர் முன் உன் வரங்களுள் ஒன்றும் நிலை பெறாது. தம் கால் விரலி னால் உன்னை அழுத்தி வென்ற சிவபிரானது வில்லை ஓர் இமைப்பொழுதில் இரண்டு துண்டாக்கிய என் நாயகர் வன் மையைச் சிறிதும் நீ அறியாய் போலும்!

"ஓ! புரைபொதிந்த புல்லியனே, விற்றாங்கி என் அருகில் நின்ற இளவல் நீங்கியபின் வஞ்சனையினால் என்னைக் கவர்ந்த உன் வீரமே வீரம்! என் நாயகர் சினம், உன்னையும் உன் இனத்தாரையும் அழிக்கினும், அடங்குவதன்று. நீ ஒருவன் செய்த பிழைக்காக உலகமே அழிந்துவிடுமோ என யான் அஞ்சுகிறேன்.

"அறத்தின் மாண்பு உணரா மதியிலி, தேவர்கள் தரும நெறியில் நிற்றலினாலன்றோ உனக்குப் பெருவரங்களைக் கொடுக்குஞ் சீர்மை பெற்றார்கள்? அதையோராது, உனக் குள்ள வரங்களையும் போக்கிக்கொள்ள நீதியற்ற வழியில் நடக்கும் உன் மதியின் பெற்றி என்னே! காமம், வெகுளி, மயக்கமாகிய உட்பகைகளைப் போக்காதவர்கள் விளிந்தாரில் வேறல்லர் என்பதை நீ உணராயோ? உய்யா விழுமந் தரும் படிற்றொழுக்கத்தை நல்லறிவு வாய்ந்தோர் வழுக்கியும் மேற் கொள்வரோ?

"சன்மார்க்க முணராத மூடனே, உனக்கு நன்மதி புகட்டு கின்றவர் ஒருவரும் ஈண்டில்லையோ? தாடகை தவித்ததை

யும், சூர்ப்பநகை சோர்ந்ததையும், கரதூஷணர்கள் உயிரிழந்ததையும், மாரீசன் மாண்டதையும் அறிந்தும், அறிவு பெறாத உன் மதியை யான் என்னென்று சொல்லுவேன்! மக்களைத் தீண்டிக்கொல்லும் நஞ்சரவமும் மந்திரத்திற்குக் கட்டுப்படும். படிற்றொழுக்கமுள்ள நீ அடங்குவது எதனாலேயோ தெரியேன். அறிவுச்சுடர் கொளுத்தும் செப்பமுடையாரைப் பெறாத அரசும் ஓர் அரசாமோ! இடிப்பாரை இல்லாத மன்னன் கெடுப்பாரின்றியே கெடுதற்குத் தடை யாது? பிறன் மனை நோக்காத பேராண்மையற்ற ஒருவன் ஆண் மகனாவனோ! அந்தோ! என் வினைக உன் வரங்களும், செல்வமும், ஆயுளும் பொன்றுமாறு செயல் புரிகின்றனை?'' எனப் பிராட்டியார் அவனுக்கு நன்மதியும் இழிவும் உண்டாகுமாறு பல போதித்தனர். நீதியை உணரும் வாய்ப்பற்ற கயவனுக்கு அவர் நல்லுபதேசம் யாது பயனைத்தரும்? செவிடன் காதில் சங்கூதியதைப்போலாயிற்று.

வைதேகியாரின் வார்த்தைகள் அவன் சினத்தை எழுப்பின; அக்கொடுங்கோபம் அவனுக்குப் பிராட்டியாரிடமிருந்த காதலையுங் கண்டித்தது. அவர் செப்பிய வார்த்தைகளினால் அவன் நாணமடைந்தான். அவன் இருபது கண்களிலும் நெருப்புப் பொறி பறந்தது. பிராட்டியாரைத் தின்றுவிடலாமா என அவன் நினைத்தான். அவன் முன்னிலையில் இவ்வாறு கூறி வேறு யாரேனும் உயிர் பிழைப்பரோ! ஆனால், அவனுக்கு வைதேகியார் மாட்டுள்ள அன்பு அந்நினைப்பைச் சிறிது ஒதுக்கியது. ஆதலால், அவன் சினந்தணிந்து, " இவளுக்குக் கெடுதியை விளைவிக்கின், நம்முயிர் நில்லாதே! யாதோ சினத்தினால் இவள் இங்ஙனம் செப்புகின்றனள். நம் செல்வக் கூறுகளையும், செங்கோல் விழுப்

பத்தையும் இவள் உணர்ந்தாளில்லை. இவளை வசப்படுத்த நம்மாலாகாதா ? நாம் இப்போதே துரிதப்படுதல் தகுதி அன்று,'' என நினைத்து, பிராட்டியார் தன்னை இகழ்ந்து செப்பிய சொற்களுக்கு மறு மாற்றம் பகரலானான் :

"மெல்லிய இடையையும், நீர் வளமுள்ள நிலத்தில் தோன்றிய கன்னலை வென்ற சொற்களையுமுடைய அழகியே, இராம இலக்குமணர்களாகிய சிறு மானிடர்களுக்கு யான் அஞ்சினவன் என இயம்பிய உன் சொற்கள் சாலச் சிறப்புடையன! என் உண்மை வன்மையை நீ அறிந்திருப்பையேல், இவ்வாறு புகல உன் மனமெழாது ; யான் எதிர்க்கில், அவர்கள் கணப் பொழுதில் மாள்வது உண்மை. அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை நீப்பரேல், அவர்கள் மாட்டு வாரம் பூண்டொழுகும் நீயும் உயிர் துறப்பாய் ; உன்னை இழக்க நேரின், யானும் இறப்பன் ; அன்றியும், வனப்புக்கள் பலவும் ஒருங்கே திரண்டதெனப் பிறங்கும் உன்னை எனக்குத் தந்த அவர்கள் மாட்டு யான் நன்றி பாராட்டுதல் வேண்டாவோ ? இதுவே அவர்கள் பக்கம் யான் செல்லாமைக்குக் காரணமேயன்றி, நீ கருதுவதுபோல அச்சம் அன்று. இஃது உண்மையென நம்பு. இப்போதும், யான் இன்னும் சில நாட்கள் பார்ப்பேன் ; பின்னும் நீ எனக்கு இணங்கவில்லையேல், அந்த அற்ப மனிதர்களாகிய இரு சகோதரர்களையும் கொன்று, பரத சத்துருக்கினர் வதிகிற அயோத்தியையும் அழித்து, ஜனகன் உயிரையும் மிதிலையையும் நாசஞ் செய்வேன் ; இது நிச்சயம். 'ஒரு பெண்ணிற்காக இராவணன் அவள் குல முழுவதையும் பொன்றச் செய்தான்,' என்ற பெயரை நிலை நிறுத்துவேன்,'' என மிக்க சினத்துடன் புகன்று, அவர் எங்ஙனமேனும் தன் வசப்படுதற்கு ஏற்ற காரியங்களைச் செய்ய

அவனுள்ள அரக்கிகளுக்குக் கட்டளையிட்டு, அவணிருந்து

குரங்கின் கையில் கொள்ளியைத் தந்ததென இயல்பாகவே கொடுமை வாய்ந்த அரக்கிகளுக்கு இராவணனும் ஆணையைத்தந்தானெனில், அவர்கள் தீமை என்னாகும்? அத்தீயோர்கள் பிராட்டியாரைக் கூறிய வசைகளும் அவருக்குக் காட்டிய பயமும் அளப்பில. 'இவளை இப்போதே கொல்லுகிறேன்,' என்றாள் ஒருத்தி ; 'இவளைத் துண்டித்து உண்ணலாம்,' என்றாள் இன்னொருத்தி ; 'இராவணன் உன்மாட்டு வைத்திருக்கும் காதலைக்காட்டிலும் உனக்குக் கிடைக்கக் கூடிய சிறந்த பேறு யாது?' என்றாள் மற்றொருத்தி. 'இவளுக்கு நல்லறிவு இன்மையினாலேயே சிறு மக்களை உயர்த்தி, அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்ற இராவணனை இகழ்ந்தனள்,' என்றாள் வேறொருத்தி. 'இல்லை இல்லை ! இவளுக்கு உள்ளே விருப்பந்தான்; மேலுக்கு இவ்வாறு நடிக்கின்றாள். எல்லாம் இன்னும் சில நாட்களில் சரியாகும். அழகிலும் ஆண்மையிலும் சிறந்த இராவணேசுவரனை விரும்பாத பெண்களும் உலகிலுண்டோ?' என்றனர் சிலர்.

இன்னணம் அவர்கள் பிதற்றிய வார்த்தைகள் பலப்பல. ஆனால், அவைகளினால் நம் அன்னையாரின் மன உறுதி மாறிவிடுமோ! அரக்கிகளின் கொடிய வார்த்தைகளும், இராவணன் கட்டளையும் காகுத்தரையே கருத்திற் கொண்டிருக்கும் நிறை செல்வியாராகிய பிராட்டியாருக்குத் துன்பநகையை விளைவித்தன." அந்தோ! என் விதியும் இங்ஙனம் முடியுமா! நாயினிடம் அகப்பட்ட தேங்காய் ஆனேனே ! பன்றியுணருமா பனிநீர் மணத்தை ! இவ்வற்பர்களால் யான் படும் பாடு என்னே ! இங்ஙனம் வருமென்பதை யான் கனவிலும் கருதினேனில்

லேயே! இதற்கோ யான் பெண் பிறந்தேன்! இதனினும் இழிந்த வாழ்க்கை வேறு உண்டோ! இதனினும் நரகம் வேறு யாது! யாதினும் அரிய மானிடப் பிறவியால் யான் அடைந்த பயன் என்னே!" எனப் புலம்பினர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த திரிசடை, வைதேகியாரை நோக்கி, "அருந்ததியன்ன அன்னையே, யான் கண்ட கனவின் பயன் விரைவில் நிறைவேறும். நீ எதற்கும் அஞ்சற்க; நீ இவ்வாறு வருந்துவது உன் பெருந்தன்மைக்குச் சால்புடைத்தன்று," எனத் தேற்றினள். திரிசடையின் சொற்களினுல் அரக்கிகள் சிறிது அடங்கியிருந்தார்கள்.

இராவணன் பிதற்றிய பிதற்றலும் மற்ற இராக்கதிகள் புரிந்த கொடிய செய்கைகளும் அனுமானுக்கு அடங்காக் கோபத்தை மூட்டின. "இப்புலையனைத் தூக்கிக் கடலில் வீசி, இலங்கையை இப்போதே யான் பொடிபடுத்துகிறேன்! இப் பிசாசுகளை மிதித்துத் துவைத்துவிடுகிறேன்! இவர்கள் எத்துணை அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்! என்னருமைத் தாயாரை இப்போதே கொண்டுபோய்க் காகுத்தரிடம் ஒப்புவித்து, அவர் திருவடிகளை வணங்குகிறேன்!" எனத் தனக்குள்ளே அனுமான் பேசிக்கொண்டான். ஆனல், அங்ஙனம் செய்வதற்கு அது சமயமன்றென ஒரு தெய்வீக உணர்ச்சி அவனைத் தடுத்தது. அதற்கு அவன் இடந் தந்து, பொறுமை பூண்டான். பின் அனுமான் மந்திர வன்மையால் என்றும் துயிலாத அரக்கர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கினர்கள். அது பிராட்டியாருக்குப் பெருவியப்பைத் தந்தது.

"என் கொடிய விதியே, காகுத்தர் என்னை நாடி இவண் வருவாரா? என்னுருயிர்த் தலைவர் வில்லோசையையேனும் யான் கேட்பேனே? இப்பிறவியில் எனக்கு ஏதேனும் நலன்

டண்டாகுமா? அன்றி இவ்வரக்கர்கள் கொடுமையினாலேயே யான் உயிரிழக்க வேண்டுவதுதானா? விபாது என்னை வாட்டும் துன்பம் விலகுமா? தம் தந்தையார் சத்தியத்தைக் காத்த என் உயிர்த் துணைவர் இவண் போந்து என் துயரைப் போக்காமலிரார் என்ற உண்மையே என் உயிரை நிலை நிறுத்துகிறது. என் உயிரே, என் அறிவே, உங்களுக்கும் நாணமில்லையோ? அன்னிய நாட்டில் அருவருப்பபற்று வாழும் என்னுடன் நீங்களும் அமைந்து துன்புறுகின்றீர்களே! ஸ்ரீராமபிரானுரைக் காணுமளவும் நீங்களும் என்னை விட்டு நீங்கமாட்டீர்கள் போலும்! அன்னியனால் கவரப்பட்டுப் பிறர் நாட்டில் வதியும் பாவியாகிய என்னை உத்தமராகிய அவர் மீட்க வருவரோ? காகுத்தர் உண்ணீர்மையை உணர்வார் யார்! யான் உண்மைக் கற்புடையவளாயின், அன்னியர் நெஞ்சிற் புகுவேனோ! அவ்வாறு நுழைந்த யான், அவர்கள் அற்பவார்த்தைகளையுங் கேட்டுப் பிழைத்திருக்கின்றேனே! என்னினும் கொடிய இராக்கதி வேறு எவள்? என் உயர் குடிப் பிறப்பும், கற்பின் இயல்பும் மிக அழகியன! கற்பரசிகள் எனப் பகரும் பெண் மணிகளில் யாரேனும் என்னைப் போன்று கணவனை விட்டுப் பிரிந்து அன்னியன் மனையில் வதிந்தனரோ! இல்லை, இல்லை; 'இத்தகைய இவளை யாம் சென்று கொணரில், உலகம் பழிக்கும்,' என என் இராம இலக்குமணர்கள் கருதுதல் கூடாது? அங்ஙனம் அவர்கள் வெறுத்த பின் யான் உயிர் வாழ்வது எற்றுக்கு? பல தலைமுறைகளாகப் பழிப்பபற்ற எம் இரு குடும்பங்களுக்கும் பழிப்புக் கொணரவன்றோ யான் பெண் பிறந்தேன்! வஞ்சனையில் வந்த மாய மானின் பின் கணவரைப் போக்கினேன்; கடமையை மிக்க கருத்துடன் கடைப்பிடித்த குற்றமற்ற இளவலை

என் புன்சொற்கள் விலக்கின. யான் அன்னியரால் கவரப்படும் பெரும்பழிப்பைப் பெற்றேன். இத்தன்மையுடைய யான் உயிருடன் இருப்பதை உயர்ந்தோர் ஏற்றுக்கொள்வரோ!

"ஒருகால், என் தலைவர் இராக்கதரை அழித்து என்னை மீட்க நேரின், 'நீ கற்பினின்றும் வழுவாததற்குச் சான்று யாது?' என வினவில், அதை எதனுல் யான் உண்மைப்படுத்திக் காட்டுவேன்? அவர்கள் வந்து இலங்கையை அழிக்கினுஞ் சரி; இராவணனைக் கொல்லினுஞ் சரி; இவைகளை யான் யோசிப்பதில் யாது பயன்? எனக்குண்டான பழியை யானே துடைத்துக்கொள்ள வேண்டும். மானம் பட வரின் உயிர் வாழாக் கவரி மானினும் யான் கீழ்ப்பட்டவளானேன். கங்குலும் பகலும் விடாது என்னைக் காத்துக்கொண்டிருந்த அரக்கிகளும், இன்று தங்களை அறியாது உறங்குகின்றார்கள். இதுவும் என் நற்காலமேயாகும். இச்சமயத்தை விடின், பின் தக்க போது வாய்த்தல் அருமையினும் அருமை. இப்போதே என் உயிரை மாய்த்துக் கொள்ள ஏற்ற வழி தேடுவேன்," எனத் தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு, அருகிலிருந்த குருக்கத்தி மரச் செறிவை அணுகினார்.

மரக்கிளையில் மறைந்து இருந்த அனுமானுக்கு அன்னையார் எண்ணம் இன்னதெனத் தெரிந்தது. அவரைத் தடுத்தல் யாங்ஙனம் என அவன் சிந்தித்தான். சிறிது போழ்து தாழ்த்தற்கும் அது சமயமன்று. செய்யத் தகுவது யாது என அவனுக்குப் புலப்படவில்லை. அஃது அவனுக்கு ஒரு பெருஞ்சோதனையாயிருந்தது. அவன் தன் நுட்ப அறிவை உபயோகித்தற்கு ஒரு தக்க இடம் வாய்த்தது. சிறிது

தாமதிப்பினும், காரியம் பயனற்றுப் போம். இம்முறையில் அனுமான், "இப்போது இவர் இருக்கும் நிலையில் என் வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பரோ! எதைப் பகர்ந்தால் உடனே இவர் என்னைக் கடைக்கணிப்பர்!" என யோசித்தான். தெய்வ அருளால் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதுவே சரியென அவன் தீர்மானித்தான். மரத்திலிருந்து மெல்லென இறங்கி, 'ஸ்ரீராமபிரானார் அனுப்பியருளிய தூதுவன் யான்,' எனச் சொல்லிக்கொண்டே அன்னையார் முன்னிலையில் நின்றான்.

பின்பு மாருதி வைதேகியாரை நோக்கி, "பெண்கள் நாயகமே, தேவரீரைக் காணுதற் பொருட்டு உலகெங்கும் தேட நாற்றிசைகளுக்கும் திரண்ட சேனைகள் சென்றிருக்கின்றன. ஆனால், முற்பிறவியில் செய்த பெரும்புண்ணியத்தினால் அடியேன் உம் திருவடிகளைத் தரிசிக்க நேர்ந்தது. நீர் இவண் வதிவதை இரவி குல திலகர் அறிந்தாரில்லை; உணர்ந்திருப்பரேல், இராக்கதர் இதுகாறும் அழிந்திருப்பர். நெய் விளக்குக்கொப்பானவரே, நீர் நாயேனிடம் சிறிதும் ஐயங் கொள்ள வேண்டா. காகுத்தர் அளித்துள்ள ஓர் ஒப்பற்ற பொருளும், அவர் திருவாய் மலர்ந்துள்ள அருமை வார்த்தைகள் பலவும் அடியேனிடம் உள்ளன. அவைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உமக்கு உண்மையை விளக்கும்," எனச் செப்பிப் பணிந்து நின்றான்.

அவனைக் கண்ணுற்ற பிராட்டியார், முதலில், 'இராவணனே இவ்வாறு வஞ்ச வேடம் பூண்டு வந்திருப்பனோ!' எனச் சினங் கொண்டனர். ஆனால், ஸ்ரீராமபிரானாரின் திருநாமத்தைக் கேட்கக் கிடைத்தமையின், அது தணிந்தது. சிறிது போது அவன் கண்களையும், முகச் சாயலையும் உற்று நோக்கினர்.

"இவன் அரக்கனுயிரான்; புலனைந்தையும் வென்ற முனிவனோ! அன்றி விண்ணவனோ! அல்லது அறிவிற் சிறந்த ஆதிசேஷனமிசமோ! மாசற்ற மனத்தையும், தூய செய்கைகளையும் உடையவன் போன்று இவன் காணப்படுகிறான். இவன் தேவனுயினும், அரக்கனுயினும், இப்போது காண்பதுபோல் குரக்கினத் தலைவனுயினும் ஆகுக. இவனால் தீமையோ, நன்மையோ, எது விளையினும் விளைக. இவ்வமயம் என் உயிர் நாதர் இனிய திருநாமத்தைக் கூறி எனக்கு உணர்வையும் உயிரையும் ஒருங்கே ஈந்தான். இதைக்காட்டிலும் ஒருவர் எனக்குச் செய்யும் உதவி வேறுளதோ? இவனைக் காணுங்கால் என்னையறியாமலே என் மனம் உருகுகின்றது. அரக்கரைப் போன்று இவன் வஞ்ச வார்த்தைகளை உடையவனுகத் தோன்றிலன். இவன் படிறற்ற நீர்மையை இவன் முகம் நன்கு விளக்குகின்றது," என உன்னி, அவன் யாவன் எனப் பிராட்டியார் அன்புடன் உசாவினுர்.

தம் கணவர் பெயரைக் கேட்ட அளவில் தமக்குப் பெரும்பேறு கிடைத்துவிட்டதெனக் கருதிய நம் அன்னையாரின் உண்மையன்பின் திறமென்னே! ஆனுல், 'இஃது இம்மைக்குரியதும், அழிந்து போகக் கூடியதுமான அன்பு தானே? இதனுல் ஒருவன் அழியா இன்பத்தையடைய முடியுமோ?' எனச் சிலர் நினைக்கலாம். இவ்வன்பினுலேயே சிறந்த ஒழுக்கமும், அற்ப விஷயங்களில் வெறுப்பும், தன் கடமையில் ஊன்றுதலும், பாபத்தில் பயமும், பெரியோரிடத்தில் பக்தியும் ஏற்படும்; பின் மாசற்ற உள்ளமும், தூய எண்ணமும், பரந்த ஞானமும், விரிந்த நீர்மையும், களங்கமற்ற வாழ்க்கையும் உண்டாகும். இத்துணை அளவற்ற நலன்களைத் தரும் இது பேரின்பத்திற்கும் ஊன்றுகோலாயிருக்குமென்பதற்கு ஐயம் யாது? இது நிற்க.

அனுமான் பிராட்டியாரை வணங்கி, "கற்பிற்கணியே, அடியேன், இரவி குல திலகர் உம்மை விட்டுப் பிரிந்த பின் நட்புக்கொண்ட சுக்ரீவன் மந்திரி. இராவணனைத் தன் வாலிற் கட்டி எண் திசைகளிலும் சுற்றி வந்த வாலியின் உயிரைச் சுக்கிரவன் பொருட்டு உம் நாயகர் ஓர் அம்பினுல் வாங்கினுர். நீர் இழித்து நீத்துக் கிஷ்கிந்தை மலையின்மீது எறிந்த ஆபரணங்களைக் கண்டு அவர் அடைந்த துன்பம் சொல்லுந் தகைமையுடையதன்று. ஆனுல், அவ்வணிகலன்களே அவரை இதுகாறும் உயிருடன் நிலைத்திருக்கச் செய்து உம் மங்கல நாணைக் காத்தன எனக் கூறல் மிகையாகாது," என்றனன்.

'நீர் இழித்து நீத்த பணிகள்,' என அனுமான் கூறியதை நோக்குழி, கற்பிற் சிறந்த பெண் மணிகள் தங்கள் ஆருயிர் நாயகரைப் பிரிய நேரின், நல்லணிகள் பூண விரும்பாது அவைகளை வெறுத்து நீக்குவர் என அறியலாம். தம் தலைவரிடம் உண்மையன்புடையார் ஒவ்வொருவருக்கும் இது நிகழுமென்பதை அனுபவத்திலுங் காணலாம். ஆனுல், தற்காலத்தில் இதைக் கட்டுப்பாடாக வைத்துள்ளார்கள். இஃது அத்துணைச் சிறப்புடையதன்று.

வைதேகியார், இரவிகுல திலகர் திருமேனி வனப்பைக் கேட்க விழைய, இராம தூதன், அவர் திருவடி முதல் சிரம் வரை அமைந்த அழகின் நலன்களை வரன்முறையாக எடுத்தோதினன். அவைகளைச் செவியேற்ற பிராட்டியார் அனலிலிட்ட மெழுகெனக் கரைந்துருகினர். இதனுல் எங்ஙனம் ஈசுவரன் மெய்யன்பர், அவன் அழகமைப்பையும் குணங்களையும் பிறர் வாய்க் கேட்டபோது கண்ணீர் வார நைந்துருகுவரோ, அங்ஙனமே கணவர் மாட்டு மெய்யன்பு வாய்ந்த வனி

தையரும் தளர்வர் என அறியலாம். இது சீதையார் மாட்டு நன்கு வெளிப்பட்டது.

பின்பு அனுமான் காகுத்தர் பகர்ந்தனுப்பிய சொற்கள் சிலவற்றை மைதிலியாருக்குத் தெரிவிக்கத் தொடங்கி, "சக்கரவர்த்தியாரின் திருமகனார் உம்மிடம், 'யான் தந்தை தாயருரை கொண்டு கானத்திற்கேகி விரைவில் வருவன். அதுகாறும் நீ இவண் இரு,' எனப் புகன்றபோது, நீர் மிக்க கவலையுடனும், உடுத்த ஒற்றை ஆடையுடனும் அவராருகில் வந்து நின்றீராம். அயோத்திக் கோட்டை வாயிலைக் கடக்குமுன், 'காடு எவண் உள்ளது?' என வினவினீராம்; உம்மை விட்டு நாடேகும் சுமந்திரரிடம், உம் கிள்ளைகளையும் நாகணவாய்ப் பறவைகளையும் அன்புடன் வளர்க்க ஊர்மிளை முதலிய தங்கைகளுக்குச் சொல்லுமாறு கூறினீராம். இவைகளை உம்மிடம் தெரிவிக்க அவர் அடியேனுக்குப் பணித்துளர். அன்றியும், அப்பெருமானார் திருநாமம் பொறிக்கப் பெற்றதும் அழகுபட அமைந்ததுமான இக்கணையாழியையும் உம்மிடம் ஈயுமாறு அவர் இயம்பினார்," எனக் காகுத்தரின் திருவாழியைப் பிராட்டியாரின் கரத்திலளித்தனன்.

அதைக் கையிற் பெற்ற ஜானகியார் அடைந்த ஆநந்தத்தை அளந்து கூறல் இயலாது. ஒரு நற்றவமுமியற்றுமலே சிறந்த பேற்றைப் பெற்றவரென அவர் உள்ளம் பூரித்தது. இழந்த மாணிக்கத்தை அடைந்த அரவெனவும், தம்மை விட்டு நீங்கிய பெருஞ்செல்வத்தைப் பெற்ற நல்கூர்ந்தவரெனவும் அவர் இன்பத்திற்றிளைத்தனர். நீங்கிய உயிர் உடலை வந்து பற்றியதெனவும், அறிவு நிரம்பிய மகவை ஈன்ற மலடியெனவும் அவர் நெஞ்சுவந்தனர். இழந்த கண்களை மீண்டும் பெற்ற குருடனென அவர் மனம்

இன்பக் கடலிலாழ்ந்தது. அக்கணையாழியை, அவர் தம் சிரத்தின்மீது வைத்தனர்; தம் அழகிய கண்களில் ஒற்றிக்கொண்டனர். அதை அடைந்த இன்பத்தினால் அவருக்குத் தோள்கள் பூரித்தன. கணவரை நேராகக் காணப் பெறாமையின், பூரித்த தோள்கள் மெலிந்தன. 'ஈதேனும் காணக் கிடைத்ததே!' என மனங் குளிர்ந்தது; அத்துடன் திருப்தியுண்டாகாமையின், நெஞ்சேங்கியது. நாயகர் பொருள்களுள் ஒன்றையுங் காணமுடியாது என்ற கையறுநிலையிலிருந்த அன்னையாருக்கு அது புத்துயிரை நல்கியது. அம்மோதிரப் பரிசத்தினால் அவர் உயிரும் உடலும் ஊக்கமடைந்தன. அதற்குரியாரை அடையப் பெறாமையின், பெருமூச்செறிந்து உடலும் உயிரும் தளர்ந்தன. இங்ஙனம் அவருக்கு ஒன்றிற்கு ஒன்று முரணாக மாறி மாறி உண்டான அனுபவங்கள் பலவாகும்.

அவர் தாமரைக் கண்கள் ஆநந்தக் கண்ணீரைக் கான்றன. அதைத் துடைத்துக்கொண்டு, அரச குறியிட்ட அக்கணையாழியை அவர் ஊன்றி ஊன்றிப் பார்த்தனர்; அதைக் காணக் காண இருவரும் சேர்ந்திருந்த போது அனுபவித்த இன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவர் நினைவிற்கு வந்தன. உடனே காகுத்தர் உருவம் தம் கண்ணெதிரில் காணப்பட்டதாகக் கருதினர். அதனோடு பேச வேண்டுமென்னும் எண்ணம் அவருக்குத் தோன்றிற்று. ஆனால், நா, தன்னைத் தான் மறந்திருந்தமையின், தன் செய்கையை இயற்றிலது. மனமகிழ்வே மக்களின் உடலைப் பூரிக்கச் செய்யுமன்றோ? அங்ஙனமே அவ்வாழி அவர் மேனி முழுதையும் பொன்னிறமாக ஒளிரச்செய்தது. அது நம் அன்னையாரின் உயிரைக் காக்கும் சஞ்சீவியாயிற்று எனக் கூறினும், மிகையாகாது.

இல்லற ஒழுக்கம் தவருதவரை அடைந்த விருந்தெனவும் பசியால் வருந்துவோருக்குக் கிடைத்த அமுத உணவெனவும் அக்கணையாழி ஜானகியாரால் பெரிதும் பாராட்டப்பட்டது. அந்நிலையிலிருந்து சிறிது தெளிந்த ஜானகியார் தாம் எதிர் நோக்காது இவ்வரிய பொருளைக் கொணர்ந்த அனுமானை எவ்வாறு புகழ்வதெனச் சிந்தித்தனர். அவர் இராம தூதனை நோக்கி, "ஸ்ரீராமபிரானுரின் தூதனுக வந்து என் உயிரை உதவிய உனக்கு யான் புரியும் கைம்மாறு யாது? உயிரை மாத்திரமா? கீர்த்தியையும் நீ நிலை நிறுத்தினுய்; தற்கொலையினுல் உண்டாகும் பாவத்தையும் பழியையும் துரத்தினுய். துணையற்றுத் தியங்கும் என்னை உன் உறுதி வார்த்தைகள் ஆதரித்தன. ஊழால் ஏற்பட்ட இன்னலைத் துடைத்தாய்;என் பிராண நாதர் முகமென ஒளிரும் கணையாழியைத் தந்தனை; யான் பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும், அழியாப் புகழை நிலை நாட்டினுய். எனக்குத் தந்தையும் தாயும் நீயேயானுய்; உண்மையான தூய நினைவு நன்மையை ஈயாமற் போகாது என்பதை உலகமறிய உறுதிப்படுத்தினுய்; இதனுல், எனக்கு மாத்திரமன்றி என்னைப் போன்ற பெண்மணிகள் பலருக்கும் பயனளித்தவனுனுய்; இன்னணமாகிய நலன்கள் பல அளித்து ஆதரித்த உனக்கு எப்பொருளைக் கொடுத்தல் உசிதமாகும்? அழிந்து போகக் கூடிய உலகப் பொருள்கள் உன் உதவிக்குத் தகுதியுடையனவல்ல. ஒன்றையும் எதிர் பாராது பிறர் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணையும் விண்ணையும் ஈயினும் தகுதி உடையவாமோ? உனக்கீயும் ஒன்று என்றும் அழியாது உறுதிபயத்தல் வேண்டும்,'' எனக் கூறி, "யான் கற்பு நிலையினின்றும் வழுவாதவளாயின், நீ பிரம பிரளயமட்டும் இன்றிருப்பது போன்றே இளமையை

யும், வன்மையையும் பெற்றுச் சிரஞ்சீவியாக இருத்தல் வேண்டும்,'' என வாழ்த்தினர்.

இவ்வாழ்த்தை மிக்க பணிவுடன் ஏற்றுக்கொண்ட மாருதி வைதேகியாரின் பிரிவின் பின் ஸ்ரீராமருக்கு நிகழ்ந்தவைகளை விரிவாக எடுத்துக் கூறி, அவர் அன்னையாரைப் பிரிந்ததனால் அடைந்துள்ள துக்கத்தையும் தெரியப்படுத்தினன். அதன் பொருட்டுப் பிராட்டியார் மனம் பெரிதும் வருந்திற்று. பிராட்டியாரின் விழைவின்படி அனுமான் தன் பேருருவத்தை அவருக்குக் காட்டினன். யாரும் அஞ்சத்தக்க அப்பெரிய வடிவம் ஜானகியாருக்குப் பெருவியப்பை உண்டாக்கிற்று. அவன் வெற்றியைப் புகழாமலிருக்க அவருக்கு முடியவில்லை. அவர் நா துடித்தது; அவரை அறியாமலே சொற்கள் வெளிக் கிளம்பின : "உன் வெற்றியை என்னென்பேன்! மலைகளுடன் இவ்வுலகத்தை அடியோடு பெயர்க்கவும் இப்புவியைத் தாங்கும் ஆதிசேஷனை ஒரு கரத்தினுலிழுக்கவும் உன்னுல்முடியும். காகுத்தர் கீர்த்தியை உலகமுள்ளளவையும் நிலை நிறுத்துதற்கு நீ ஒருவனே சாலுவை. எழுகடல்கள் ஒன்றுகச் சேரினும் கடக்கக் கூடிய நீ, இச்சிறு கடலைக் கடந்தது சிறந்ததாகுமோ! இக்காரியத்தைச் செய்தாயெனப் பெருமை பாராட்டுவதும் உன் வன்மைக்கு இழிந்ததே! இஃது, ஆண் சிங்கத்தையொத்த பகைவர் பலரை ஒரு நொடியில் வெட்டி வீழ்த்தக் கூடிய வீரன் ஒருவன், ஒரு கொதுகை வெட்டினுன் எனப் புகழ்வதை ஒக்கும். உன் உண்மை வன்மையைத் தெரிவிக்க இப்பலங்கவர் நகரம் இன்னும் பல கடல்களுக்கப்புறம் இல்லாமற் போயிற்றே என யான் வருந்துகிறேன். அப்போதன்றே, உன் சிறப்பு வெளிப்படும்! உன் உருவத்தைப் போன்றே, வன்மையும்,ஐம்

புலன்களை அடக்கும் நீர்மையும், மனத் தெளிவும் பிறர்காணு தவாறு உன்னிடம் அடங்கியிருக்கின்றன. தம்பியார் ஒருவரையே துணையாகக் கொண்டு இரவி குல திலகர் எங்ஙனம் இவ்வரக்கரை அழிக்க முடியும் எனக்கருதிய என் ஐயம் உன்னால் விலகிற்று. இவ்வுலகம் முழுமையும் அழிப்பதற்கும் உன் ஒருவன் துணையே போதியதாகும். யான் இனிப் பிராணுபத்தினின்றும் நீங்கினேன். இன்றே இக்கொடிய அரக்கர்களின் இடையூறுகள் யாவும் என்னைவிட்டுத் தொலைந்தன. இப்போதே இவ்வரக்கர்களை அழித்தவளானேன். என் கவலை முழுதும் ஒழிந்தது. என் நாயகர் திருவடியை இன்றே யான் அடைந்து கீர்த்தி பெற்றேன்.''

இவ்வாறு வைதேகியார் மாருதியைப் புகழ்ந்த புகழ்ச்சி அளவிடற்பாலதன்று. இங்கு ஜானகியார் கூறிய வார்த்தைகளைக் கூர்ந்து நோக்குழி, அவர் தற்கொலையின் தீமையை நன்கு உணர்ந்திருந்தாரென்பது புலனுகின்றது. ஆயினும், வேறு வகையின்மையின், அதற்கு ஒரு வகையாகத் துணிந்தார். உயிரினும் சிறந்தது ஒழுக்கமாதலின், அவ்வொழுக்கத்திற்கு இழிவுண்டாகுமுன் இறப்பதே தகுதி என்பது அவர் கருத்து. இழிந்த வாழ்க்கையினும், உயிரிழக்கும் குற்றம் தீமையுடையதன்று என அவர் உன்னினர். உத்தமப் பெண்ணுலகம் மானம்பட வாழ மனங்கொள்ளுமா? ஒழுக்கத்தையும் உயிரையும் ஒருங்கே காக்க முயல்வதே பெண் தன்மையாகும். அஃது அருமையாயின், உயிரைநீக்க முற்படுவரேயன்றி, மானத்தை விட்டு ஆவிகாக்கும் அற்ப ஆட்சியை மேற்கொள்ளார் நிறையை நிலையென மதிக்கும் மடந்தையர். இதை, வைதேகியாரின் மன நிலை நன்கு வற்புறுத்துகின்றது.

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
MYLAPORE, MADRAS-4

ஜானகியார், கறபினை உயிரினும் உயர்ந்ததாகக் கருதி யதனாற்றான், சுத்த சீலனாகிய மாருதியை வாழ்த்தும் பாக்கியத்தைப் பெற்றார். குணமென்னும் குன்றேறி நின்றார் சொற்கள் கல்லின்மேலெழுத்தெனா நிலை நின்று பயனளிக்குமன்றோ? மன நீர்மையினும், வன்மையினும், நுண்ணறிவினும் சாலச் சிறந்த அனுமானுக்கு எது வேண்டற்பாலது என ஆய்ந்துணர்ந்த அன்னையாரின் அறிவின் திறமென்னே! தம்வாழ்த்து அதைப் பெற்றவனுக்கு மாத்திரம் பயனளித்து நிற்றல் அத்துணைச் சிறந்ததன்று என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தனர். ஆதலால், அவன் உயர்ந்த நீர்மைகள் பல பேர்க்கும் பல நாளும் பயனளித்தல் வேண்டி அவன் ஆயுளைத் தம் வாழ்த்தினால் வளர்த்தனர். தமக்குரிய வன்மையைத் தக்க வழியில் உபயோகிக்கும் வகையறியாவிடின், பயனென்னை?

ஜானகியார் தன்னைப் பலபடப் புகழ்ந்ததற்கு அனுமான் சிறிதுநாணி, தன்னைவிட வன்மையுள்ள குரக்குச் சேனைகள் எழுபது வெள்ளமிருக்கின்றனவென்றும், அவைகளில் தான் ஒரு சிறியன் என்றும் அவருக்குத் தெரிவித்தான். இதனால் பிராட்டியார் கவலை பெரிதும் நீங்கியது.

பின்பு அனுமான் பிராட்டியாரை நோக்கி, "பூங்கொடியன்ன அன்னையீர், அடியேன் தேவரீரிடம் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டிய சிறு விஷயம் ஒன்றுளது. அதன் பொருட்டு நீர் அற்பன்பால் சினங்கொள்ளவேண்டா. உம்மை இத்துன்பக் கடலில் விட்டுச் செல்ல அடியேன் மனம் இசைந்திலது. கருணை கூர்ந்து புல்லன் தோளில் இருப்பீரேல், இடையில் சிறிதும் தாழாது எதிர்த்து வரும் அரக்கர்களை நீறு படுத்தி உம்மை எம்பெருமானாரின் திருவடிகளில்

கொண்டுபோய்ச் சேர்ப்பன். இவ்விலங்கையுடன் பெயர்க்கக் கட்டளையிடினும், அங்ஙனமே செய்யத் தடையிலது. இலங்கையை எரித்து நீறுக்கச் செப்பினும், அவ்வாறே செய்கிறேன். காகுத்தரிடம் சென்று, 'அன்னையாரைக் கண்டேன். ஆனால், அத்தீயவர் காவலில் வருந்துமாறு அவரை விட்டு வந்தேன்,' எனக் கூறின், என் அடிமைத் திறம் எத்துணை அழகுடையதாகும்! ஆதலால், இத்தொண்டை அடியேனுக்கு அருள் புரிவீராக,'' எனப் பணிந்து கூறினன்.

அனுமான் மிக்க அன்புடன் விளம்பிய வார்த்தைகளைச் செவி சாற்றிய ஜானகியார், அக்காரியம் அவனுக்கு அருமையன்று என்பதை உணர்ந்தார். ஆயினும், அங்ஙனஞ் செய்தல் தக்கது அன்று என்பது அவர் கருத்து. ஆதலால், அவர் இராம தூதனை நோக்கி, "வீராதி வீரனே, நீ புகன்றயாவும் உன்னால் கூடாதனவல்ல. நீ அவைகளைச் செய்தே முடிப்பாய்; ஆயினும், அறியாமையையும், பேதைமையையுமுடைய என் பெண் தன்மை இது தகுதியன்று என நினைக்கின்றது. என்னை நீ தூக்கிச் செல்லுங்கால் கொடிய அரக்கர் உன்னை வழி மறிப்பர். அவ்வமயம் யான் அவர்களால் துன்புறா வண்ணம் என்னைக் காக்கவும் வேண்டும்; அவர்களோடு போராடவும் வேண்டும். இக்காரியங்கள் இரண்டையும் ஒரே காலத்தில் செய்தல் எத்துணைக் கடினமாகும்! உன் மனமும் மிகத் துன்புறும். அரக்கர் ஒருவர் பின்னொருவராக உன்மீது சீறிவருவரேல், என்னை ஒருகரத்திற்றாங்கி, மற்றொரு கரத்தினால் ஆயுதமொன்றுமின்றி உன்னால் எத்துணைப் போது போர் புரிய முடியும்? அதற்கு நாட்கள் பல வீணாகுமன்றோ? அப்போது நீ கருதியபடி கடிதில் காகுத்தரை அடைவது யாங்ஙனம்?

அவ்வளவு விழுமங்களுடன் அரக்கரை வென்று, என்னைக் காகுத்தரிடம் கொண்டுபோய் விடினும், அதில் அவருக்கென்ன பெருமையுண்டு? 'இரவி குல திலகரின் இல்லக் கிழத்தியை ஓர் அரக்கன் வஞ்சித்துக் கொண்டு போயினன்! அவன் எதிர் நின்று போர் புரிய வன்மையற்ற இராகவர் அனுமானை அனுப்பி அவளைத் தருவித்துக்கொண்டார்,' என்னும் வசைச்சொல் நம் தலைவரையடையுமன்றோ? அவர் வில்லின் வீரமும் மாசுறும். அன்றியும், நீ இப்போது என்னைக் கொண்டுபோக வேண்டுமென நினைக்கும் முறைக்கும், வஞ்சக இராவணன் என்னைக் கவர்ந்து வந்தமுறைக்கும் வேறுபாடு யாதுளது? மனத் திட்பம் வாய்ந்த என் உடலை இச்சித்துக் கண்ட கண்களைக் காக்கை கொத்தும்படி நம் காகுத்தரின் வில் செய்ய வேண்டாவா? இக்கொடிய செய்கைக்கு இடங் கொடுத்து நின்ற மற்ற அரக்கர்கள் எலும்புகளும் மலைபோலக் குவிதலன்றோ முறை? இவணிருந்து யான் நீங்க வேண்டும் என நினைக்கில், ஒரு சொல்லினால் இவ்விலங்கையைமட்டுமன்றி, எல்லா உலகங்களையுமே எரித்துவிட்டிருப்பேன். அஃது என் இலக்கணத்திற்குத் தகுதியுடையதன்று என்ற எண்ணம் என்னை இடைநின்று தடுக்கின்றது.

"உயர் குடியிற் பிறந்த பெண்களின் பெருந்தன்மையையும், கற்பின் திண்மையையும் உலகம் யாங்ஙனம் உணரும்? யான் என் நன்மையைத் தேடிக்கொள்வேனெனில், மற்றப் பெண் மணிகளின் துயரம் ஒழிவதெவ்வாறு? இவ்விலங்கையில் பல நாட்களாகச் சிறையிருந்து துக்கப்படும் பெண்கள் மீள வேண்டாவா? அவர்களுக்காக யான் இன்னும் சிறிது காலம் வருந்துவது பெரிய காரியமன்றே? அதை நோக்கில் அரக்கன் இங்கு என்னைக் கொணர்ந்ததும் நன்மைக்

கெனவே யான் நினைக்கிறேன். நிறை செல்வியை விரும்புவதால் உண்டாகும் கேடு இத்துணைத்தென்பதை இவனைப் போன்ற கயவர்கள் உணரட்டும். நீ அற்ப விழைவுகளை அறவேயொழித்தவனென்பதை யான் உணர்வேன். ஆயினும், ஆண்மகனாகிய உன்னைத் தீண்டுதல் கற்புடை மகளிர்க்கு அழகன்று. இக்கொடிய அரக்கனும் என்னை நிலத்துடனேயே பெயர்த்து வந்தான். அங்ஙனமின்றி இவன் என்னைத் தொட்டிருப்பனேல், உடனே எரிந்திருப்பன். தன்னை விரும்பாத கற்புடைய மங்கையரைத் தொடில், இவன் பத்துத் தலைகளும் சிதறுண்ணும் என ஒரு சாபத்தை இவன் பெற்றுள்ளான். இதைச் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டொழுகும் விபீஷணரின் புதல்வி திரிசடையினால் யான் உணர்ந்தேன். அவள் என்னைத் தேற்றுதற்காகக் கூறிய வார்த்தைகள் பலவற்றில் இதுவும் ஒன்று. அச்சாபத்தையும், என் நாயகரின் வன்மையையும், என் கற்பின் திண்மையையும் நம்பியே இதுகாறும் யான் உயிருடனுள்ளேன். என் நாயகரே வந்து பகைவனைத் தண்டித்து என்னைப் பெற்றாலன்றி, அவருக்கு இசையுண்டாகாது. தேவர்களும் தங்கள் குறையொழிந்தவர்களாக மாட்டார்கள். இருடிகளின் மிடியும் நீங்காது; கற்புடைய மங்கையர்களும் களிக்க முடியாது; அவர் கானகத்திற்கு வந்த தன் பயனையும் அடைய இயலாது; ஆதலால், நீ காகுத்தரிடஞ் சென்று செய்தியைக் கூறுவதே தகுதி," எனப்பணித்தனர்.

இச்சொற்கள் அனுமானைப் பெருவியப்பில் ஆழ்த்தின. "உயிர் போகும் போதும் உறுதியை விடா இவர் மனத்திடம் என்னே! ஈதன்றோ கற்பென்னும் கலங்காத நிலைமை! நம் வன்மையும், நாயகரிடம் சென்று சேர வேண்டுமென்ற இவர் ஆர்வமும் துக்கமும் ஒன்று சேர்ந்தும், அவை இவர்

கற்பாணை அழிக்கும் வன்மையற்றன அன்றோ! இத்தகைய பெண்களைக்காட்டினும் உலகத்திற் சிறந்த பொருள் யாது?' கற்புத்திண்மை பெற்ற பெண்களினும் உயர் பொருள் ஒன்று மிலது என்னும்பெரியோர் வாக்கு இப்பெற்றி வாய்ந்த பெண்களுக்குப் பொருத்தமானதே. இத்தகையோரை இல்லக் கிழத்தியாக வாய்க்கப்பெற்ற கணவர்களல்லரோ ஆண் தன்மையுடையவர்கள் ஆவார்கள்! அவர்கள் பாக்கியமே யாவற்றிலும் சிறந்ததாகும். இவர்உலகத்தலைவரின் தேவியார் என்பதற்குத் தக்கவரே,'' எனத் தீர்மானித்தான்.

பின்பு மாருதி அன்னையாரை நோக்கி, "உம் தவம் சாலச் சிறந்தது! இத்தகைய கொடிய அரக்கர் ஆயிரம் பேர் ஒருங்கு சேர்ந்து வரினும், உம் கற்புக் கோட்டையைச் சிதைக்க முடியாதென்பது திண்ணம். உம் மன நிலையை யான் நன்குணர்ந்தேன். உம் நுண்ணிய அறிவின் மாட்சியை யாரே புகழவல்லார்! உம் ஆழ்ந்த அறிவிலிருந்து ஆதிசேஷனும் சிறிது கடன் கொள்ள வேண்டும்!'' எனப் பலபடப் பாராட்டினன்.

இங்கு நாம் சிறிது ஊன்றி நோக்குதல் வேண்டும்: மாருதி அறிவில் துறைபோயவன் என்பதில் ஐயமிலது. ஆயினும், பிராட்டியாரின் அனுதாபமும், காகுத்தர் மைதிலியாரின் பிரிவினாற் படுந்துயரமும் அவன் அறிவை மயக்கின. தன் வீரத்திற்குத் தக்க செய்கையும் ஒன்று வேண்டுமென நினைத்தான். இம்முறையில் அவன் பின் வருவதையேனும், இதனால் காகுத்தருக்கு உண்டாகும் பழிப்பையேனும் ஓர்ந்திலன். அறிவுடையோரும் இங்ஙனம் சிற்சில சமயங்களில் தவறல் இயல்பு. பிராட்டியாரும், தம் ஆபத்து நிலையையும் அவன் உயர்ந்த மதியையுங் கருதி அவனுடன் செல்ல

உடன்பட்டிருப்பரேல், அவர் இப்போது அடைந்துள்ள பெருங்கீர்த்தியைப் பெற்றிருப்பரோ? பாமரரும், பண்டிதரும், பக்தியற்ரோரும், பக்தியுற்ரோரும் போற்றும் பெருமிதத்திற்கு அவர் உரியவராவரோ? ஆகார் என்பது திண்ணம். நுட்ப அறிவுடையோரும், சத்துவம், இராஜசம், தாமதம் முதலிய முக்குணங்களின் வேறுபாட்டினுல் சில சமயங்களில் முறை பிறழக் கூடுமன்ரோ? ஆதலின்,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு." —திருவள்ளுவர்

என்னும் பொய்யா மொழியில் நினைவு வைத்து ஒழுகுவதே சிறப்புடைத்து. நம்மனோர்களிற் பலர், சிறிது அறிவுடைய ஒருவர் தம்மை ஏதாவது ஒன்றைச் செய்யத் தூண்டுங்கால், கூறினவர்களின் அறிவு, அனுபவம், செல்வம், கல்வி முதலியவற்றை நோக்கி அங்ஙனமே செய்யத் தீர்மானித்துவிடுகின்றனர். சில சமயங்களில் அங்ஙனம் கூறினவர்களே இயற்றிய பிறகு இகழ்வதுமுண்டு. அவர்கள் முதலில் நம்மைத் தூண்டியது தெரியாமையினுலோ, அன்றிப் பொருமை முதலிய வேறு காரணங்களினுலோ இருக்கலாம். எதற்கும் நம் அறிவையும் சிறிது உபயோகித்து, ஆழ்ந்து சிந்தித்து, நன்மையென நமக்குப் புலப்பட்ட பிறகே நாம் ஒன்றில் நுழைய வேண்டும். இம்முறையில் தவறித் துன்பமடைகின்றவர்களில் பெரும்பாலோர் பெண்டிரே ஆதலால், பெரியோர்கள் நம் சிறுவர் சிறுமிகளை இளமையிலிருந்தே ஊன்றி யோசிக்கும் தன்மையில் பழக்க வேண்டும். இதுவே அவர்களுக்குப் பெருநிதியாகும். நம் பிள்ளைகளுள் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திப்பதில் இவ்வன்னையாரைப் போன்று ஒழுக முயலுதல் நலம். பிராட்டியாரின் வாழ்க்கையில் ஊன்றி

நோக்க வேண்டிய இடங்கள் பலவற்றில் இதுவும் ஒன்று. இஃது அன்னையாரின் மதியையும், ஆராய்ச்சியையும், பொறுமையையும், பதி பக்தியையும் அளந்தறிதற்கு ஓர் அளவு கோலாகும். மாருதி ஆய்ந்த அறிவுடையவன்; தம் மாட்டுத் தாயன்புடையவன் என்பவைகளைப் பிராட்டியார் நன்குணர்வர். பெருமுயற்சியில் ஈடு படுபவரில் சிலர் தாம் மேற்கொண்ட காரியம் முடிதற்பொருட்டு ஒரு போது முறையிலிருந்து தவறலும் உண்டு. ஆதலினாற்றான் நம் அன்னையார் அவன் உயர்ந்த அறிவை மாத்திரங் கொண்டு அவன் எண்ணத்திற்கு இணங்கிவிட்டாரில்லை. ஆயிரம் இன்னல்கள் அடுத்தடுத்துவரினும், உத்தம மங்கையர் தெய்வக் கற்பைத் தேய விடுவரோ? பெண் பண்பிலிருந்து பிறழ்வரோ? உயர்ந்தோர் தம்மைக் கடவுளாகக் கொண்டாடும் கண்ணியத்தை இழப்பரோ? தம் நிறையின் நீர்மையினின்று நீங்குவரோ? ஆதலின், அவன் எண்ணத்திலிருந்து தம்மைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென அவர் ஊன்றி யோசித்தனர். இவ்வூன்றிய யோசனை, பெண்ணுலகிற்கே பெருமையை நாட்டக் கூடியது. அவன் கருதியது தகுதியற்றதென அவருக்குப் புலனாயிற்று. மாருதி நினைப்பின்படி தாம் ஒழுக முடியாது என்பதை அவர் நன்கு தீர்மானித்துக்கொண்டார். ஆனால், அவன் கொள்கை தவறெனக் கூறின், அவன் மனம் புண்படும். ஆதலின், மிக நயமாக, அவன் நெஞ்சம் துன்புறுவாறு, அவர் விஷயங்களை எடுத்தியம்பினார். ஈதன்றோ அறிவின் திறம்! நுட்ப மதி வாய்ந்த பெண்களுக்கே இஃது ஒரு பெற்றியாகும். சிலர் தாம் இயம்பும் கோட்பாடுகள் நீதியைத் தழுவியவேயாயினும், மற்றவர்களின் நீர்மையை உணராமல், அவர் மனம் புண்படுமாறு பகர்ந்து காரியத்தைக்

கெடுத்துக்கொள்வதுமுண்டு. இதனால், தாமும் பிறரும் பயன் பெற இயலாமற் போகிறது. இது நிற்க.

மனமாசற்ற தீண்டுகை குற்றமற்றதேயாயினும், அதை யும் ஜானகியார் மறுக்கின்றார். ஒழுக்கம் உயிர் நிலையெனக் கருதும் பெண்ணீர்மை இதுவேயாகும். சில பொருள்கள் எங்ஙனம் பரிசத்தினாலேயே பொலிவிழக்கின்றனவோ, அங்ஙனமே பெண்ணீர்மையின் உயர்வும் பிறர் தீண்டுதலால் கெடக் கூடும். 'இது பழங்காலக் குருட்டுத் தன்மை; இப் போதைய நாகரிகத்திற்கு இஃது ஏற்காது,' எனப் பறைசாற் றும் இக்காலத்திலும் உண்மை நிறையுடையார் மனம் இதற்கு இடந் தருவதில்லை. இதுவே பெண்களுக்குள்ள பயிர்ப்புக் குணமாகும்.

அறிவுடையோர் பலராலும் கொண்டாடத் தக்க இவ் வரிய நீர்மையை, அவர், 'என் பெரிய பேதைமைச் சின்மதி', என விளம்புகிறார். தமக்குள்ள பெருந்தன்மையைச் சிறு மைப்படுத்திக் கூறிய இதுவும் ஓர் உயர்ந்த பெண்ணீர்மை யேயாகும். பெண்களுக்குள்ள இயற்கைக் குணங்கள் பல வற்றில் இந்நீர்மையும் ஒன்று. அன்றியும், அனுமான் தம்மை உடனே கொண்டுபோக வேண்டுமென நிற்கிற வீர விரை வைக் குறைப்பதற்கு இத்தகைய அடக்கச் சொற்களே தகு தியென அவர் உன்னினார். 'பேதைமை என்பது கேவலம் அறியாமையின்பாற் பட்டது. இது மாதர்க்கு அணிகலம். பெண்டிர் நுட்ப மதியற்றவர்,' எனக் கூறும் சாமானியர் கருத்தை இதனால் அன்னையார் கண்டித்தனர் போலும்! இங்கு அன்னையார் எதற்காகப் பேதைமைச் சின்மதியெனப் பகர்ந்தனர் என்பதை நோக்குக. உயர்மதியும், ஆண்மையும், கலைத்தெளிவும் வாய்ந்த அனுமான் கொள்கையை அன்றோ அன்னையாரின் பேதைமைச் சின்மதி திருத்திற்று?

கருத்தோ, தூய்மையும் பீடும் பெற்றது. சொற்களோ, தாழ்மையும் இனிமையும் வாய்ந்தன. ஈதன்றோ பணிவு என்பது! இத்தகைப் பணிந்த இன்சொற்களினால் உலகத்தையே திருத்தலாமன்றோ? ஆனால், தீயோரைத் திருத்த இவ்வியல்பு பயன்படாததாகும். அங்குக் கடின சொற்களையும், வன்மையையுமே உபயோகப்படுத்தல்வேண்டும். அதை அவர் இராவணனிடம் நடந்துகொண்ட முறையிலிருந்தும், இயம்பிய வார்த்தைகளிலிருந்தும் நன்கு உணரலாம். இதனால், அவர் சமயோசித அறிவு வெளிப்படுகின்றது.

அனுமான் வன்மையை நன்குணர்ந்து, 'உனக்கு என்னைக் கொண்டுபோவது அரியதன்று,' எனக் கூறிய இவரே, 'இராக்கதர்கள் உன்னை எதிர்க்குங்கால் நீ மிகவுந் துன்பப் பட நேரிடும்,' எனப் புகலுகிறார். பல காரணங்களை மனத்திலிறுத்தி இதை மேல் போக்காகப் பகருகின்றனரேயன்றிப் பிறிதில்லை. இது, பின்பு அவர் நிரல் நிரலாக எடுத்தியம்பும் விஷயங்கள் பலவற்றால் நன்கு புலனாகிறது. இதனால், பலவற்றையும் அறிந்தும் அறியாதவர் போன்றொழுகும் பேதைமைக் குணம் அவரிடம் மிளிர்ந்ததெனத் அறியலாம்.

அன்னையார் தம் நாயகரின் கொடிய சிலை மாசுறும் என்றும், அனுமான் ஆண்மைக்கு இழுக்குண்டாகுமென்றும் அஞ்சுகின்றார். அஞ்சுவதற்குஅஞ்சுவதன்றோ அறிவுடைமை? இங்கு அச்சந் தலை காட்டுகிறது. கடைசியாக, 'இவ்விலங்கை மாத்திரமன்றி, இவ்வுலகங்கள் யாவையுமே என் சொல்லினாற் சுடுவேன்,' எனத் தம் பெண்மை வீரத்தைக் காட்டுகிறார். ஈதன்றோ பெண்களுக்கு வீரப் பெற்றி! தம்மை ஓர் உதவியுமற்ற திக்கற்ற பெண் என அனுமான் நினைத்துப் பரிதபித்தல் கூடாது என்பது அவர் கருத்து. அவர் இங்கு

னம் பலவற்றை எடுத்தியம்பி, அனுமான் தான் எண்ணியது தவறு என நினைக்கும்படி செய்தனர். அவர் சொல் வன்மை, மாருதியை மறு வார்த்தை பேசா வண்ணம் செய்தது. இவைகளை ஊன்றி நோக்குங்கால், ஜானகியாரின் பெண்மைப் பீடும், அறிவு மாண்பும், நிறை நேர்மையும், கற்பு வீரமும், பதி பக்தியும், ஒப்புரவறிதலும், உலகத்திற் கஞ்சலும் நன்கு புலனாகின்றனவன்றோ ?

அன்றியும், அன்னையாருக்குள்ள மற்றுமொரு தலை சிறந்த குணமும் இவண் புலப்படுகிறது. அஃதாவது, அவர் அனுமானை நோக்கிச் செப்பிய வார்த்தைகள் பலவற்றில், 'யான் இன்னும் சில நாட்கள் இவண் பொறுமையோடிருப்பினன்றி, இக்கொடிய அரக்கர்களாற் சிறைபட்டிருக்கும் அருமைப் பெண்மணிகளை வெளிப்படுத்தல் இயலாது. ஆதலால், அவர்கள் பொருட்டு யான் இராம பிரானார் இங்கு எழுந்தருளி அரக்கர்களைத் தண்டிக்குமட்டும் இங்ஙனே காத்திருத்தல் வேண்டும்,' என்பதாகும். இப்பண்பை என்னென்று கூறுவது ! ஒருவர், மிகுந்த கல்வி, திரண்ட செல்வம், உயர்ந்த நாகரிகம் முதலியவற்றால் மாத்திரம் இக்குணத்தைப் பெற்றுவிட இயலுமா ? இயலவே இயலாது. இஃது ஒரு தனிப்பட்ட பிறவிக் குணமாகும். ஈகையும், தயையும் பிறவிக்குணங்களன்றோ ? தெய்வீகக் குணங்கள் பலவற்றினும், இதுவே தலை சிறந்தது. இதுதான், தன்னலம் பாராத் தகைமையதாகும். ஒருவர் வருந்தினாலன்றிப் பல பேர் நன்மையடைய முடியாதன்றோ ? தமக்கென வாழார் பிறர் நலங் கருதுபவர். அவரே மக்களிற்றலையாயவர். நம் ஜானகியார் அவதரித்தது தேவ மகளிரைச் சிறை மீட்கவே எனப் பகருவதுதான் பொருத்தமாகும். இதிகாசமாகிய இராமா

யணம் வைதேகியாராலேயே பெருமை பெற்றது எனக் கூறி னும், மிகையாகாது. இங்கு, 'இராமாயணம் சிறையிருந்த வள் ஏற்றம் சொல்லுகிறது,' எனத் திருவாய் மலர்ந்தருளிய பிள்ளை லோகாசாரியர் வாக்கை நோக்குக. இது நிற்க.

'அன்னையார் தம்மைத் தாமே பெருமைப்படுத்திக் கொண்டது தகுதியுடையதாமோ?' என்னில், அற்றன்று. அவ்வமயம் அனுமான் தம்மைக் காகுத்தரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென நின்ற நிலையைத் தடுப்பதற்கு வேறு வழியின்மையின், இவைகளை இயம்ப வேண்டுவது இன்றி யமையாததாயிற்று. தற்புகழ்ச்சியும் சில இடங்களில் கைக் கொள்ளவேண்டிவரும் என்பது அறிவுடையோர் அறிந்ததே.

'பெண்கள் நாயகம் என்னில், இவருக்கே தகும்!' என் பதைக் கருதிய சிறிய திருவடி, தான் காகுத்தரிடஞ் சென்று விண்ணப்பிக்க வேண்டுவது யாது என அன்னையாரைக் கேட் டனன். பிராட்டியார் மாருதியை நோக்கி, "புருஷரில் உத்த மனே, யான் வீர வில்லைத் தாங்கிய இரவி குல திலகரின் பெருந்தன்மைக்கேற்ற மனைவி அல்லேன் எனினும், என் மாட்டு அவருக்குச் சிறிதும் கருணையில்லையெனினும், தம் வீரத்தன்மைக்குக் குற்றம் நேரா வண்ணம் நடந்துகொள்ளு மாறு நீ அவரைப் பிரார்த்திப்பாயாக. அவர் என்னை மணந்த அந்நாளில், 'உன்னையன்றி வேறு எந்த மாதையும் மனத்தி னாலும் நினையேன்,' என்று சொல்லிய உறுதி மொழியை அவருக்கு நினைப்பூட்டுவாய். யான் கொண்ட தவம் இன்னும் ஒரு மாதத்தில் முடிவடைகின்றது. அதற்குள் காகுத்தர் இவண் வந்து என்னை மீட்காவிடில், யான் உயிர் துறப்பது உண்மை. ஆதலின, மாதம ஒன்று முடிந்தவுடன் கங்கைக் கரையில் அடியாளுக்குச் செய்ய வேண்டிய ஈமக் கிரியை

களைச் செய்துவிடும்படி நீ அப்பெருமானாரிடம் கூறு. அங்ஙனம் யான் இப்பிறவியில் அவரை அடையாமலே இறப்பினும், மறுபடியும் இவ்வுலகிற்றோன்றி அவர் மனைவியாகும் பாக்கியத்தைப் பெறும் மாசற்ற ஒரு வரத்தையேனும் எனக்கு ஈயுமாறு நான் அவரை வணங்கி வேண்டினேன் என்பதைத் தெரிவி. இராம பிரானார் கட்டளையால் என்னைக் காவல் புரிந்த இளவலே இப்போது என்னை மீட்கவும் கடமைப்பட்டிருக்கின்றார் என இலக்குமணரிடம் விண்ணப்பி. யான் மரணமடையும்போது என் மாமிமாரையும், என் தாய் தந்தையரையும் தொழுதேனென அவர்களுக்குச் செப்பு. ஸ்ரீராமபிரானார் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அரச யானையின்மேல் ஊர்வலம் வந்து மகுடம் புனையும் பெருமிதத்தைக் கண்டு ஆநந்திக்கப் புண்ணியம் பெறாத அடியாள் பல பண்ணியும் பயனென்னை? அன்றியும், விசுவாசமுள்ள நகரத்தாரும், அன்புடைத் தாய்மாரும், உரிய தம்பியார் பரதரும் அடைந்துள்ள துன்பத்தைத் தீர்த்தற் பொருட்டு அயோத்திக்கு விரைந்து எழுவதன்றி, என் ஒருத்திக்காக அவர் இவண் எழுந்தருளுவாரென யான் நினைத்தற்கில்லை. ஆதலால், என் அருமைத் தலைவருக்குக் காட்டில் யாதொரு துன்பமும் நேராதவாறு பாதுகாத்து, அவரை அயோத்திக்குக் கொண்டுபோய் மகுடம் புனைவிக்குமாறு யான் சொல்லியதாகச் சுக்கிரீவனிடம் நீ இயம்புவாய்,'' என விளம்பினர்.

அன்னையாரின் இவ்வார்த்தைகள், அனுமானுக்கு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் ஒருங்கே விளைவித்தன. "இராம பிரானாரின் உண்மைத் தத்துவத்தை உடனிருந்து உணர்ந்த இப்பெருமாட்டியாரும் இங்ஙனம் ஐயுறுகின்றனரே! இவரைப் பிரிந்ததனால் காகுத்தர் கொண்டுள்ள துக்

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE.

கத்தை யாம் விரித்துக் கூறியும், இவருக்கு நம்பிக்கை பிறந்திலதே! இதற்கு இவர் தனிமையும், அரக்கர்கள் கொடுமையும், இரகுநந்தனரின் காலத் தாழ்வுமே காரணமாகும். இவரைக் குற்றம் கூறுவதில் பயனின்று. இவர் தமியராய் இருந்து படுந் துன்பம் இங்ஙனம் நினைக்கச் செய்கின்றது," எனக் கருதி, அனுமான் பிராட்டியாரை வணங்கிப் பல உறுதி வார்த்தைகள் பன்னினன்.

அவன் கம்பீரச் சொற்கள், பிராட்டியாருக்கு மகிழ்வை ஊட்டின. அவர் அனுமானை நோக்கி, "ஒப்பற்ற வீரனே, நீ இக்கொடிய அரக்கர்களால் நேரும் துன்பங்களை வெல்லக் கடவை; ஒன்றையும் நோக்காது காகுத்தரிடம் கடுகிச் செல்வாயாக; இன்னும் யான் அதிகம் கூறி உன் செல்கையைத் தாழ்த்த விரும்பேன்," எனப் பகர்ந்தனர்; பின்பு தம் முன்றானையில் முடிந்து வைத்திருந்த சூளாமணியை எடுத்தனர். அது தன் ஒளியினால் மண்ணையும் விண்ணையும் பிரகாசிக்கச் செய்தது. அனுமான் கண்கள் கூசின; அங்குச் சூழ்ந்திருந்த இருள் மறைந்தது; எங்கும் ஒளி கூர்ந்தது; 'இராவணனுக்கு அஞ்சி ஒளித்திருந்த ஆதித்தன் இலங்கையில் நுழைந்துவிட்டனனோ!' என அரக்கர் அயிர்த்தனர்; தங்கள் துணையோடு கூடி இன்பமனுபவியாமல் துன்புற்றிருந்த சக்கரவாளப் பட்சிகள் மகிழ்ந்தன; தாமரைகள் விகசித்தன; குமுதம் கூம்பிற்று; சூரியகாந்தக் கற்கள் தீயுமிழ்ந்தன; இது யாதாயிருக்குமென மாருதி மயங்கினன். பின் இராமபிரானாரின் திருவடி போன்று சிவந்திருந்த அச்சூடாமணியைப் பிராட்டியார் அனுமானிடம் தந்து, 'பலநாட்களாக யான் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கும் இது, என் தலைவருக்கு ஒரு சிறந்த அடையாளமாகும். இதை அவரிடம் ஈவாயாக,' எனப் பணித்

தனர். சிறிய திருவடி அதை மிக்க வினயத்துடன் பெற்றுத் தன் ஆடையில் மறைத்து வைத்துக்கொண்டான். அவன் பிராட்டியாரை மும்முறை வலம் வந்து வணங்கி, அவரிடம் ஆசி பெற்று, அவணிருந்து நீங்கினன்.

பின்னர் அனுமான் அசோக வனத்தில் ஜானகியார் வீற்றிருந்த மரம் தவிர மற்ற எல்லாவற்றையும் அழித்தான். இதையறிந்த இராவணனால் அனுப்பப்பட்ட கிங்கரர், சம்புமாலி, பஞ்ச சேனபதிகள், அட்ச குமாரன் யாவரும் அனுமான் வன்மைக்கு எதிர் நில்லாமல் உயிர் துறந்தனர். இந்திரஜித்துக்கும் அனுமானுக்கும் போர் நிகழ்ந்தது. மாருதிக்கு இராவணனைக்கண்டு பேசவேண்டுமென்னும் அவாமிருந்தது. ஆதலின், இந்திரஜித்து விட்ட பிரம்மாஸ்திரத்தால் தான் கட்டுண்டு அரக்கன் இருக்கையை அடைந்தான். இருவருக்கும் சில வாதங்கள் நடந்தன. இராவணன் கட்டளையினால் மாருதியின் வாலில் தீ வைக்கப்பட்டது. இச்செய்தி பிராட்டியாருக்கு எட்டியவுடன் அவர் உடல் வியர்த்தது. அவர் பெருமூச்சு விட்டனர்; விம்மினர்; நெஞ்சு புழுங்கினர்; கவலையினால் மாழ்கினர்; சிறிது தெளிந்து தீக்கடவுளைத் தியானித்து, "சுடர் தேவதையே, உன்னை வணங்குகிறேன். அறநெறியில் நிற்கும் அனுமானைக் கொடியவர்களாகிய அரக்கர்கள் வருத்துதல் உனக்குச் சம்மதமோ? நீ கண்கண்ட தெய்வமன்றோ? யான் கற்பினின்றும் சிறிதும் வழுவாதது உண்மையாயின், நீ அவனைச் சுடுதல் ஒழிவாயாக," என ஆணையிட்டுக் கூறினர். உடனே உலகிலுள்ள ஞாயிறு முதலிய வெப்பப் பொருள்கள் யாவும் குளிர்ந்தன! அனுமான் வாலிற் பற்றிய அங்கியும் அவனுக்குச் சூட்டைத் தந்திலது. இதை உணர்ந்த அனுமான் பெரிதும் உவந்தனன்.

மாருதியின் வாலில் மூட்டப்பட்ட தீயினால், இலங்கையில் பாதியும், குடிகளில் பலரும், மிருகங்களில் பெரும்பாகமும் எரிக்கப்பட்டன. பின்பு அனுமான் தன் வாலைக் கடலில் தோய்த்து அணைத்துக்கொண்டு, பிராட்டியாரிடஞ் சென்று, விடை பெற்று, இலங்கையை விட்டு நீங்கினான். மாருதிக்கு நேர்ந்த துன்பத்திற்காகப் பெரிதும் வருந்திக்கொண்டிருந்த பிராட்டியாரின் மனமும் ஆறுதலடைந்தது.

வைதேகியாரிடம் விடை பெற்றுச் சென்ற அனுமான், அங்கதன் முதலியவர்களைக் கலந்து களித்தான். இவ்வாநந்த விஷயத்தை, ஸ்ரீராமபிரானாருக்கும், சுக்கிரீவனுக்கும் அனுமானே சென்று தெரிவிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. தென்திசைச் சென்றோர் திரும்பாததைக் குறித்துக் காகுத்தர் மிக வருந்தினர்; ஆனால், சுக்கிரீவனால் தேற்றப் பட்டனர்.

அங்ஙனம் பிராட்டியாரின் பெருமையைப் புகல ஸ்ரீராம பிரானாரிடஞ் சென்ற அனுமான், காகுத்தரின் திருவடிகளை வணங்கினான் இல்லை. அவன் முகம் தென் திசையை நோக்கிற்று; அவன் கைகள் தலைமேல் கூம்பின. தென் திசை நோக்கியே பூமியில் விழுந்து அவன் நமஸ்கரித்தான். இக் குறிப்புக்களினால் ஸ்ரீராம பிரானார், 'ஜானகி உயிர் பிழைத்திருக்கின்றாள். இவன் அவளைப் பார்த்திருக்க வேண்டும். அவள் கற்புக்கணியாய் இருக்கின்றாள்,' எனத் தீர்மானித்தார். அவர் நெஞ்சம் ஆநந்தக் கடலில் ஆழ்ந்தது.

இந்நிலையில் அனுமான் வைதேகியாரின் நிலையைச் செப்பப் புகுந்தனன்: "தேவர்க்கு நாயகரே, கற்பிற்கணியாகிய ஜானகியாரைக் கடல் சூழ்ந்த இலங்கையில் யான் கண்டேன். அவர் உயிருடனிருக்கின்றனரா என்ற ஐயத்தை

இனி நீர் ஒழித்துவிடுக. யான் வணங்குவதற்குத் தக்க தெய்வமாகிய ஜானகியார், வீரராகிய உமக்கு மனைவியார் என்பதற்கு ஏற்றவர்; சத்தியத்திற்றவறாத தசரதரின் மருகியார் எனப் புகழும் பொருத்தமுடையவர் ; ஞானியாராகிய ஜனகரின் புதல்வியார் என்பதற்கு அவரே தக்கவர். தங்கத்திற்குத் தங்கத்தையே அன்றி, வேறெதையேனும் ஒப்புப் படுத்தலாகுமோ? அதைப் போன்றே அவருக்கு அவரே ஒப்பாவர். அவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட உமக்கு நேரானவர் வேறொருவர் உளரோ! அவரைக் காணும் புண்ணியத்தைப் பெற்ற யானன்றோ பெருந்தவன்! அவ்வன்னையாரால் உம் குலமும், ஜனகரின் குலமும் பெருமை பெற்றன ; தேவர் குலம் வாழ்ந்தது ; அரக்கர் குலம் அழிவைத் தேடிக்கொண்டது. கொடிய அரக்கர் வாழும் அவ்விலங்கையில் கேவலம் பிராட்டியாரின் உருவமோ, யான் பார்த்தது! இல்லை இல்லை! உயர்குடிப் பிறப்பாகிய பெருந்தன்மையும், சிறந்த பொறுமையும், திடமான கற்பும் நடனம் புரியவன்றோ யான் அங்குக் கண்ணுற்றேன்! அவர் கண்ணிலும் கருத்திலும் நீரே பொருந்தியுள்ளீர். கடலினிடையிலுள்ள இலங்கையின் ஒரு புறத்திலுள்ள கற்பகச்சோலையில் ஒரு மரத்தின்கீழ் இளவல் செய்த பர்ணசாலையில் அவர் வீற்றிருக்கின்றனர். தவம் தவஞ் செய்தே அவரை அடைந்திருக்கவேண்டும். அவர் கற்பின் உறுதியினாலேயே நாமகள், உமாதேவி, திருமகள் முதலிய தெய்வ மகளிர் சிறப்படைந்தனர் எனக் கூறுதல் குற்றமாகாது," எனச் செப்பி, மற்றும் பிராட்டியாரின் நிலைமை முழுதும் தெரிவித்து, ஜானகியாரால் கொடுக்கப்பட்ட சூடாமணியையு மீந்தான்.

# 16. வைதேகியாரின் மீட்சி

அதைக் கண்ணுற்ற காகுத்தர் பெரிதும் மகிழ்ந்தார். ஸ்ரீராமபிரானுர் அநேக வெள்ளக் குரக்குச் சேனைகளுடன் பன்னிரண்டு நாட்களில் தென்கடலை யடைந்தார். இராவணன் செய்கையை வெறுத்த விபீஷணர் ஸ்ரீராம பிரானுரைச் சரணமடைந்தார்.

யாவரும் இலங்கையை அடைந்ததும், இருதிறத்தாருக்கும் போர் தொடங்கியது. இராக்கதர் பலர் மாய்ந்தனர். இந்திரஜித்து மாயையால் விட்ட பிரம்மாஸ்திரம் ஸ்ரீராம பிரானுர் இளவல் முதலியோரைப் பிணித்துவிட்டது. அரக்கர்கள் பிராட்டியாரைக் களத்திற்குக் கொடுவந்து, இந்தத் துக்கக் காட்சியை அவருக்குக் காட்டினுர்கள்.

போர்க் களத்திற்குக் கொண்டுவரப்பட்ட அன்னையார், காகுத்தர் முதலியோர் அங்கு விழுந்து கிடப்பதைக் கண்டனர். இஃது உண்மையோவென அவர் மனம் மருண்டது. கண்களை நன்ருகத் துடைத்துக்கொண்டு பின்னும் பார்த்தனர். அவைகள் தம் கணவர் முதலியோர் உடலங்களாகவே காணப்பட்டன. அவர்கள் இறந்தார்களென்றே அவர் தீர்மானித்தார். உடனே விடமுண்டவர் போன்று, அவர் உயிர்ப்பும் உடலும் ஓய்ந்தன ; நெருப்பிலிட்ட தளிர் போன்று அவர் வாடினர்; கொழுக்கொம்பற்ற கொடியொப்ப இங்கும் அங்கும் அலைந்தனர் ; வெயிலிலிட்ட கிருமியெனத் துடித்தனர் ; அடுப்பிலேற்றிய நீரெனக் கொதித்தனர் ; அவர் நெஞ்சமும் கண்களும் சுழன்றன ; அவர் கைகள் மார்பிலறைந்துகொண்டன ; அவர் தம் தலையைத் தரையில் மோதினுர் ; பூமியில் விழுந்து புரண்டார் ; வாய் பலவற்றைச் செப்பிப் புலம்பிற்று. 'அந்தோ ! இதற்கோ பெண் பிறந்தேன் !' என அவர் முகத்திலறைந்துகொண்டார். மேகம்

போன்ற அவரது கூந்தல் மண்ணிற் புரண்டது. "இஃது உலகமோ! யான் யார்! ஏன் இங்கு வந்தேன்! இங்குக் கிடப்பவர் என் நாயகரா! இவர் இளவலா! ஐயோ! இஃது உண்மைதானு! யான் கனவு காண்கின்றேனு! இங்ஙனம் நிகழுமா! ஒருகாலும் இல்லை. என் கொடிய விதியே, நீ என்னேடு விளையாடுகின்றனையோ! என் உயிரைக் கொண்டேகா நமனே, யான் மிகக் கொடியாளெனக் கருதி இங்கு என்னை வீசிவிட்டு என் நாயகரை மட்டும் கொண்டு சென்றனையோ! இஃது உனக்கு நீதியோ! - என் கருணுகரரே, நீர் பாவியாகிய என்மீது காதல் கொண்டதன் பயன் இதுவோ! மறையுணர்ந்த மரகதமே, உம் ஆவிக்கொரு கெடுதி வரவோ மிதிலை வந்து என் பாவிக் கை பிடித்தீர்! இதைக் கேட்ட தாய்மாரும் இளையோரும் உயிர் வாழ்வரோ! கைகேயியாரின் உண்மைக் கருத்து ஈதோ! களிற்றேறே, நீர் தடுக்கக் காடு தொடர்ந்ததும், இளவல் தடுக்க மான் வேண்டியதும், உம்மைச் செருக்களத்தில் விழச் செய்வதற்குத்தானே! சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட இளவலே, 'தமயன் முன் நீ முடி,' என உம் தாயார் புகன்ற மொழியை நீர் கடைப் பிடித்தீரோ! ஐயோ! என் செய்வேன்! யாரிடஞ் சொல்வேன்!" என அவர் பலவாறு தம்மைத் தாம் உணராமல் புலம்பினர். இக் கொடிய துயரத்தைக் கண்ட தெய்வப் பெண்டிர் யாவரும் வாய் விட்டுக் கதறினர்.

இங்ஙனம் புலம்பிக்கொண்டே காகுத்தர் திருமேனியின்மேல் விழச் சென்ற பிராட்டியாரை, உத்தமக் குணம் வாய்ந்த திரிசடை தடுத்து, "இவைகள் யாவும் உண்மையல்ல; வெறும் மாயம்," என அவர் செவியிற் சொல்லித்தேற்றினர். அரக்கர் தேரைச் செலுத்தி, ஜானகியாரை அசோக

வனத்திற்குக் கொண்டுபோய் விட்டனர். பின்னர் அனுமானால் கொண்டுவரப்பட்ட சஞ்சீவி மலையின் காற்றினால் யாவரும் உணர்வு பெற்றெழுந்தனர். ஸ்ரீராம பிரானார் முதலியோரை ஏமாறச் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்தைக் கொண்ட இந்திரஜித்து, மாயா சீதையைச் செய்து போர்க்களத்தில் கொடுவந்து வெட்டி வீழ்த்தினன். அச்சம்பவம் காகுத்தர், இளவல், வானரர் முதலிய யாவருக்கும் ஆற்றொணாத் துயரத்தை விளைவித்தது. அது பொய்யென விபீஷணரால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அப்பெரும்போரில் இராவணன் முதலிய அரக்கர் யாவரும் மாண்டனர். விபீஷணருக்கு மகுடஞ் சூட்டப்பட்டது. தேவர்கள் வாழ்த்தொலி அங்கு நிரம்பியது.

இராவணன் இறந்த செய்தி அனுமானால் சீதையார்க்கு உணர்த்தப்பட்டது. வைதேகியாருக்குண்டான ஆநந்தம் அளவிடும் பான்மையதன்று. அவர் முகத் தாமரை மலர்ந்தது. அவர் குமுத வாய் புன்முறுவல் புரிந்தது. தம் நாயகரை மாய மானிடம் போக்கியதிலிருந்து அவரை விடாது தொடர்ந்த துயரத்திற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. அவ்வின்பச் செய்தியைக் கொணர்ந்த அனுமானுக்குக் கூறும் உபசார வார்த்தைகள் இன்னவெனத் தெரியாமல் அவர் தியங்கினர். அளவு கடந்த ஆநந்தம் அவர் நெஞ்சையடைத்தது. அவர் ஒன்றும் பேச முடியாது தடுக்கப்பட்டனர். அந்நிலைமையைக் கண்ட அனுமான், "அன்னையீர், உம் மௌனத்திற்குக் காரணம் யாது ? மகிழ்வின் மிகுதியோ ? அன்றி யான் பொய்த்தூதென்ற ஐயமோ ?" என வினவினான்.

வைதேகியார், "குணத்திற் சிறந்த குலக்கொழுந்தே, இன்பம் என் நெஞ்சை இறுகப்பிணித்தது. முன், 'உம் சிறையை

நீக்குவன்,' என்ற வாக்கின்படியே இப்போது முடித்த உன் பெருமைக்கு என்ன ஈடு கொடுப்பது என்னும் நினைவு என் பேச்சைத் தடுத்தது. என் தலையினாலே தொழும் தகுதி உடையவன் நீயே ஆவாய். உனக்குக் கொடுப்பதற்கேற்ற பொருள் மூன்று உலகங்களிலுமில்லை. நீ விரும்பிய ஒன்றைக் கேட்பின், அதை யான் அளிக்க முயலுவேன்,'' என்றனர்.

அனுமான், ''மயிற் சாயலைப் போன்ற அழகு வாய்ந்த அன்னையீர், உம்மைக் காகுத்தரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதைக்காட்டினும் யான் பெற வேண்டுவது வேறொன்று உண்டோ? ஆயினும், நீர் கருணையுடன் கேட்பதனால், இங்குள்ள அரக்கிகளில் உம்மைப் போற்றி வந்த தெய்வத் தன்மை வாய்ந்த திரிசடை தவிர மற்றவர்கள் யாவரையும் யான் வதைக்க எண்ணுகிறேன். உம்மை விழுங்குவோமென்றும், குத்துவோமென்றும் பலபடப் பேசிய வாய்களை என் கூரிய நகங்களாற் பிளக்க வேண்டும்,'' என்றனன்.

சீதையார், ''அறிவிற் சிறந்த அனுமானே, எதைநினைத்து எதைக் கூறினை! நமக்குத் தீங்கிழைத்தவர்களுக்கு நாமும் கொடுமை செய்ய வேண்டுமென எந்த நூலிற் கூறப்பட்டுள்ளது! ஒறுத்தாரைப் பொறுத்தலன்றோ பெருந்தகைமை! இவ்வேழைப் பெண்டிர் நமக்குச் சரியான பகைவரா! அன்றியும், இவர்கள் தங்கள் தலைவன் இராவணன் கட்டளையின்படி செய்தலல்லால், இவர்களாக நமக்குச் செய்த குற்றம் யாது? செய் தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தால் இருநிதியம் எய்தவருமோ? என் வினையை யான் நோவதல்லால், பிறரை நோவதன் பயன் யாது? ஊழிற் பெரிதுளதோ? அதை வெல்ல யாரால் கூடும்? சென்றதை நினைத்தல் அறிவற்றவர்

தொழிலன்றோ? இவ்வரக்கரை ஒரு தீங்கும் செய்ய மாட்டேன் என எனக்கு நீ வரந்தரல் வேண்டும்,'' எனக் கூறினார். எம்பெருமானாரின் தேவியாரது அருட்டிறமே திறம் என அனுமான் ஆச்சரியத்துடன் நின்றான்.

நம் வைதேகியாரின் பெருந்தகைமையை என்னென்று இயம்புவது! ஆற்றொணாக் குற்றமிழைத்தோரைப் பொறுப்பதன்றோ பொறுமை! ஈதன்றோ ஒருவருக்குப் பொன்றுமளவும் புகழைத் தருவது! அன்னையாரின் தெய்வக் குணங்கள் பலவற்றில் இதுவும் ஒன்றாகும். நற்குணங்கள் பல நிறைந்த பெரியோரைத் தெய்வ அமிசம் எனக் கூறின் வருங் குற்றம் யாது? ஆய்ந்த அறிவும், மிடுக்கும், ஒன்னலர் மாட்டு மிக்க கொடுமையும், பிடித்ததைச் சாதிக்கும் முரட்டுத்தனமும் உடைய அனுமானை அடக்கித் தம் வசப்படுத்தும் இனிய வன்மை நம் பிராட்டியாரைப் போன்ற பெண் இரத்தினங்களுக்கன்றி வேறு ஆடவருக்குண்டாமோ? ஆதலின், தீயோரையும் நல்வழிப்படுத்தும் பண்பு பெண் மக்களுக்கே உரித்து எனத் தெளிந்தாம்.

அவ்வமயம் விபீஷணர் பிராட்டியாரிடம் போந்து, "காகுத்தர் உம்மைக் காண விழைகின்றனர். தேவர்களும் அவணுள்ளார்கள். நீர் இத்துக்கக் குறியுடன் வருதல் நன்மை அன்று. உம்மைச் சிறிது நலன் படுத்திக்கொண்டு வருதல் தகுதி,'' எனத் தாழ்மையுடன் புகன்றனர்.

அன்னையார் அதை மறுத்தனர். ஆனால், அது ஸ்ரீராம பிரானார் கட்டளையென விபீஷணர் கூற, அதற்கு ஒரு விதமாக வைதேகியார் சம்மதிக்கநேர்ந்தது. தேவமாதர் அன்னையாரை மிக்க அழகு பெற அணி செய்தனர்; அழகிய விமான மொன்றில் பிராட்டியாரைக் கொடுபோயினர். கையில்

வில்லேந்திய நீல மேகம் போன்று நின்ற காகுத்தனைக்கண்டதும், பிராட்டியார் மனம் பூரித்தது. கற்பிற்கிருப்பிடமான ஜானகியாரை இரவி குல திலகரும் கண்ணுற்றனர். ஜானகியார் ஆர்வத்துடன் வந்து இராம பிரானுர் திருவடிகளில் விழுந்து இறைஞ்சினுர். அத்தெய்வக் கற்பினுரைக் காகுத்தரின் கருணை பூண்ட கண்கள் வருத்தக் குறியுடன் நோக்கின. அன்னையாரின் அலங்காரம் அவர் மனத்தை வாட்டியது. 'மற்றையோர் இவள் உண்மையை எங்ஙனம் அறிவர்!' என உன்னினர். ' இவள் சத்திய விரதத்தை யான் நன்கு அறிவேன். ஆனுல், அதை உலகம் உணருமோ ! இவள் அவணிருந்த கோலத்தோடு இவண் வருவதற்கென்ன ! அக்கோலத்தை யாவரும் காண வேண்டுவது இன்றியமையாத தன்றோ ! இவள் உடுத்த ஓராடையுடனும் அழுக்குப் படிந்த உடலுடனும், கண்ணீர் காலும் கபோலத்துடனும், ஒளி குறைந்த முகத்துடனும் இருந்த தன்மையை யாவர் உணர்வர்! இவள் மற்றப் பெண்களுக்கு நீதிகற்பிக்கவேண்டாவோ! சொற்களைக்காட்டிலும் செய்கையன்றோ தலை சிறந்தது ! அறிவிற் சிறந்த இவள் இவ்வாறு தவறிவிட்டனளே ! இத்துணை நாட்களும் இவள் கொண்ட மனத் திட்பமும் தவமும் என்ன பயனைப் பயந்தன ! தன் நுட்ப மதியால் யோசிப்பாளென்றன்றோ நினைத்தேன் ! பல கற்றும் உலகத்தோடொத்து ஒழுகக் கல்லார் அறிவிலாரன்றோ ! இனி என் செய்வது! சென்றதை நினைத்துக் காரியமென்னை ! இதற்குப் பரிகாரம் தேட வேண்டியவன் யானே; இவள் உண்மை நிறையை உலகிற்குத் தெரிவித்தல் என் கடன்,'' எனத் தம் மனத்தில் ஓர் உறுதி எண்ணத்தைப் பதித்துப் பிறரறிவதன் பொருட்டுப் பிராட்டியாரைச் சிறிது கடிந்து கூறலானுர் : " உன்னைக்


THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE

காணுங்கால், என் மனம் பெரிதும் துன்புறுகிறது. நீ இப்போதிருக்கும் நிலையில், நீ துக்கத்திலாழ்ந்தவளென எவராலேனும் இயம்பலாகுமா? நன்கு உண்டு உறங்கிக் காலங் கழித்தவள் போன்றும், ஒழுக்கம் உயிரினும் சிறந்ததென்பதை மறந்தவள் போன்றும் காண்கின்றனையே! பெருமையும், கற்புத்திண்மையும், உயர் ஒழுக்கமும், தெளிவும், சிறப்பும் வாய்ந்த நீ இங்ஙனம் தவறியதற்குக் காரணம் அறியேன்! நற்குலப் பெண்டிர் ஐம்புலன்களையும் அடக்கியாளும் தவத்தினரைக்காட்டிலும் சிறந்தவர் என்பதை உன்னால் உலகமறியும் எனக் கருதிய என் கருத்து வீணாயிற்றே! இது மற்றைய நற்குல மங்கையருக்கும் சிறிது குறைவுபாடேயாகும். வசையளிக்கும் இல்லாளைப் பெற்றவனுக்குப் பகைவர் முன் ஆண் சிங்கத்தைப்போன்ற பீடு நடையுண்டோ? இத்தகைய உன்னை மீட்க யான் கடல் கடந்து வந்ததும், இராக்கதரை அழித்ததும், பயனற்ற செயலென்றன்றோ உலகம் நினைக்கும்? யான் அதிகம் கூறியும் பயனென்னை!" எனக் கூறி, வாளாவிருந்தார்.

அவ்வசையம்புகள் பிராட்டியார் நெஞ்சை மாத்திரம் அன்றி, அவணிருந்த யாவர் நெஞ்சையும் துளைத்துப் பிளந்தன. காகுத்தரின் உட்கருத்தை ஒருவரும் ஓர்ந்திலர்; அவர் உண்மையாகவே இக்கொடிய வார்த்தைகளை இயம்புகின்றார் எனக் கருதினர்.

அந்தோ! அவ்வமயம் ஜானகியாரின் மன நிலையை யாரால் அளந்தறிய முடியும்! தம் தலைவர் பிறர் பொருட்டுத் தம்மை இங்ஙனம் சோதிக்கின்றார் என்பதை அவர் ஒருவாறு உணரினும், தம் பழுதற்ற ஒழுக்கத்தைப் பலரறியச் செய்வது தம் கடமையன்றோ? தம் நாயகரோ, தம் மாட்டுக்

கெழுமிய அன்பு வாய்ந்தவர்; தம் மனத் திட்பத்தையும், ஒழுக்க நெறியையும், அறிவின் தெளிவையும் நன்குணர்ந்தவர்; தம்மோடு பல ஆண்டுகள் பழகிய முறையில் அவர் தம்மிடம் ஐயங் கொள்ள இடமில்லை. அன்றியும், அவர் ஒருவர் மாட்டு வீண் பழி சுமத்துந் தகைமையுடையவருமல்லர். என் செய்வார் பாவம்! இச்சொற்கள் புண்ணிற் புளிப் பெய்தது போன்று அவரைத் துன்புறுத்தின. பெருமூச்சு விட்டனர். பாலை நிலத்திற் சென்ற மானொன்று நீர் வேட்கையினால் உயிர் பிரியுந் தருணம், அழகிய தடாகத்தைக் கண்டும் அதை அடைய முடியாது வருந்தல் போலானார். அன்னையார், "என் உயிரளிக்க வந்த மாருதி என் நிலையை உம்மிடம் வந்து கூறவில்லையோ! அறிவிற் சிறந்த அவன் உறுதி மொழியினும் வேறு சாட்சியம் வேண்டுமோ! உத்தமரே, யான் அவணிருந்த நிலையிலேயே வாராமையின், யான் இத்தனை நாளும் இழைத்த தவமும், கொண்ட கற்பும், பட்ட துன்பமும் பகல் விளக்கெனப் பயனற்றன. இஃது அடியாளின் அறியாமையேயாகும். யான் இனி இதற்கேற்ற தண்டனையை அனுபவிக்க வேண்டுவதே. இப்போது உயிர் நீத்தலைக்காட்டிலும் எனக்கு உயர்ந்தது வேறொன்றுமில்லை. வேதன் விதித்த விதி இதுவாயின், என் செயலாம்!" எனச் செப்பிச் சொல்லொணா அருந்துயரில் ஆழ்ந்தனர். இனித் தாமதிப்பதில் பயனின்று என உணர்ந்த அன்னையார் தீ மூட்டும்படி இளவலை இறைஞ்சினர். இலக்குமணன் மனம் பதைத்தது. அவன் கண்களில் நீர் கான்றது; தன் உயிர் பிறரால் பறிக்கப்பட்டவன் போன்று பெரிதும் மனம் உளைந்த அவன், வேறு வழியின்மையின், அங்ஙனமே செய்தான்.

தாமரையை வென்ற பாதங்களையுடைய ஜானகியார் தீனருகிற் சென்றனர். வேதங்களும், தேவர்களும், அக்

கினியும் வருந்தின. சிலத்திற்கிருப்பிடமாகும் நம் அன்னையார், தம் கணவரை வணங்கினர். பின், "தீச்செல்வனே, மனத்தினாலேனும், வாக்கினாலேனும், சரீரத்தினாலேனும் சிறிது குற்றமுண்டாயிருப்பினும், உடனே என்னைச் சுட்டெரிப்பாயாக," எனக்கூறி, எரிகின்ற அங்நெருப்பில், தாமரைத் தடாகத்தில் விழுவோர் போன்று பாய்ந்தனர். தீயைத் தீ எரிக்குமோ? விறகால் எரிக்கப்பட்ட தீயை நீரால் அணைக்கலாம்; பிராட்டியார் கற்புத் தீயை எதனால் ஆற்ற முடியும்? வலியாரை மெலியார் வெல்லுவரோ? பெண்களின் மனத்திட்பத் தீயை அணைக்கக் கேவலத் தீயினாலாகுமோ? ஆகவே வைதேகியாரின் கற்புத் தீயானது, பற்றியெரிந்துகொண்டிருந்த நெருப்பைத் தீய்த்தது. அக்கினியின் உடல் பற்றத் தொடங்கிற்று. அவன் தன் செங்கரத்தில் பிராட்டியாரை ஏந்திக்கொண்டு வெளித் தோன்றினான். அவன் முகம் ஒளிர்ந்தது. ஜானகியார் அணிந்திருந்த மாலையில் தேன்சொட்டிற்று. மொய்த்த வண்டுகள் பண் பாடின. கூந்தலிலணிந்த மலர் தண்ணீரில் தோய்த்தெடுத்தது போன்று குளிர்ந்திருந்தது. இக்காட்சி யாவர் மனத்திற்கும் வியப்பை உண்டாக்கிற்று. அனைவருந் துயரொழிந்தனர். அருந்ததி முதலிய பெண்டிர் களித்தாடினர்.

வெளித் தோன்றி நின்ற அக்கினிக் கடவுள், ஸ்ரீராமபிரானை நோக்கி, "இக்கற்புத்தீயினால் என் வலிகுறைந்தது. இக்காரியம் உமக்கு என்மீதுள்ள கோபத்தின் பரிகாரமே என நினைக்கிறேன். இனி இவரைப் பற்றி நீர் சிறிதும் ஐயங் கொள்ளுதல் கூடாது," என்றான். காகுத்தர் அக்கினியை நோக்கி, "நீ யார்? எரியிலிருந்து தோன்றி இவளைச் சுடாது போற்றுகின்றனையே!" என வினவினார்.